விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 04 சனிக்கிழமை (17.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 089

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்

100 வீத சாதாரண போட்லான்ட்

சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பிரபாகரன் உயிருடன் பிடிபடவில்லை;

# அவரது சடலத்தையே இராணுவம் மீட்டது





## இராணுவத் தளபதி விளக்கமளிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இராணுவத்தினரின் தாக்குதல்களின்போது கொல்லப்பட்ட நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டார். இதுதவிர அவர் படையினரால் உயிரோடு கைது செய்யப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டே கொல்லப்பட்டார் என்று சனல் 4 இன் புதிய வீடியோ காட்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் பொய்யானது. பிரபாகரன் கொல்லப்பட்டதான வீடியோ காட்சிகள் இராணுவத்திடம் உள்ளன. அதனை வெகுவிரைவில் உலகுக்கு வெளிப்படுத்துவோம் என்று இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.


முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேசத்தில் மீளக்குடியேறிய பொதுமக்களுக்காக இராணுவத்தினரால் வழங்கப்படும் உதவித் திட்டங்கள் குறித்து மேற்பார்வை செய்வதற்காக இராணுவத் தளபதி நேற்று வெள்ளிக்கிழமை விஜயம் செய்தார். துணுக்காய் பிரதேசத்தில் அமைந்துள்ள 69ஆவது காலாற்படை முகாமில் இராணு (24ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் நேற்றிரவு யாழ்.வந்தார்

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க. தலைவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, தேசிய அமைப்பாளர் தயா கமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயலத் ஜயவர்த்தன, டி.எம்.சுவாமிநாதன் ஆகியோரும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினரை ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் யாழ்.ரில்கோ விருந்தினர் (24ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ரில்கோ விடுதியில் வரவேற்பளிக்கப்பட்டபோது....

### நெடுந்தீவில் மாணவி கொலை

## சந்தேக நபருக்கு விளக்கமறியல் நீடிப்பு

நெடுந்தீவில் பாடசாலை மாணவியொருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட நபரை இம்மாதம் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

கந்தசாமி ஜெகதீஸ்வரன் எனும் இச் சந்தேகநபர் நேற்யை தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது இவர் சார்பாக சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகி இருக்கவில்லை.

பாலியல் வல்லுறவுக்குப் பின் கொலை செய்யப்பட்ட மாணவியின் பெற்றோர் தமது வாய்மூல வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் பதிவு செய்தனர். (24ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்திற்கு வெளிநாட்டு உதவிகளை இலங்கை ஒருபோதும் பெறவில்லை!

## ஜனாதிபதி நேற்று தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின் போது இலங்கை ஒருபோதும் வெளிநாட்டு ஆலோசனைகளை நாடவோ, வெளிநாட்டுத் துருப்புக்களை ஈடுபடுத்தவோ இல்லையென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் கூறியுள்ளார்.

எனவே மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வெளிநாட்டு ஆலோசனைகள் அவசியமில்லை எனவும் அவர் கூறினார்.

எனவே மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் புனரமைப்பு மற்றும் நல்லிணக்க செய்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கும், வெளிநாட்டுத் தலையீடுகளோ அல்லது அவர்களின் அறிவுறுத்தல்களோ இந்நாட்டுக்கு அவசியமில்லை என அவர் கூறினார்.

எமது வீரம் மிக்க படையினரால் மாத்திரம் உள்நாட்டில் வகுக்கப்பட்ட இராணுவ தந்திரோபாயங்களின்படி இந்த யுத்தத்தில் போரிட்டு வென்றனர். அவர்கள் எமது தளபதிகளால் நெறிப்படுத்தப்பட்டனர்.

தனது சொந்தக் கொள்கைகள் மற்றும் செயற்றிட்டங்களால் நாட்டை முன்னேற்றுவதற்கான ஆற்றலையும் வலிமையையும் அறிவையும் இலங்கை கொண்டுள்ளது.

இந்நாட்டை எவ்வாறு நடத்த வேண்டும்? எமது பிரச்சினைகளை எப்படித் தீர்த்துக் கொள்ள வேண்டும் (24ஆம் பக்கம் பார்க்க)

## லண்டன் முன்னாள் மேயர் தமிழர்களுடன் சந்திப்பு

(லண்டன்)

லண்டனின் முன்னாள் மேயரும், லண்டன் மேயர் தேர்தலில் தொழிற் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடுபவருமான கென் லிவிங்ஸ்டன் தமிழ் மக்களைச் சந்திக்கவுள்ளார்.

தொழிற் கட்சிக்கான தமிழர் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இச் சந்திப்பு சிவிக் சென்ரர், ஸ்ரேசன் றோட், ஹாரோ எனும் முகவரியில் இன்று காலை 10.30 மணியில் இருந்து மதியம் 1.30 மணிவரை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் பிரித்தானியா வாழ் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் (24ஆம் பக்கம் பார்க்க)

## வட பிராந்திய போக்குவரத்து சபையின் திடீர் பணிப் பகிஷ்கரிப்பால் பயணிகள் நேற்று திண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களினால் நேற்றுத் திடீரென மேற்கொள்ளப்பட்ட பணிப் பகிஷ்கரிப்பால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களினால் நாடளாவிய ரீதியில் பணிப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு ஆதரவாக வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.


எதுவித முன்னறிவித்தல்களும் இன்றி மேற்கொள்ளப்பட்ட இந்தப் பணிப் பகிஷ்கரிப்பால் பயணிகள் பெரும் அவலங்களை எதிர் கொண்டனர்.

நேற்றுக் காலை வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவைகள் இடம்பெற்றன.

எனினும் திடீரென போக்குவரத்துக்கள் எவையும் இடம் (24ஆம் பக்கம் பார்க்க)

# சனல் 4 வெளியிட்ட வீடியோ போலியானது

## பாதுகாப்பு செயலர் விபரிப்பு



சனல் 4 தொலைக்காட்சி நிறுவனத்தினால் இலங்கையின் கொலைக்களங்கள் பாகம் 2 தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள் என்ற பெயருடன் வெளியிடப்பட்ட காணொளி போலியானது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளாா.

இந்தக் காணொளியானது இலங்கை அரசிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் திட்டமிட்ட முறையிலேயே வெளியிடப்பட்டுள்ளது.

இதனுடைய போலித் தன்மையினை நிரூபிக்கும் நோக்கில் பாதுகாப்பு அமைச்சு சில ஆவணப்படங்கள் மற்றும் புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

# இந்தோனேஷிய விமான பயணி நீர்கொழும்பில் மரணம்

(நீர்கொழும்பு)

சவூதி அரேபியாவிலிருந்து இந்தோனேஷியாவுக்குச் சென்று கொண்டிருந்த விமானத்தில் இருந்த பெண்ணொருவர் திடீர் சுகவீனத்திற்குள்ளாகி நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

இந்தோனேஷியாவைச் சேர்ந்த, 60 வயதான சல்மா பேடன் ஜுரி என்பவரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சவூதி அரேபியன் எயார் லைன்ஸுக்கு சொந்தமான விமானம் ஒன்று றியாத் நகரில் இருந்து, இந்தோனேஷியாவின் ஜகார்த்தா நகருக்கு சென்று கொண்டிருந்தபோது அதில் பயணம் செய்த சல்மா சுகவீனமுற்றார். அதையடுத்து அவ் விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

அதன்பின் அப்பெண் நீர்கொழும்பு வைத்திய சாலைக்கு அம்புலன்ஸில் அழைத்துச் செல்லப்பட்ட போது அவர் உயிரிழந்தார்.

அவரின் சடலம் நீர்கொழும்பு வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விமான நிலைய பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். இம் மரணம் குறித்து இந்தோனேஷிய தூதரகத்திற்கும் அப் பெண்ணின் குடும்பத்தினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# பற்சிகிச்சை நிலைய உரிமையாளருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

அனுமதி இன்றி இயங்கிய பற்சிகிச்சை நிலைய உரிமையாளர்கள் 10 பேருக்கு பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அனுமதி இன்றி இயங்கி வந்த 10 பற்சிகிச்சை நிலையங்களிலிருந்து மருத்துவ உபகரணங்கள் நேற்று முன்தினம் பறிமுதல் செய்யப்பட்டதோடு அதன் உரிமையாளர்களும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

யாழ்.நீதவான் நீதிமன்ற உத்தரவின் பேரில் இந்த பற் சிகிச்சை நிலையங்களில் நேற்று முன்தினம் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பறிமுதல் செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களை நீதிமன்றில் பொலிஸார் ஒப்படைத்ததோடு உரிமையாளர்களையும் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தினர்.

குறித்தவழக்கைவிசாரித்தநீதவான்மாகணேசராஜா தலா 30 ஆயிரம் ரூபாய் ஆள்பிணையில் செல்ல பற்சிகிச்சை நிலைய உரிமையாளர்களுக்கு அனுமதி வழங்கினார். (எ-6)

# முதலீட்டாளர் செயலமர்வு இன்று யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

பங்குச்சந்தை முதலீடுகள் தொடர்பில், முதலீட்டாளர்கள் சிறந்த தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான தனிப்பட்ட திறனை வ்ளர்த்துக் கொள்ள உதவும் முதலீட்டாளர் செயலமர்வு இன்றுமுதல் சனிக்கிழமைகள் தோறும் முறையே 17-ம், 24-ம், 31-ம் மற்றும் ஏப்ரல் 07-ம் திகதிகளில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கேட்போர் கூடத்தில் (RDHS Office-யாழ்.போதனா வைத்தியசாலை எதிர்) இன்று காலை 9.30 மணி முதல் மதியம் 12 வரை நடைபெறும்.

இச்செயலமர்வில், முதலீட்டுப்பண்புகளும் அதன் அடிப்படைகளும், நிதிக்கூற்றுக்களின் அறிமுகம் மற்றும் பகுப்பாய்வு, முதலீட்டுத் தெரிவுகள் -பங்குகள் மற்றும் முதலீட்டினை ஆரம்பித்தல் ஆகிய விடயப் பரப்புகளில் விளக்கங்கள் அளிக்கப்படும்.

பங்குபற்ற விரும்புவோர் முன்பதிவுகளை 021 222 1455 என்ற தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ளலாம் என கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ். கிளையின் முகாமையாளர் மு.திலீபன் அறிவித்துள்ளார்.

# இந்., அமெரிக்க உறவை துண்டித்தால் இலங்கையர்கள் நிம்மதியாக வாழலாம்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவினதும், அமெரிக்காவினதும் உறவுகளைத் துண்டித்தால் மட்டுமே இலங்கையர்கள் நிம்மதியாக வாழமுடியும் எனவும், உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்து வரலாற்று ரீதியில் பெரும் முட்டாள்தனத்தை அரசாங்கம் செய்துள்ளதாகவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இதனால் நாடு சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் தண்டனை அனுபவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள இவ்இயக்கம், இதற்கு மண்டியிடுவதா? அல்லது எதிர்த்து போராடுவதா? என்ற தீர்மானமே தற்போது இலங்கையின் முன் உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், படைத்தரப்பினரையும் தூக்கு மேடைக்கு கொண்டு சென்றுவிடும்.

எனவே அதனைத் தடுத்து நிறுத்த அனைத்து இன மக்களும் ஓரணியில் செயற்பட வேண்டும் என அவ் இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது. கொழும்பில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே தேசியவாத அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் தொடர்ந்தும் செயற்படுகின்றன. உள்நாட்டிலும் ஐக்கிய தேசிய கட்சியும், ஜே.வி.பியும் நாட்டிற்கு எதிரான வகையிலேயே செயற்படுகின்றன.

எவ்வாறாயினும் முகத்துடன் கோபித்துக் கொண்டு மூக்கை வெட்டிக்கொள்ள முடியாது. அரசாங்கம் தேசிய பிரச்சினைகளில் பொறுப்பற்ற வகையிலேயே செயற்படுகின்றது.

அமைச்சர் விமல் வீரவன்ச, ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராக உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுக்கையில் அமைச்சர்களே கேலி செய்தனர். இதன் பின் விளைவுகளை தான் இன்று சந்திக்கின்றோம். எவ்வாறாயினும் தற்போது நாட்டிற்கு எதிரே உள்ள சவாலை புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணை நிறைவேற்றப்பட்டால், அது ஆபத்தானதாகவே அமையும். அதே போன்று நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றவோ விசேட கண்காணிப்பு குழுவுக்கு அனுமதி வழங்கவோ கூடாது எனவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# மின்சாரத்தடை

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டி இருப்பதால் வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை, 21 ஆம் திகதி புதன்கிழமை, 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்துமாலை 6.00மணிவரைசுரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவப்பீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்திவரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 22 ஆம் திகதி வியாழக்கிழமை, 24 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, தட்டார்தெரு, ஓட்டுமடம், ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம், புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கச்சேரி, அரியாலைப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட மின்தடை பற்றிய அறிவித்தலுக்கு மேலதிகமாக உயர்அழுத்த மின்விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்ய வேண்டி இருப்பதால்,

நாளை ஞாயிற்றுக்கிழமை, காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவப்பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதிநீங்கலாக யாழ்மாநகரசபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி ஆகிய இடங்களிலும் மின்தடை அமுல்படுத்தப்படும் என கூறப்பட்டுள்ளது. (எ)

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

சேவை முகவர்
காணிகள், வீடு விற்பனைக்கு
யாழ். கச்சேரி A9 5, பலாலி வீதி 3 1/2, மணல்தறை லேன், நுணாவில் தென்னந்தோட்டம் 21 பரப்பு.
V. சுந்தரம்
0774819801 (C-6100)

செல்லா சினிமா-யாழ்ப்பாணம்



பல தடைகளைத் தாண்டி
17.03.2012 முதல்
10.30, 02.30, 06.30, 09.30, ஆக்ஷன் கிங்
அர்ஜுன், ரிச்சா, கபாலி நடித்த
மாசி DTS
(C-6099)

YAALH ENGLISH ACADEMY
வழங்கும்
பிரயோகமுறை ஆங்கிலக் கற்கைநெறி
'ENGLISH IN ACTION'
"கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க."
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்/ தொடர்பு : 077 3212 711
(7680)

## நினைவில் என்றும்



மண்ணில் 11 07 1922

விண்ணில் 29 03 2011

### அமரர் சரவணமுத்து செல்லத்துரை

ஆண்டொன்று உருண்டோடிப் போனாலும்
இமைப்பொழுதும் நீங்காது
எம் உணர்வுகளுடன் கலந்திட்ட
உங்கள் நினைவுகள்!
என்றும் உங்கள் சிந்தனைகளை
செயலாக்கி வாழ்ந்து நிற்போம்!
உங்கள் ஆத்மா சாந்தி பெறுக.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
1ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி.
72/50, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி.
(7713)

# இன்று ஒரு தகவல்

## சொர்க்கம் என்ன விலை?

ஓர் ஊரிலே ஒருவர் இருந்தார். அவர் அடிக்கடி, "தனக்கு எல்லாம் முடியும்" என்று சொல்வார்.

"எதனாலே அப்படிச் சொல்கிறீர்?" என்று கேட்டால், என்னிடம் பணம் இருக்கிறது... அதனாலே அப்படிச் சொல்கிறேன்! என்பார்.

"பணம் இருந்தால் எல்லாம் முடியுமா?"

" எல்லாம் முடியும்... முடியாது என்ற வார்த்தையே என் அகராதியிலே இல்லை...! பணம் இருந்தால் சொர்க்கத்தையே விலைக்கு வாங்கலாம்!"

இது அவருடைய திடமான நம்பிக்கை. அந்த நம்பிக்கை நடைமுறைக்குச் சாத்தியமாகவே தோன்றியது.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்பது பழமொழி.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையும்? என்பது அவனுடைய அனுபவமொழி. எப்படி என்று கேட்டால் அதற்கு ஒரு செயல் விளக்கமே செய்துகாட்டுவான்.

எங்கேயாவது ஒரு அலுவலக வாசலுக்கு அழைத்துக்கொண்டு போய், காவலாளியிடம் ஐந்து ரூபாயை எடுத்துக் கொடுப்பான். அதை அவன் வாங்கிக்கொண்டு, "உள்ளே போங்க சேர்" என்று கதவைத் திறந்து விடுவான்.

உடனே இவன் மறுபடியும் ஐம்பது ரூபாயை எடுத்து அவனிடம் கொடுத்து "இதையும் வைத்துக்கொள்!" என்பார்.

அவன் ஐம்பது ரூபாவைப் பார்த்ததும் முதுகு பூராகவும் வளைந்து பணிவாக 'வணக்கம்' என்று கூறி உள்ளே அனுப்புவான்.

"ஐந்து ரூபாவில் வளையாத இவன் உடம்பு ஐம்பது ரூபாவில் வளைந்தது பார்த்தாயா? அதனால்தான் சொல்கிறேன்... ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையும்!"

இப்படியாக வாழ்ந்து கொண்டிருந்தவன்... ஒருநாள் திடீரென்று இறந்து போனான். சொர்க்க வாசலில் போய் நின்றான். அங்கே ஒரு காவலாளி நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்து அலட்சியமாக, "நான் ஒரு பெரிய மனிதன் வந்திருக்கிறேன்... கதவைத் திறந்துவிடு...!" என்றான். காவலாளி தயங்கினான்.

"நுழைவுச் சீட்டு இருக்கிறதா?" என்றான்.

"நுழைவுச்சீட்டா... அது எதற்கு... இதை வைத்துக்கொள்... இதை விட அது என்ன பெரியதா?"

இப்படிக் கூறிவிட்டு, தன் சட்டைப் பையில் கையை விட்டு வழக்கம் போல், ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான்.

"எதற்கு இது?"

" என்ன இப்படி கேட்கிறாய்!" உனக்குத்தான் இது... வைத்துக் கொள்... ஏதாவது வாங்கிச் சாப்பிடு! இப்போது... கதவைத் திறந்துவிடு!"

காவலாளி சிரித்தான். "இதெல்லாம் உங்கள் ஊர் வழக்கம்... பூலோக நடைமுறை... இலஞ்சம் கொடுப்பது... காரியம் சாதிக்கிறது... இதுவெல்லாம் இங்கே நடைமுறைக்குச் சாத்தியமாகாத விடயம்!"

"எவ்வளவு கொடுத்தாலும் நீங்கள் உள்ளே நுழைய முடியாது...!"

"அப்படியென்றால், நான் எப்படித்தான் உள்ளே போவது?"

"அனுமதிச்சீட்டு வேண்டும்... அல்லது அதற்கான தகுதி வேண்டும்... அது உங்களிடம் இருக்கிறதா?"

"என்னப்பா சொல்கிறாய்?"

"சொர்க்கத்தில் நுழைவதற்கு தகுதி பெறக்கூடியளவிற்கு என்ன நன்மை செய்திருக்கிறாய்?"

இவன் யோசித்துப் பார்த்தான்.

நீண்டநேரம் யோசித்துவிட்டு, அவனுக்கு மெல்ல ஞாபகம் வந்தது.

"ஒரு தடவை...ஓர் ஏழைச் சிறுவனுக்கு 50 ரூபாய் தருமம் செய்தேன். இன்னொரு தடவை ஒரு வயதான அம்மாவுக்கு 25 ரூபா காசு கொடுத்தேன்!"

இதைக் காவலாளியிடம் கூறினான். இதைக் கேட்டதும் காவலாளி யோசித்து விட்டு! "சிறிது நேரம் இங்கேயே இரு... உள்ளே போய் உத்தரவு கேட்டுவிட்டு வருகிறேன்" என்றான்.

உள்ளே ஓடினான். சிறிதுநேரம் சென்ற பின் திரும்பி வந்தான்.

"எப்படி?" என்று ஆர்வமாகக் கேட்டான்.

"நீங்கள் தருமம் செய்த 75 ரூபாய் பணத்தையும் உன்னிடம் கொடுத்து உங்களை நரகத்திற்கு அனுப்பி வைக்கச் சொல்லி விட்டார்!" உனது பணத்தை வைத்துக்கொள் என்று கூறி பணத்தை நீட்டினான்.

அந்தக் காசைக் கண்டதும் இவன் வாசலில் மயங்கி விழுந்தான்.

இன்றைய கால பக்தர்கள் சிறிது யோசித்துப் பார்க்க வேண்டும். பணம் கொடுத்து பகவானிடம் காரியம் சாதிக்க நினைப்பதற்கு பெயர் பக்தி அல்ல.

சொர்க்க வாசலில் காவலாளி கேட்டானே அனுமதிச்சீட்டு. அது என்ன தெரியுமா?

அந்த அனுமதிச் சீட்டின் பெயர் புண்ணியம்! அதாவது நாங்கள் செய்து வருகிற நல்ல காரி

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# புலமைப்பரிசில் வேலைத்திட்டம்; இளையோருக்கு நேர்முகத்தேர்வு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வெளிநாட்டு புலமைப்பரிசில் வேலைத்திட்டத்திற்கு யாழ்.மாவட்ட இளைஞர், யுவதிகளை தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி காலை 10 மணிக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிப்போர் க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் சித்தியடைந்தவராகவும், 19 வயதிற்கு கீழ்ப்பட்டவராகவும், இளைஞர் கழகம் மற்றும் நிஸ்கோ அங்கத்துவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

அத்துடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வேலைத் திட்டங்களில் பங்கு கொண்டமையினை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தகுதியானவர்கள் குறித்த தினம் சுய விபரக்கோவையுடன் சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட தேசிய சேவைகள் மன்ற உதவி இயக்குனர் அறிவித்துள்ளார்.

(அ-7)

# விண்ணப்பம் கோரல்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக கல்விப்பீடத்தினால் நடாத்தப்படும் கல்விமாணி பட்டக்கற்கைநெறிக்கான (B.Ed) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞான பிரிவில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் பிறவுண் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

(அ-2)

# கமக்கார அமைப்புககளின் புதிய நிர்வாகத் தெரிவு

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள கமக்கார அமைப்புக்களின் புதிய நிர்வாக தெரிவுகள் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பாக தெரியவருவது, கடந்த புதன்கிழமை ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.அமிர்தலிங்கத்தின் தலைமையின் கீழ் முத்தையன்கட்டு குள வலதுகரை 3ஆம் கண்டம் கமக்கார அமைப்பு பல நூற்றுக்கணக்கான விவசாயிகள் மற்றும் முத்தையன்கட்டுகுள நீர்ப்பாசன திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் முன்னிலையில் இத் தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

இதில் தலைவராக ஜெ.ஜெயபிரதாவன், செயலாளராக சி.வேதவனம், பொருளாளராக க.வரதலிங்கம் ஆகியோர் உட்பட 9 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் விவசாயிகள் மத்தியில் உரையாற்றிய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.அமிர்தலிங்கம் குறிப்பிடுகையில்,

நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு முன் சிறுபோக நெற்செய்கைக்கு உரிய உரவிநியோக பட்டியலை தயாரித்து வழங்குவதன் மூலம் உரமானியத்தின் உரங்களை வழங்க உதவ வேண்டுமென குறிப்பிட்டார்.

(அ-3-15)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 35 | 40 | 35 |
| தக்காளி | 10 | 25 | 20 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 10 | 15 | 20 |
| கரட் | 40 | 60 | 30 |
| பூசணி | 25-30 | 30 | 20 |
| புடோல் | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 25 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 70 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 80 | 50 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 70 | 60 |
| பயற்றங்காய் | 80 | 80 | 70 |
| லீக்ஸ் | 70 | 70 | 60 |
| பீற்றூட் | 20 | 15 | 20 |
| கறிமிளகாய் | 50 | 70 | 60 |
| முருங்கைக்காய் | 270 | 350 | 250 |
| போஞ்சி | 40 | 40 | 70 |
| கத்தரிதம்புள்ள | 35 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 20 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 25 |
| வெங்காயப்பூ | 30-40 | 90 | - |

# இராசி பலன்

17.03.2012
(பங்குனி 04, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.19 மணிக்கு
தசமி முன்னிரவு 7.54 மணிவரை
பூராடம் முற்பகல் 7.58 மணிவரை
இராகுகாலம் 9.19-10.49 மணிவரை
சுபநேரம் 3.19-4.49 மணிவரை

**மேடம்** இழுபறியாக இருந்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தொழில் ரீதியாக இருந்த போட்டிகளை சமாளித்து முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, மனக் குழப்பம் அகல மாயவரை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் எடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

**மிதுனம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும், உற்றார், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**கடகம்** உடல் நலம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், சுவாரஸ்யமானநாள், மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**சிங்கம்** உள்ளம் மகிழும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வியாபார விருத்தியுண்டு, புண்ணிய கருமங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் நன்மையளிக்கும், சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**துலாம்** சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சேமிப்பை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** வசதி வாய்ப்புக்கள் தேடிவரும் நாள், நண்பர்கள்மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரும், உறவினர் வருகையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், தொழிலில் அதிகம் பாடுபடுவீர்கள், தெய்வ சிந்தனை மேலோங்கும்.

**மகரம்** இடமாற்றத்தில் இனிய மாற்றம் காணவேண்டிய நாள், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் சம்பவமொன்று இடம்பெறலாம்.

**கும்பம்** பொது வாழ்வில் பாராட்டும், புகழும் கூடும், தொழில் நன்மை கருதி எடுத்த முயற்சியால் ஆதாயம் கிடைக்கும், உன்னதமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள்.

**மீனம்** வாக்குறுதியை காப்பாற்றி மகிழ்வீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்பு உங்கள் தகுதியை உயர்த்தும், மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள்.

வளவன்

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கு செல்வோர் அனுமதிக்கப்பட்ட கட்டணங்களையே செலுத்த வேண்டும்

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

ஜோர்தானின் ஆடைத்தொழிற்சாலைகளில் வேலை செய்வோருக்கு பிரச்சினையில்லை. ஆனால், பணிப்பெண்களாக செல்வோர் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். பணிப்பெண்களுக்கான சம்பளம், மருத்துவம் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றாவிடின் அங்கு பணிப்பெண்களை அனுப்புவதற்கு தடைவிதிப்போம் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இத்தாலிக்கு இனிமேல் சட்டவிரோதமாக செல்ல முயற்சிக்க தேவையில்லை. இரு நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதனால் முறையாக வேலைவாய்ப்பு தேடிச் செல்லலாம். அதேபோல வேறுநாடுகளுக்கு வேலைவாய்ப்புகளை பெற்றுச் செல்வோர் அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கட்டணங்களைத் தவிர ஒரு சதத்தையேனும் கொடுக்க வேண்டாம் என்றும் தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகளை தேடிச் செல்கையில் சவுதி அரேபியாவுக்கு செல்வோரே பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அங்கு முறையான காப்புறுதி திட்டங்கள் இல்லை. அங்கு சமூக பாதுகாப்பு வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தாலிக்கும் இலங்கைக்கும் இடையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளமையினால் அங்கு வேலைவாய்ப்பு பெற்று செல்வதற்கு சட்டவிரோதமாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதில்லை. ஒப்பந்தத்தின் பிரகாரம் முதலாவது குழு இவ்வருடத்திற்குள் அனுப்பிவைக்கப்படும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் தவறிழைத்தால் அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும். அதேபோல திறம்பட சேவையாற்றும் நிறுவனங்கள் தரப்படுத்தப்படும். அதுமட்டுமன்றி துணை முகவர்களே மோசடிகளில் ஈடுபடுகின்றனர். வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தேடிச் சென்ற பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. அந்த புலமைப்பரிசில்களை தொழில்நுட்ப கல்லூரிகளிலும் அறிமுகப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-7)

# செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஆங்கிலபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மாங்குளத்தில் உள்ள ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இச் செயலமர்வு தொடர்பாக பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் பெயர் குறிக்கப்பட்டுள்ள ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

இது தொடர்பாக பாடசாலை அதிபர்கள் கவனமெடுத்து ஆசிரியர்கள் இச் செயலமர்வில் பங்கு பற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை ஏற்படுத்தி கொடுக்குமாறு அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (அ-3-15)

# மன்னாரில் மற்றொரு பகுதி எண்ணெய் ஆய்வுக்கு

மன்னார் கடற்படுக்கையின் மேலும் ஒரு பகுதியை எண்ணெய் ஆய்வுக்குட்படுத்த இலங்கை சர்வதேச அளவில் கேள்விப் பத்திரங்களை கோரக்கூடும் என பெற்றோலிய மூலவளங்கள் அபிவிருத்தி செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் சாலிய விக்ரமசூரிய தெரிவித்தார்.

மன்னார் கடல் படுக்கையிலுள்ள பிரிக்கப்பட்ட துண்டுகளில் ஒன்றுக்காக அடுத்த மூன்று மாதத்திற்குள் கேள்விப் பத்திரங்கள் கோரப்படலாம். இம்முறை பலத்த போட்டியிருக்கும் எனவும் ஆழமான துண்டுகளில் ஆய்வு நடத்த அவசரப்படவில்லை. ஆழம் குறைந்த கரையை அண்மித்த துண்டுகளுக்காகவே இந்த கேள்விப் பத்திரங்கள் கோரப்படும் என கூறினார்.

இலங்கைகையைச் சூழ இத்தகையை 15 துண்டுகள் உள்ளன. இவற்றுள் 10 மன்னார் கடற்படுக்கையில் உள்ளன. கெயர்ன் இந்தியா நிறுவனம் மன்னார் படுக்கையில் உள்ள 3 துண்டுகளில் கிணறுகளை தோண்டி அவற்றில் இரண்டில் இயற்கைவாயு மற்றும் திரவ ஐதரோகாபன் இருப்பதற்கான சாத்தியம் உள்ளதாக கண்டறிந்துள்ளது.

இந்த எண்ணெய் ஆய்வில் பங்குகொள்ள இந்திய அரசாங்கம் பெரிதும் ஆர்வம் காட்டி வருவதாக விக்கிரம சூரிய தெரிவித்தார். (அ-7)

# அமெரிக்காவின் தீர்மானத்திற்கு எதிராக இணையத்தளம் மூலம் மனு

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவின் தீர்மானத்திற்கு எதிராக இலங்கைக்கு ஆதரவளிக்கக் கோரி 500 கையெழுத்துக்களை சேகரிப்பதற்கான மனு ஒன்று இணையத்தளங்களில் வலம் வருகிறது.

இலங்கை தொடர்பான தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டாம் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தலைவி லோரா டுபுய் லஸரே இம்மனுவில் கோரப்பட்டுள்ளார்.

சேனஜ் ஓர்க் எனும் அமெரிக்க சமூக சேவை நிறுவனமொன்றின் இணையத்தளத்தில் இலங்கைக்கான இலங்கையர்கள் எனும் பெயரில் இந்த மனு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அமெரிக்கா, இந்தியா, இத்தாலி, வியட்நாம், ஓமான், டுபாய் உட்பட பல நாடுகளிலிருந்து சுமார் 365 பேர் இதில் கையெழுத்திட்டிருந்தனர். (அ-7)


# அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்



"சௌபாக்கியத்தைத் தேடிச் செல்லும்பயணத்தில் முன்னோடியாக"
இலங்கைப் பெண்களுக்குத் தேசிய மரியாதை
தெரிவிக்கும் விழாவில்
அதி மேன்மை தங்கிய ஜனாதிபதி
**மஹிந்த ராஜபக்ஷ**
அவர்களினாலும்
இலங்கையின் முதற் பெண்மணி
**கௌரவ திருமதி சிராந்தி ராஜபக்ஷ**
அவர்களினாலும் அலரி மாளிகையில்

சர்வதேச மகளிர் தினத்தன்று கௌரவிக்கப்பட்ட 08 பெண்களில் ஒரே ஒரு தமிழ்ப் பெண்ணாகக் கௌரவிக்கப்பட்டுள்ளார் என்ற ரீதியில் எமக்கெல்லாம் பெருமை சேர்த்து, பொது நல அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதுடன்,

யாழ்ப்பாண மாவட்டத்தின்
அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளருமான
**திருமதி இமெல்டா சுகுமார்**
அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன்
அவர்களின் சேவை மேன்மேலும்
தொடரவும் வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர் : கிருபா லேணர்ஸ் உரிமையாளரும் ஊழியர்களும்

# இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டால்தான் போர்க்குற்றங்களுக்கு பொறுப்புகூற முடியும்

## முன்னாள் ஐ.நா. உதவிச்செயலர் ஹோம்ஸ் வலியுறுத்து



**இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால்தான் போர்க்காலத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதஉரிமை மீறல்கள் குறித்த விவகாரங்களில் பொறுப்புக்கூறுவது குறித்த பிரச்சினையில் முன்னேற்றம் காணமுடியும் என்று மனிதாபிமான விவகாரங்களுக்கான முன்னாள் ஐ.நா உதவிச்செயலர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.**

பிபிசிக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நடந்த மனிதஉரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக சமூகமும் ஐ.நாவும் இன்னும் அதிகமாக பணியாற்ற வேண்டும் என்று எழும் கருத்துக்கள் தொடர்பாக எழும்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், இதைவிட அதிகமாக என்ன செய்ய முடியும் என்று கூறுவது தற்போதைக்கு கடினமாக இருக்கிறது.

ஐ.நா. பொதுச் செயலர் நியமித்த வல்லுநர் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்து விட்டது. அது வெளிப்படையாக பொதுமக்கள் பாவனையில் இருக்கிறது.

இப்போது மேலதிகமாக ஏதாவது செய்ய வேண்டும் என்றால் அதற்கு இலங்கை அரசின் ஒத்துழைப்பு கிடைக்காது என்பது தான் இப்போதுள்ள பிரச்சினை. இந்த விசாரணைகள் மூலம் அனைத்துலக நாடுகள் தன்னைக் குறிவைப்பதாக இலங்கை அரசு நம்புகிறது. அவர்களை இதில் யாரும் குறிவைக்கவில்லை.

ஆனால் அவர்களின் கடந்தகால நடவடிக்கைகள் தான் இந்த விசாரணைகள் கவனம் செலுத்தும் கருப்பொருள். எனவே அவர்கள் இந்த முயற்சிகளுக்கு அதாவது ஒரு புதிய விசாரணைக்கு முழுதாக ஒத்துழைக்க மாட்டார்கள்.

எனவே நாம் இந்த அரசு மாறும் வரை பொறுத்திருக்க வேண்டும். அதன் பின்னர் வரும் புதிய அரசில் இருப்பவர்கள் இதற்கு ஒத்துழைத்தால் தான் நாம் உண்மைகளை வெளிக்கொண்டு வரலாம். ஆட்சியில் இருக்கும் அரசு ஒத்துழைக்கவில்லை என்பதற்காக அனைத்துலக சமூகம் அமைதியாக இருந்து விடவில்லை.

ஐ.நா. வல்லுநர் குழு இது தொடர்பாக தனது அறிக்கையை சமர்ப்பித்து பல தன்னார்வ குழுக்கள் அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஒரு அறிக்கை தந்திருக்கிறது. சனல் 4 தொலைக்காட்சியின் விவரணப் படம் கூட இதன் ஒரு அங்கம் தான். ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இதை ஒரு முறை ஆராய்ந்திருக்கின்றது. எனவே அனைத்துலக கவனம் இதில் இருக்கின்றது.

இங்குள்ள பிரச்சினை என்னவென்றால் இந்தப் பிரச்சினைகள் நடந்த இடத்தில் இருக்கும் அரசு ஒத்துழைக்க மறுக்கிறது. இது கவலையளிக்கும் ஒரு விடயம். ஆனால் அதுதான் தற்போதைய யதார்த்தம். ஒரு இறையாண்மை பெற்ற அரசை அந்த அரசின் விருப்பத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா. வற்புறுத்த முடியாது.

இலங்கை விவகாரத்தில் ஐ.நா. பாதுகாப்பு சபையில் கருத்தொற்றுமை இல்லை. ரஷ்யாவும் சீனாவும் இந்த விடயத்தில் பாதுகாப்புச்சபையை கூட்டுவதற்கு தயாராக இல்லை. ஐ.நா. வின் உறுப்பு நாடுகளிடையே கருத்தொற்றுமை இல்லாத நிலையில் ஐ.நா.வில் நடவடிக்கை எடுக்க முடியாது.

பொதுமக்கள் உயிர்ச்சேதங்களை தவிர்க்கும் நோக்கத்தில் இலங்கை அரசை அந்த யுத்தப்பகுதியில் கனரக போர் ஆயுதங்களை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு ஐ.நா. வற்புறுத்திக் கொண்டிருந்தது. இலங்கை அரசோ அந்தப் பகுதியில் சாதாரண பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்றே கூறிக்கொண்டிருந்தது. ஆனால் அது உண்மையல்ல.

அதேசமயம் விடுதலைப்புலிகளிடம் சாதாரண பொதுமக்களை விடுவியுங்கள் என்று ஐ.நா. கூறிக்கொண்டிருந்தது. ஏனென்றால் அதுவும் ஒரு அடிப்படையான பிரச்சினை. சாதாரண மக்களே அவர்களின் விருப்பத்துக்கு எதிராக அங்கே பிடித்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

ஐ.நா. தன்னால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து கொண்டிருந்தது. ஆனால் ஐ.நா.விடம் ஒரு அதிசயத் தீர்வு இருந்தது என்ற கருத்து உண்மையான கருத்தல்ல. ஐ.நா. தமிழ் மக்களுக்கு பெரிய அளவில் உதவியிருக்கிறது. ஐ.நா.தான் இலங்கை அரசிடம் பேசி போர் நடந்த பகுதிகளிலிருந்து வெளியேறும் மக்களுக்கு நிவாரண முகாம்களை அமைக்குமாறு வலியுறுத்தியது.

அங்கே அவர்கள் சுதந்திரமாக நடமாட முடியவில்லை என்பது போன்ற பிரச்சினைகள் இருக்கத்தான் செய்தன. அந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு சில மாதங்களில் தீர்வு காணப்பட்டது. அவர்களில் பெரும்பாலானோர் தங்கள் வீடுகளுக்கு இப்போது திரும்பி விட்டார்கள் என்று தெரிவித்துள்ளார் ஜோன் ஹோம்ஸ். (அ-2)


## பாராட்டுகின்றோம் வாழ்த்துகின்றோம்



சுபீட்சத்தை தேடிச் செல்லும் பயணத்தில் முன் விளக்காய்
இலங்கைப் பெண்களுக்கு
அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினாலும்
இலங்கையின் முதற் பெண்மணி கௌரவ திருமதி ஷிராந்தி ராஜபக்ஷ
அவர்களினாலும் சர்வதேச மகளிர் தினத்தன்று அலரிமாளிகையில்
கௌரவிக்கப்பட்ட ஒரே ஒரு தமிழ் பேசும் பெண்மணியாகத் திகழும்
யாழ்ப்பாண மாவட்டத்தின் அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளருமான **திருமதி. இமெல்டா சுகுமார்** அவர்களை பழைய
இரும்பு வியாபாரிகள் சங்கம் தமிழ்,முஸ்லீம்,சிங்கள மக்கள் சார்பாக
உளம் நிறைந்து பாராட்டி வாழ்த்துவதோடு அவர்களின் சேவை
மென்மேலும் தொடர்ந்து செல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்

**மீள் குடியேறிய பழைய இரும்பு வியாபாரிகள் சங்கம்**
**இல.349 மானிப்பாய் வீதி,ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்**

(7716)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பாசத் தாயை அகிலமும் போற்றிட
மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்
மாதர் குலத்தின் மணி மகுடமாய் என்றும் திளைத்திட

இலங்கைத் தீவின் பெண்களுக்கான தேசிய
மரியாதை எனும் விழாவில் அதி மேதகு
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ
அவர்களினாலும் இலங்கைத் தீவின் முதற்
பெண்மணி தௌரவ திருமதி ஷிராந்தி
ராஜபக்ஷ அவர்களினாலும் அலரி
மாளிகையில் வைத்து சர்வதேச மகளிர்
தினத்தில் கௌரவிக்கப்பட்ட எட்டுப்
பெண்களில் ஒரேயொரு தமிழ் பேசும்
பெண்மணியாக கௌரவிக்கப்பட்ட
யாழ்ப்பாண மாவட்டத்தின் அரசாங்க
அதிபரும், மாவட்ட செயலாளருமான
**திருமதி இமெல்டா சுகுமார்** அவர்கள்
இடப்பெயர்வுக்குள்ளாகிய மக்களின் மீள்
குடியேற்றத்திற்கு உறுதுணையாக தன்னல
மற்ற முறையில் சேவையாற்றி வரும்
சேவைக்காக கிடைத்த கௌரவ
பரிசாகவே கருதுகின்றோம்

பாசத் தாயை நாடே போற்றிடும் இவ்வேளையில் மீள்
குடியேறிய யாழ் முஸ்லிம் சமூகமும், முஹம்மதியா
ஜும்ஆ மஸ்ஜித் நிர்வாகமும் மனமார பாராட்டி வாழ்த்துவதுடன், அவர்களின் தன்னலமற்ற சேவை மென்
மேலும் தொடரவும் , நீண்ட ஆயுளுடன் வாழவும்
இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

**முஹம்மதிய ஜிம்ஆ மஸ்ஜித் (புதுப்பள்ளிவாயல்)**
**கலீபா அப்துல் காதர் வீதி (நாவலர் வீதி), யாழ்ப்பாணம்.**

(7717)

# வடமராட்சி கிழக்கில் மீள்குடியேறிய மக்களின் பிரச்சினையை தீர்ப்பது யாரோ?

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அண்மையில் மீள்குடியேறிய 3 ஆயிரத்து 524 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 820 பேர் அடிப்படை வசதிகளின்றி தொடர்ந்தும் துயரவாழ்க்கை அனுபவித்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்து 10 வருடங்களுக்கு மேல் வடமராட்சி பகுதிகளிலும் ஏனைய பிரதேசங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் வசித்து வந்ததாகவும் பின் கடந்த 2010ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நாம் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருகின்றோம் எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இம்மக்களின் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளாக போக்குவரத்து, மின்சாரம், வேலைவாய்ப்பு போன்ற பிரச்சினைகளுடன் அடிப்படைத்தேவைகளும் நிறைவு செய்யப்படாமையால் தாம் பல சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# சொந்தக் கட்டடமின்றி இயங்கிவரும் மானிப்பாய் மத்திய தபாலகம்

(நவாலி)

மானிப்பாய் பிரதான தபாலகம் சுமார் 80 ஆண்டுகளுக்கு மேலாக சொந்தக்கட்டடம் இன்றி சேவையாற்றி வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அண்மையிலும் மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலைக்கு முன்பாக இயங்கிய தபாலகம் இடமாற்றலாகி மானிப்பாய் சந்தைக்கு அருகாமையிலுள்ள தனியார் வீடொன்றில் இயங்கி வருகின்றது.

இக்கட்டடமும் கூட ஒரு வருடத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இதனால் இத்தபாலகம் பின்பும் இடமாற்றம் செய்யவேண்டிய நிலைமை ஏற்படும்.

எனவே மானிப்பாய் கிராமத்தில் இத்தபாலகத்திற்கு நிரந்தரமான கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு கல்விமான்கள், சமூக ஆர்வலர்கள், நலன்விரும்பிகள், அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் முன்வர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-26)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டத்தின் மெய் வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன், சிறப்பு விருந்தினராக வலிகாம வலயக் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி கலந்து கொள்வார். (அ)

# 13 வர்த்தகர்களுக்கு 59 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிப்பு

சட்டத்திற்கு முரணான வகையில் பொருட்களை விற்பனை செய்த 13 வர்த்தகர்ளுக்கு 59 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து யாழ்.நீதவான் தீர்ப்பளித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையினால் யாழ். நீதவான் நீதிமன்றில் மேற்படி 13 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, பொருட்களை நிர்ணயித்த விலையிலும் அதிக விலைக்கு விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்களுக்கு எதிராக் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குகளை நேற்று முன்தினம் விசாரித்த நீதவான் மா.கணேசராஜா 13 வர்த்தகர்களுக்கும் 59 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (அ-6)

## தாச்சிசுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

விநாயகர் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கிவரும் கைதடி தென்கிழக்கு விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி நடைபெற்று வருகின்றது.

இக்காலிறுதிப்போட்டியில் இன்று சனிக்கிழமை குழு 1 ஐச் சேர்ந்த குமரநகர் ஏ அணியை எதிர்த்து துர்க்கா ஏ அணியும் நாளை ஞாயிற்றுக்கிழமை அதே குழுவைச் சேர்ந்த உதயசூரியன் பி அணியை எதிர்த்து அம்பிகை ஏ அணியும் மோதவுள்ளன. (அ)




## ஆன்மீக அபிவிருத்தி வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இளைஞர் மனதிற்கு அறநெறி என்னும் ஆன்மீக அபிவிருத்தி வேலைத்திட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பலநோக்குக்கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது என யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அறிவித்துள்ளது. (அ-7)

# போதைப்பொருள் பாவனைக்கு எதிரான கற்கைநெறிச்செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

SL-FONGODA அரச சார்பற்ற நிறுவனத்தினால் ஸ்ரீலங்கா சென்ஜோன்ஸ் அம்புலன்சின் அனுசரணையுடன் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான பயற்றுவிப்பாளர் கற்கை நெறிச் செயலமர்வு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்கு வீதி, இல 61 இல் அமைந்துள்ள சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிராந்திய பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

இச்செயலமர்வில் 15 பொதுதுச்சுகாதார உத்தியோகத்தர்களும் 10 ஆசிரியர்களும் பங்குபற்றி கற்ற பின்பு இக்கல்வியை ஏனையோருக்கும் கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது என சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட ஆணையாளர் எஸ். செல்வரஞ்சன் தெரிவித்துள்ளார்.

இக்கற்கைநெறியானது இளைய தலைமுறையினரிடையே போதைப்பொருள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதனை நோக்கமாக கொண்டதாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

## இறுதிப்போட்டிக்கு தெரிவாகின

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான கபடி இறுதிப்போட்டிக்கு சாவகச்சேரி இந்து விளையாட்டு கழகமும் மீசாலை ஸ்ரீ விநாயகர் விளையாட்டுக் கழகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (அ-3-29)

## கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

மீசாலை வடக்கு நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலய பரிவாரமூர்த்தி மற்றும் தூபி கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.53 மணி தொடக்கம் காலை 9.05 மணி வரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளன.

பிரதம குரு சிவாச்சாரிய சிரோன்மணி சிவஸ்ரீ பிரபாகரக்குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். (அ-3-29)

# இடைவழியில் நோய்வாய்ப்படும் இ. போக்குவரத்து சபை பேருந்து

பருத்தித்துறை இ.போ.ச. சாலையில் இருந்து தூர இடங்களுக்குச் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் இடையிடையே பழுதடைந்து தரித்து நிற்பதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களுக்கு பயணம் செய்யும் பேருந்துகளே இவ்வாறு பழுதடைந்து நிற்பதால் பயணிகள் தூர இடங்களுக்கு உரிய நேரத்திற்கு செல்ல முடியாது சிரமப்படுவதாக விசனம் தெரிவித் துள்ளனர்.

இரவு வேளையில் காட்டு வீதிகளில் பல மணி நேரம் தரித்து நின்று சிரமத்தின் மத்தியில் பயணத்தை தொடர வேண்டிய அவல நிலை உள்ளது.

எனவே உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்து சீரான பேருந்தை ஒழுங்கு செய்து சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-10)


## சாமணந்தறை வீதி புனரமைப்பு எப்போது?

(பருத்தித்துறை)

அல்வாய் சாமணந்தறை கோவில் வீதி புனரமைப்பு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதாக அப்பகுதி மக்களும் பயணிகளும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியானது எந்தப் பிரதேச சபைக்கு உரியது என தீர்மானம் எடுக்கப்படாது இருப்பதால் வீதி புனரமைப்பு வேலை காலதாமதமாகி வருகின்றது.

எனவே உரிய தரப்பினர் இவ்வீதியை புனரமைக்க முன்வரவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-10)








அச்சுவேலி கைத்தொழில் பேட்டை தொடர்பான ஆலோசனைக்கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வி. சிவஞானம்சோதி, இந்த அமைச்சின் கீழ் இயங்கும் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை பொது முகாமையாளர் திருமதி ஜஸ்மின் மன்னப்பெரும ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# பெண்களின் எதிர்காலம் தொடர்பில் அரசின் உதவித்திட்டம் போதுமானதாக இல்லை




(யாழ்ப்பாணம்)

நடந்து முடிந்த யுத்தத்தின் வடுக்கள் பெருமளவு எமது பெண்கள் மீதே காணப்படுகின்றது. உடல், உள ரீதியாக மட்டுமன்றி பொருளாதார ரீதியாகவும் பெண்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலும் வன்னி பிரதேசத்திலேயே இந்த பாதிப்புக்கள் அதிகம். எனவே, மனிதாபிமான உதவிகளும் பெண்களுக்கான உதவித்திட்டங்களும் வன்னிப் பகுதிக்கே அதிகளவு தேவையாக உள்ளது என ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கோப்பாய் நவமங்கை நிவாசம் பெண்கள் வள மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கணனி பயிற்சி முடித்த பெண்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னியில் பெருமளவு விதவைகள் காணப்படுகின்றனர். அதிலும் யுத்த காலத்தில் தங்களது குடும்பத்தலைவர்களை இழந்த இளம் விதவைகளே அதிகம். இவர்களது நிலைமைகள் கவலை அளிப்பதாகவே உள்ளது.

மேலும் நடந்து கொண்டிருக்கின்ற குடித்தொகை மதிப்பீடும் இது தொடர்பில் அதிர்ச்சிகரமான செய்திகளையே தர காத்திருக்கின்றன. இவ்வாறான பெண்களின் எதிர்காலம் தொடர்பில் அரசின் உதவித்திட்ட பொறிமுறை செயற்பாடுகள் போதுமானதாக இல்லை. இதனால்தான் அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகளை அதிகம் எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

குறிப்பாக வன்னியில் மனநலம் பாதிக்கப்பட்டுள்ள பெண்களை இயல்பு நிலைக்கு கொண்டு வந்து அவர்களை சமூக வாழ்வில் இணைத்து விடுவது தொடர்பிலும் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின், கோப்பாய் கல்வியியற்கல்லூரி பீடாதிபதி யோகராஜன், கோப்பாய் பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் பிறேமினி, நவமங்கை நிவாசம் நிலைய தாபகர் சுகர்ணலீலா நவரட்ணம், லிட்டில் எய்ட் நிறுவன இணைப்பாளர் ஜெயபாலன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (அ-7)

## பெரு விளையாட்டு முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தீவக வலய பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற பெரு விளையாட்டுக்களில் யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலய அணி பங்கு கொண்டது.

இதற்கமைய இப் பாடசாலையில் ஆண்களுக்கு இடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட பிரிவும் 17 வயதிற்குட்பட்ட பிரிவும் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. 19 வயதிற்குட்பட்ட பிரிவு 3 ஆம் இடத்தைப் பெற்றது.

பெண்களுக்கிடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதிற்குட்பட்ட பிரிவு மூன்றாவது இடத்தையும் 19 வயதிற்குட்பட்ட பிரிவு இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது.

பெண்களுக்கிடையில் இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதிற்குட்பட்ட பிரிவு 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளதாக மேற்படி பாடசாலை அதிபர் வி.ஓங்காரலிங்கம் அறிவித்துள்ளார். (அ-2)

## மின்சார வேலியில் அகப்பட்டு இரு யானைகள் மரணம்

(குருநாகல்)

குருநாகல் மாவட்டத்தின் கல்கமுவ நாத்தேனேறிய பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில் மின்சாரம் தாக்கி இரண்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

யானைகளின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பிகளில் அகப்பட்டு இந்த யானைகள் உயிரிழந்துள்ளதாக கல்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த யானைகளின் சடலங்கள் கல்கமுவ வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகளின் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-7)

## நீதிமன்றத்தால் அபராதம்

(கிளிநொச்சி)

176 போத்தல் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 10 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

*******

12 போத்தல் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 35 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 4 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

*******

170 போத்தல் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 8 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

*******

18 போத்தல் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 60 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 6 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-3)


சிவமயம்

விவாஹ சுப முகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான கர வருஷ பங்குனி மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை (17.03.2012) காலை 10.50 மணி தொடக்கம் 11.40 மணிவரையுள்ள ரிஷப லக்கினமும் உத்தராட நட்சத்திரமும் சுக்கிர காலவோரையும் கூடிய சுப முகூர்த்தத்தில்

காசிப ஹோத்ரம்
புன்னாலைக்கட்டுவன், ஈவினை
கற்பகவிநாயகர் தேவஸ்தானத்தைச்
சேர்ந்த பிரம்மஸ்ரீ தியாகராஜ ஐயர்
தம்பதிகளின்
பௌத்ரனும்
இந்தியா–பாலக்காடு
பிரம்மஸ்ரீ ப.இராமையர் தம்பதிகளின்
தௌகித்தரனும்
எமது துவிதிய புத்திரனுமாகிய
சிரஞ்ஜீவி கமலேஸ்வர சர்மா
அவர்களுக்கு



கௌசிக ஹோத்ரம்
அரியாலை, நீர்நொச்சித்தாழ்வு
ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தைச்
சேர்ந்த பிரம்மஸ்ரீ இ.சுப்பிரமணியக்
குருக்கள் தம்பதிகளின் பௌத்திரியும்
கொழும்புத்துறை
பிரம்மஸ்ரீ கணேச சிவசண்முக சர்மா
தம்பதிகளின் தௌகித்ரியும்
எமது சீமந்த புத்திரியுமாகிய
சௌபாக்கியவதி ஸ்ரீவித்யா
அவர்களை

கன்னிகாதான.திருமாங்கல்யதாரண.பாணிக்கிரஹணம் செய்ய எல்லாம் வல்ல ஆயக்கடவை சித்திவிநாயகர். ஈவினை கற்பகவிநாயகர்.கீரிமலை நகுலேஸ்வரப் பெருமான் .வண்ணை வைத்தீஸ்வரப் பெருமான். அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் திருவருள் துணைகொண்டு பெரியோர் நிச்சயித்துள்ளனர்.

அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மண்டபம்

விஸ்வநாதர் மயிலு மீனாட்சி மண்டபம்,நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வளாகம், அரியாலை

ஸமாவர்த்தனம்

அன்றைய தினம் காலை 6.00 மணிமுதல் மணமகன் இல்லத்தில் நடைபெறும்

வதுவர கிருஹ பிரவேசமும் வரவேற்புபசாரமும்

அன்றைய தினம் (17.03.2012) மாலை 3.30 மணிமுதல் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்

பிரம்மஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள்
-விஜயலக்ஷ்மி தம்பதிகள்
ஈவினை ,புன்னாலைக்கட்டுவன்
தொலைபேசி:0777110146



பிரம்ம ஸ்ரீ சு.முரளிதரக் குருக்கள்
-அனுராதா தம்பதிகள்
77/2,ஏ.வி.றோட்,கொழும்புத்துறை.
தொலைபேசி:0779582338

(இருவீட்டார் தனிப்பட்ட அழைப்பு)

(7719)

# வடபகுதி வேளாண்மையும் அது சார்ந்த முதலீடுகளும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

18- VII




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வேளாண்மை அபிவிருத்தியின் சிறகுகளை அகல விரித்து அதனுள் எம்மினிய உறவுகளை உள்ளீர்த்து அனைவருக்குமான விடியலை எதிர்பார்த்திருக்கும் இவ் வேளையில் இதற்குள் முதலீடுகளை செய்வதற்கு முனையும் அனைவருக்கும் முதலீடுகளின் விபரம் பற்றி தெரிந்ததை எடுத்துக்கூற முனைந்துள்ளேன்.

வளங்களுள் எமக்கென அமைந்தது பனை வளம். ஆனாலும் இதற்குரிய மரியாதையை வடபிராந்திய மரம் எனும் பெயரை புங்கமரம் தட்டிச்சென்றுவிட்டது. கற்பக தருவென மரம் முழுக்க பயனாகும் இம்மரத்தை இன்னும் அரவணைத்து, வளர்த்தெடுத்து அதனது பயனை குறிப்பாக அத்தன் தரத்தை உயர்த்தி உலக சந்தைக்கு கொண்டு செல்ல வழிசெய்தல் வேண்டும். இங்கே இதுபற்றி விபரமாகப் பார்ப்போம்.



பனையிலிருந்து பெறப்படும் முக்கியமான பொருட்களை வரிசைப்படுத்தினால் பனம் பழத்திலிருந்து பனங்களி, பனாட்டு, பனம் விதையை குறுக்கறுத்து பூரான், விதை முளைத்து கிழங்கு, அது வளர்ந்து வடலி, இன்னும் பூக்கும்போது பூந்துணரிலிருந்து பதநீர், நொதித்து கள்ளு, வடிசாலையில் வடித்தெடுத்து சாராயம் இப்படி நீண்டுபோகும் இதன் பயன்களில் கைப்பணிப் பொருட்கள் மற்றும் நார் உற்பத்தி, மரத்தேவைகள் இவற்றுடன் எரிப்பதற்கு விறகாக ஆகின்றது.

இங்கே அனைத்திலும் புத்தாக்கத்தை தொழில்நுட்ப வசதியுடன் களமிறக்கி இம்மரத்தினது வளத்தை சிறப்பிப்பதுடன் தேவைக்கேற்ப மெருகூட்டி விற்பனைப் பொருளாக்கி விடலாம்.

குறிப்பாக பனையோலை, குருத்து, நார் இவற்றிலிருந்து செய்யப்படும் பொருட்களைத் தரமுயர்த்தி விதம்விதமான பொருட்களை சுற்றுலாப்பயணிகளை கவரச் செய்தல் வேண்டும்.

இந்த முயற்சியில் எமது இளஞ் சமூகத்தை சுயதொழில் வாய்ப்புக்கான தொழில்நுட்ப பயிற்சியுடன் கணனி தொழில்நுட்பத்தையும் உட்புகுத்தி கவர்ந்திழுக்கலாம். கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம் இன்னும் தொலைபேசி தொழில்நுட்பம் ஆகியவற்றை எமது தொழிற்றுறைக்கு ஏற்ப வடிவமைத்து, தேவைப்படின் மாற்றியமைத்து அவற்றினூடாக முதலீடுகளை முனைப்புடன் செய்ய வழிசெய்யலாம்.

இவற்றுக்கெல்லாம் பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சமாசங்களினூடாக பயிற்சிக்கான குழுக்களை தெரிவு செய்து அதனூடாக தொழில்பயிற்சிகளை வழங்க வேண்டும்.

கைப்பணிப்பொருட்களை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் ஆக்க வேண்டும்.

பனையோலை, ஈர்க்கு, நார் இவற்றைக் கொண்டு உருவாக்கும் பொருட்களில் புது யுக்தியைக் கையாண்டு அவற்றைக் கணனி மென்பொருள் கொண்டு வடிவமைக்கலாம். சித்திரமும் வடிவமைப்பும் மாணவர்களுக்கான அவர்களது ஆக்கத்திறனுக்கான களம் இது. எங்களது கல்வியின் ஆரம்பமே பனையோலை அரிச்சுவடியிலிருந்து ஆரம்பமானது.

இன்னும் சுதேச மருத்துவத் தகவல்களை ஏட்டில் எழுதி பல ஆண்டுகாலம் அழியாது பாதுகாக்கப்பட்டதையும் நாம் நினைவிற்கொள்வது நல்லது. மீண்டுமொரு யுகம் பிறந்து சூழலுக்கியைவான பனையோலையில் பல பொருட்கள் பதமாக, இதமாக வர வேண்டும். பழைமையின் பெருமையை புதுமைகொண்டு புதுப்பொலிவுடனாக்க வேண்டும். இங்கே பழைமையின் அனுபவம் முழுவதுமாகப் பகிரப்படவேண்டும்.

எங்களூரில் பனையோலையை வைத்து அதனைப் பதப்படுத்தி ஈர்க்கு கிழித்து, அடவியினை அகற்றி, ஓலையை தேவையான அளவுக்கு வார்ந்து இன்னும் அதனைப் பயன்படுத்தி பெட்டிகள், பாய், கைப்பைகள், தொப்பிகள், விதம்விதமான பொருட்கள் செய்யும் கலை, அந்த முறை அருகிவிடுமோ என அச்சப்படவேண்டியுள்ளது.

முதியவர்களுக்கு கைவந்த கலை இப்போதைய இளையவர்களுக்கு வருவதில்லை. இதை இயலாமை என்பதை விட இவற்றில் நாட்டம் காட்டுவதில்லை என கூறலாம்.

இங்கே தான் நாமனைவரும் சிந்திக்க வேண்டும். பனையோலை கொண்டு தயாராகும் பொருட்களனைத்தும் சூழலுக்கியைவானது (Eco-Friendly) சூழலை மாசடைய வைக்கும் சூழலுக்குகொவ்வாத பொருட்களுக்கு மாற்றீடாக தாவர உற்பத்திகளை முன்னெடுப்பது நல்லதொரு வளமான முதலீடாகும்.

இதற்கு நிச்சயம் வரவேற்பும் ஆதாயமும் இருக்கும். ஒரு வகையில் ஆதாயத்தை நோக்கமாகக் கொண்ட முதலீடுகளுக்கு சமூக பொறுப்பும் சூழலை பாதுகாக்கும் எண்ணமும் கலந்தே இருக்க வேண்டும். முதலீட்டாளர்கள் இதனை நிச்சயமாக வரவேற்பார்கள்.

புதியவகை பெருட்களை மனித வலுவுடன் கூடிய இயந்திர தொழில்நுட்பத்தை உள்வாங்கி உருவாக்கலாம். அவற்றில் புதுமையும் இன்னும் கவர்ச்சியும் சிறந்ததான முழுமையும் (Finishing) இருக்கும்.

இது பற்றிய கல்விக்கு களமமைத்து பயிற்சிகளும் கொடுக்கப்படல் வேண்டும். சுய வேலைவாய்ப்பு தேடியலையும் இளஞ் சமுதாயத்திற்கு கௌரவமான தொழில் நிறுவனம் ஒன்றின் வேலை இங்குண்டு. வேலை தேடியலைபவராக இல்லாது அவரவர் திறமைக்கும் உள்ளார்ந்த திறனுக்கும் இன்னும் சிந்தனைக்கும் அடித்தளமிடும் இவ்வகை தொழிலுக்குள் சிறிய முதலுடன் ஆரம்பித்து வளருங்களேன்! பல வழிகள் இதிலுண்டு வளருவதுண்டு.

இவ்வாறான கைத்தொழில் முயற்சிக்கு சிறுகடனை வங்கிகள் மூலம் பெறலாம். புதிது புதிதாக தினந்தினம் முளைத்திடும் தங்குமிடங்களில் உங்கள் பரிசு பொருட்களுக்குக்கான சந்தை வுாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

இளையோரே வாருங்கள். புதுயுகம் படைக்க இங்கேயொரு வழியுண்டு. கணனி தொழில்நுட்பம் வெறுமனே காசு தராது. அதனை பயனுள்ள வழியில் மாற்றினால் அதிலும் இதுபோன்ற பனை- சார் உற்பத்தியில் கைப்பணி பரிசுப் பொருட்களை உருவாக்கினால் அது உங்களுக்கும் இந்நாட்டிற்கும் இன்னும் பனை வளத்தை பேணவும் பெருக்கிடவும் உந்து சக்தியாகிவிடும். வல்லவனுக்கு புல்லும் ஆயுதம். கைத்தொழில் புரட்சி இன்று உங்களை விருப்பியழைக்கின்றது. (வளரும்)

# படைவீரர்களுக்கு எதிரான யுத்தக்குற்ற விசாரணையை அனுமதிக்க முடியாது

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்துவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளது. படைவீரர்களுக்கு எதிரான யுத்தக் குற்றச்செயல் விசாரணைகளை அனுமதிக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது படைவீரர்களின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்துவதாக இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் உறுதியளித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்துவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளது. எனினும் படையினருக்கு நெருக்கடி ஏற்படக்கூடிய வகையிலான விசாரணைகளை எதிர்ப்பதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவளிக்கப்பட்ட அதேவேளை தீர்மானத்திற்கு எதிராக கண்டனம் வெளியிடப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த தடவை நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது நடைமுறைப்படுத்துவதாக இலங்கை உறுதியளித்தது.

சட்டம் ஒழுங்கை உரிய முறையில் இந்த அரசாங்கம் நிலைநாட்டத்தவறியுள்ளது என குறிப்பிட்ட அவர்,

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ள காரணத்தினாலே சர்வதேச சமூகம் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். (அ-7)

# ஐ.நா.பிரேரணையை ஐ.தே.க. மறைமுகமாக ஆதரிக்கின்றது

## குணதாச அமரசேகர கூறுகிறார்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கெதிரான பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி மறைமுகமான முறையில் ஆதரித்து வருவதாக தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

பிரேரணை தொடர்பில் நாட்டு மக்களுக்கு போதியளவு தெளிவு கிடையாது. அண்மையில் சில இடங்களில் போராட்டங்களை நடத்தி கோசம் எழுப்பிய போதிலும் பிரேரணையின் பாரதூரத்தன்மையை மக்கள் விளங்கிக்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஜெனீவா பிரேரணை தொடர்பில் நடந்து கொள்ளும் விதம் திருப்தியடையக்கூடிய வகையில் இல்லை. பிரேரணைக்கு ஆதரவளிப்பதாக நேரடியாக தெரிவிக்காத போதிலும் மறைமுகமாக ஐக்கிய தேசியக் கட்சி பிரேரணைக்கு ஆதரவளித்து வருகின்றது.

ஆரம்பம் முதலே போரை இல்லாதொழிக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை. பிரபாகரனுடன் நாட்டை பகிர்ந்து கொள்வதற்கே ரணில் விக்ரமசிங்க விரும்பினார்.

ஜே.வி.பி.யும் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு ஆதரவளிக்கவில்லை. சர்வதேச ரீதியில் கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதற்கு அரசாங்கமும் ஒரு வழியில் காரணம் [illegible]ாம் என குணதாச தெரிவித்துள்ளார். (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 72


சோவியத்தின் இயந்திரத்துப்பாக்கி போர்வீரர்கள்

பாசிச ஜேர்மனியத்துருப்புகளின் தாக்குதல் ஜூலை 5 ஆம் திகதி காலையில் தொடங்கியது. அரியோலுக்கு தெற்கேயும் பேல்கரத்திற்கு வடக்கேயும் இருந்த பிரதேசங்களில் மிகக் கடுமையான சண்டைகள் மூண்டன. இங்கே ஜெனரல் பூஹவின் 13-வது படைத் துருப்புகள் ஹிட்லர் துருப்புகளின் முக்கிய அடியை எதிர் கொண்டன. தாக்கும் படை வரிசையின் முன்னால் "பெர்டி னாண்டு" எனும் திடீர் தாக்குதல் பீரங்கிகளின் ஆதரவோடு டைகர் என்ற கனரக டாங்கிகள் 10-15 டாங்கிகளாகச் சேர்ந்து வந்தன. இவற்றின் பின்னால் நடுத்தர டாங்கிகள் 50-100 ஒன்று சேர்ந்து வர இவற்றோடு கவச வாகனங்களில் தரைப்படையினர் வந்தனர். சோவியத் துருப்புகள் பீரங்கிகள் மற்றும் எதிர்ப்பு ஆயுதங்களின் கடும் அக்கினிக் குழம்பாலும் வெடி குண்டுகள், வெடியாவிப் போத்தல்கள் ஆகியவற்றோடும் பாசிஸ்டுகளை எதிர்கொண்டன. சோவியத் டாங்கி வீரர்கள் கண்ணி வெடிவீரர்கள் விமானிகள் ஆகியோர் தீவிரமாகச் செற்பட்டனர். விமானிகள் முதன்முதலாக எதிரிடாங்கிகளுக்கு எதிராக உயர் சக்தியுள்ள அடுக்கடுக்கு விமானக் குண்டுகளைப் பயன்படுத்தினர்.

கூர்ஸ்க் போர்க்களத்தில் ஜேர்மன் சிப்பாய் ஒருவரின் கல்லறை



உறுதியான தற்காப்பு மற்றும் பலம் மிக்க பதிலடிகளின் பயனாய் சோவியத் துருப்புகள் பாசிச ஜேர்மனிய டாங்கிகளின் வெறித்தனமான தாக்குதலின் வேகத்தைக் குறைத்து எதிரிக்குப் பேரிழப்புக்களை ஏற்படுத்தின. மேற்கு ஜேர்மனிய வரலாற்றாசிரியர் கேய்மின் கூற்றுப்படி தாக்குதலில் ஈடுபட்டிருந்த ஜேர்மனியப்படைத் திரட்டுகள் இறுதிவரை இயன்றதனைத்தையும் செய்தாலும் ஒருசில நாட்களுக்குப் பின்னரே சந்தேகத்திற்கிடமற்று தோல்வியடையும் நிலையில் இருந்தன சண்டைகளின் ஊடே மேன்மேலும் அதிகரித்து வந்த இழப்புகளுடன் சோவியத் துருப்புகளின் ஆழ்ந்த நிலையமைப்புகளின் ஊடாக ஊர்ந்து ஜேர்மனிய யூனிட்டுகள் ஜூலை 7-ஆம் திகதியிலிருந்து தொடங்கி சோவியத் டாங்கிச் சக்திகளால் பின்னுக் குத்தள்ளப் படலாயின.

ஜூலை 9 வாக்கில் 10-12 கி.மீ. தூரம் மட்டுமே முன்னேறியிருந்த சென்டர் படைத் தொகுதியின் முக்கியத்தாக்குதல் படைத் திரட்டு மத்திய சேனையின் துருப்புகளால் தடுத்து நிறுத்தப்பட்டு சின்னாப் பின்னப்படுத்தப் பட்டது. எதிரி 42000 ஆட்களையும் 800 டாங்கிகளையும் இழந்தான். ஈடு இணையற்ற திறமையையும் பெரும் வீரத்தையும் வெளிப்படுத்திய சோவியத் போர்வீரர்கள் எதிரியின் டாங்கிப் படைகளை பின்னுக்குத் தள்ளினர். உதாரணமாக கேர்னல் ருக்கரூயெவின் 3-வது டாங்கி எதிர்ப்புப்படை பிரிகேட் 300 எதிரி டாங்கிகளை எதிர்த்து நின்றது. கேப்டன் இக்னாஷவின் ஒரு அணி மட்டும் ஒரு நாளில் 19 டாங்கிகளை ஒழித்தது.

## யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை

தெற்கு ஜேர்மனியப் படைத் தொகுதி செயற்பட்ட கூர்ஸ்கின் தெற்கேயும் கடும் சண்டைகள் மூண்டன. ஜெனரல் சிஸ்த் யாக்கோவ் ஜெனரல் ஷுமிலவின் 6-வது, 7-வது கார்டு படைகளின் துருப்புகளும் வரோனிஸ் சேனையின் ஜெனரல் கதுக்கோவின் முதல் டாங்கிப் படையின் வீரர்களும் எதிரியோடு உறுதியாகப்போர் புரிந்தனர். முதல் நாளன்றே பிரதான தாக்குதல் திசையில் சோவியத் துருப்புகளின் நிலைகளை நோக்கி 700 டாங்கிகளை விமானப்படையின் ஆதரவோடு எதிரி அனுப்பினான். ஹிட்லர் துருப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக தாக்குதலைத் தொடுத்தன. முதலாவது டாங்கிப் படையிலிருந்த பிளாட்டோனின் கமாண்டர் லெப்டினெண்ட் பென்ஸ்ராபவ் சண்டையில் சிறப்பாக இயங்கினார். இவரது டாங்கிகளிலிருந்த வீரர்கள் ஒரேநாளில் எதிரியின் மூன்று டைகர் டாங்கிகளை அழித்தனர்.

வான் பரப்பில் கடும் சண்டைகள் நடந்தன. 2-வது, 16-வது, 17-வது, வான் படைகளின் விமானிகள் வீரத்தையும் திறமையையும் வெளிப்படுத்தினர். வரலாற்றிலேயே முதல் தடவையாக ஜூலை 6 ஆம்திகதி வான் சண்டை ஒன்றில் சண்டை விமான, விமானி லெப்டினெண்ட் கரவேட்ஸ் 9 பாசிச விமானங்களைச் சுட்டு வீழ்த்தினார். இதுவரை மும்முறை சோவியத் யூனியன் வீரர் விருது பெற்ற *கேர்னல் ஜெனரல் கஜெதூப்* இங்கேதான் முதன் முதலாக எதிரி விமானத்தைச் சுட்டு வீழ்த்தினர்.

சேமப்டைகளை களத்தில் இறக்கிய பாசிஸ்டுகள் ஜூலை 11 வாக்கில் சோவியத் தற்காப்பின் ஊடே 35 கி.மீ. தூரம் பிளந்துகொண்டு புகுந்து பரோஹரவ்கா கிராமப்பகுதியை அடைந்தனர். இவர்களை நோக்கி ஸ்டெப்பி சேனையைச் சேர்ந்த 5-வது கார்டுப்படை மற்றும் 5- வது டாங்கிப்படையின் துருப்புகள் நகர்ந்தன. இவை வரோனிஷ் சேனையைச் சேர்ந்த 6-வது கார்டுப்படை மற்றும் முதலாவது டாங்கிப்படையோடு சேர்ந்து எதிரிக்கு பலத்த பதிலடி தந்தன. *இதன் விளைவாய் ப்ரோஹரவ்கா அருகே பிரமாணடமான டாங்கி சமர் நடந்தது.* இரு தரப்புகளில் இதில் 1200 டாங்கிகள் கலந்து கொண்டன. இச்சமரில் பாசிச ஜேர்மனியத் துருப்புகள் தோற்கடிக்கப்பட்டு தற்காப்பிற்குச் செல்லும்படி நிர்ப்பந்திக்கப்பட்டன.

அதே தினத்தில் மேற்கு மற்றும் பிரியான்ஸ்க் சேனைகளின் துருப்புகள் பலமிக்க எதிர்த்தாக்குதலில் இறங்கி எதிரியின் தற்காப்பை வெற்றிகரமாக பிளந்து கொண்டு ஒரு நாளில் 25கி.மீ.தூரம் முன்னேறின. கூர்ஸ்க் அரைவட்டத்தில் சோவியத் துருப்புகளின் எதிர்த்தாக்குதல் தொடங்கியது. சென்டர்படைத் தொகுதி படைத் தலைமையின் முன்னாள் இராணுவ அதிகாரி காகின் ஹோல்ட்ஸின் கூற்றுப்படி ஜூலை 12 ஆம் திகதி ஆரம்பமாகிய ருஷ்ய தாக்குதலின் சக்தி எல்லாவற்றிற்கும் மேலாக பிளந்துகொண்டு செல்லும் வன்மை

ப்ரோஹரவ்காவின் மீதான தாக்குதலை நினைவுகூறும் ஆலயம்



ஜேர்மனியர்களுக்கு கடும் அதிர்ச்சியாக இருந்தன.

ப்ரோஹரவ்காவின் அருகே முறியடிக்கப்பட்ட ஹிட்லரின் துருப் புகள் பின்வாங்கத் தொடங்கின. வரோனிஸ் சேனையின் துருப்புகளும் ஜூலை 19 இல் இருந்து ஸ்டெப்பி சேனையின் துருப்புகளும் இவற்றைத் துரத்திச் சென்றன. ஜூலை 23 வாக்கில் கூர்ஸ்க் சமரின் தொடக்கத்தில் இருந்து நிலைகளுக்கு எதிரி பின் தள்ளப்பட்டான்.

அரியோலை நோக்கி ஒன்றிணையும் திசைகளில் தாக்கிய மேற்கு பிரியான்ஸ்க் மற்றும் மத்திய சேனைகளின் துருப்புகள் பிரியானிஸ்கிற்கு கிழக்கே தற்காப்பு எல்லைகளுக்கு பின்வாங்கிச் செல்லுமாறு எதிரியைக் கட்டாயப்படுத்தின. ஆகஷ்ட் 5 ஆம்திகதி அரியோல் நகரம் விடுவிக்கப்பட்டது. ஆகஷ்ட் 18 வாக்கில் அரியோல் முகப்பு பூராவும் பாசிச ஜேர்மனியத் துருப்புகளிடமிருந்து விடுவிக்கப்பட்டது.


வடக்குப் பகுதியில், டைகர்-1 முன்னணிதாக்குதல்பிரிவு டாங்கி அணி

(தொடரும்)

## விமானப்படை வீரர் தற்கொலை

(கொழும்பு)

கொழும்பு விமானப்படை முகாமில் நேற்று முன்தினம் பிற்பகல் விமானப்படை வீரர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

அவர் தமது துப்பாக்கியைப் பயன்படுத்தி தன்னைத்தானே சுட்டுக் கொண்டுள்ளதாக விமானப்படைப் பேச்சாளர் குரூப் கெப்டன் அன்ரூ விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக விமானப் படையினரும் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-7)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (அ-7)

# இலங்கையில் இனக்கலவரம் வரும் என்ற சம்பிக்கவின் கருத்து பாரதூரமானது



(கொழும்பு)

உத்தேச ஜெனீவா தீர்மானம் தொடர்பில் இலங்கையில் 1983 ஆம் ஆண்டு நடைபெற்றதை போல ஒரு இனக்கலவரம் வரலாம் என்று தமிழ் மக்களை பயமுறுத்தும் தொனியில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் சம்பிக்க ரணவக்க கருத்து தெரிவித்து இருப்பது பாரதூரமானது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## மனோகணேசன் குற்றச்சாட்டு

சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு இராணுவ வீரர்கள் உட்படுத்தப்பட்டால் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்டதைப் போன்ற இனக் கலவரம் இடம்பெறும் என்று அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவருமான சம்பிக்க ரணவக்க விடுத்துள்ள எச்சரிக்கை தொடர்பில் கருத்து தெரிவித்த மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனீவாவில் இலங்கை தொடர்பில் கொண்டு வரப்படவுள்ளதாக கூறப்படும் தீர்மானம் இலங்கையில் நடைபெற்ற போரை பிரதான அடிப்படையாகக் கொண்டது. இந்தப் போரை நடத்துவதற்கு அன்று அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் என்பன இலங்கை அரசாங்கத்திற்கு முழுமையாக ஆதரவு அளித்தன.

இதே நாடுகள் தான் இன்று ஜெனீவாவில் அரசுக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரவும் கூடி நிற்கிறார்கள்.

சர்வதேச நண்பர்களுடன் இணைந்து நடத்திய போரிலும் அன்று பாதிப்புக்கு உள்ளானது தமிழர்கள்தான். போர் முடிந்து தமது அதே சர்வதேச நண்பர்களுடன் சண்டை போட்டுக் கொண்டு ஐ.நாவில் தீர்மா[illegible] இன்று நிறைவேறினாலும் பாதிப்புக்கு [illegible]ளாவது தமிழர்கள்தான்.

ஏற்கனவே தமிழ் மக்களின் பாதுகாப்[illegible] அரசாங்கம் அக்கறையின்றி செயற்பட்[illegible]கத்தான் குற்றச்சாட்டு இருக்கிறது. என[illegible] இந்த விடயத்தில் மேலும் நெருப்பை ஊற்[illegible] விதத்தில் பொறுப்பற்று பேசுகின்ற அ[illegible]சரை அரசாங்கம் நெறிப்படுத்த வேண்டு[illegible]

அமெரிக்க இந்திய ஐரோப்பிய அரச[illegible]கங்கள் முன்னின்று நடத்திய போர் [illegible]பில்தான் இன்று பிரச்சினையே ஏற்பட்[illegible]ளது. இதை இன்று தமிழர்களை காப்பாற்[illegible]வதற்கு கிளம்பியுள்ளதாக கூறப்படுகி[illegible] சர்வதேச சமூகம் நினைவில் வைத்துக் கொ[illegible] வேண்டும்.

அமைச்சர் சம்பிக்கவின் பொறுப்பற்ற கருத்து தொடர்பில் சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திடம் தமது அதிருப்தியை தெரிவிக்க வேண்டும். இன்னொரு கலவரம் என்ற பேச்சுக்கே இங்கு இடம் இருக்க முடியாது. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எமது மக்களின் பாதுகாப்பு தொடர்பில் நாம் விட்டுக்கொடுக்க முடியாது எனவும் தெரிவித்தார். (அ-7)

## சனல் 4 போர்க்குற்ற காணொளி ஐ.நா. சபையில் ஒளிபரப்பாகலாம்?

(கொழும்பு)

சனல் 4 தொலைக்காட்சியினால் வெளியிடப்பட்ட இலங்கையின் கொலைக்களங்கள் தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள் காணொளி ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின். அமர்வுகளில் ஒளிபரப்புச் செய்யப்படக் கூடுமென தெரிவிக்கப்படுகின்றது.


ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 19 ஆம் அமர்வுகளில் இலங்கை தொடர்பான இரண்டாம் காணொளியை ஒளிபரப்புச் செய்ய முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

அமர்வுகளுக்கு சமாந்தரமாக ஜெனீவாவில் இந்தக் காணொளியை ஒளிபரப்புச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. சனல் 4 ஊடகவியலாளர்கள் ஏற்கனவே ஜெனீவா சென்றுள்ளனர்.

நாளை மறுதினம் குறித்த காணொளி ஒளிபரப்புச் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

## ஈழத்தமிழர் வரலாற்றிலிருந்த மேரி கொல்வினின் வாழ்க்கை

### சிறீதரன் எம்.பி. உரை



(கொழும்பு)

ஈழத்தமிழர்களின் விடுதலை வரலாற்றில் மேரி கொல்வின் அம்மையார் பிரிக்க முடியாத வரலாற்றின் அடையாளமாக விளங்குகின்றார்.

அமெரிக்காவில் பிறந்து பிரித்தானியா நாட்டின் த சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியராகப் பணி புரிந்து மனித உரிமைகள் பறிக்கப்படும் நாடுகளில் அந்தமானுட விடுதலைக்காக துணிவுடன் பணியாற்றியவர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவ ட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

லண்டன் குறைடன் சென் மேரிஸ் தேவா லயத்தில் குறைடன் தமிழ் சமூக அமைப்பி னால் ஒழுங்கு செய்யப்பட்ட நன்றி செலுத் தும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற் றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்,

கடந்த 2001 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 16 ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் தாக்குதலில் தனது ஒரு கண்ணை எம்மினத் திற்காக இழந்த நிலையிலும் 2009 களில் எமது போராளிகளின் சரணடைதல் தொடர் பில் தனது பணியை ஆற்றுதல் வரை எம்மி னத்திற்காகப் போராடினார். இறுதி மூச்சில் தனது 56 ஆவது வயதில் கூட சிறிய நாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகத் தன் பேனா மூலம் போராடினார்.

அவர் தற்பொழுது எங்களிடம் இல்லை என்றாலும் அவரின் நினைவுகள் விடுதலைக் காக போராடும் மானுடம் உள்ளவரை இருக் கும் என்றார். (அ-2)


## குடிநீருக்காக போராடும் மக்கள் சேற்றுநீர் பருக வேண்டிய அவலம்

தமக்கு முறையான குடிநீர் விநியோகத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனக் கோரி மேல் கொத்மலைத் திட்ட புதிய வீடமைப்புத் திட்டத்தின் குடியிருப்பாளர்கள் கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

அந்த வகையில் ஹற்றன் தலவாக்கலை பிரதான வீதிக்கு அண்மையில் அமைத்துக் கொடுக்கப்பட்ட 138 வீடுகளைக் கொண்ட தொகுதிக்கு குடிநீர் பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

வாரத்திற்கு ஒரு தடவை நீர் வழங்கப்பட்டு வந்த நிலையில் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் 10 தொடக்கம் 15 நாட்களுக்கு ஒரு தடவை தான் நீர் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் குடியிருப்பாளர்கள் தங்களின் நாளாந்த நடவடிக்கைகளைக் கொண்டு செல்லப் பெரிதும் சிரமப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் சேற்று நீரை பருக வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். (அ-7)



மலேசிய உயர் கல்விக் கண்காட்சி நேற்று முன்தினம் யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். பலக்லைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ. பாலசுந்தரம்பிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும் வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் உரையாற்றுவதையும் கண்காட்சியை விருந்தினர்கள் உள்ளிட்டோர் பார்வையிடுவதயும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலக செய்தியாளர்)




# அம்புலி மாமா கதைகள்

## திருடனை தண்டித்த அதிசயப் பசுக்கள்



முத்து ஒரு அநாதை வாலிபன். மாடு மேய்ப்பது ஒன்று தான் அவனுக்குத் தெரிந்த தொழில். நான்கு பசுமாடுகளைத் தவிர வேறு எதுவும் அவனுக்குக் கிடையாது. தினமும் தன் கிராமத்தின் எல்லையில் இருந்த காட்டிற்குத் தன் மாடுகளை அழைத்துச் சென்ற பின் அவற்றை மேய விட்டுவிட்டு முத்து ஒரு மரத்தடியில் அமர்ந்து குழல் ஊதிக் கொண்டே பொழுது போக்குவான்.

ஒருநாள் முத்து அவ்வாறு குழல் ஊதிக் கொண்டிருக்கையில் திடீரென ஒரு புலியின் உறுமல் சத்தம் கேட்டது. தன் மாடுகளைப் புலி கொன்று விடுமே என்று. பதறிக் கொண்டே எழுந்தபோது அவன் கண்களில் ஓர் அதியக்காட்சி தென்பட்டது. புலியைக் கண்டு பயந்து போய் தலைதெறிக்க ஓடாமல் அவனுடைய நான்கு மாடுகளும் புலியைச் சூழ்ந்து கொண்டு அதைக் தன் கொம்புகளால் தாக்கின. வாழ்வில் முதன்முறையாக தன்னைப் பசுமாடுகள் தாக்குவதைக் கண்டு அதிர்ச்சியுற்ற புலி தப்பித்து ஓட முயற்சித்தது. ஆனால் மாடுகள் அதைத் தப்பிக்க விடாமல் தன் கொம்புகளால் குத்திக் கிழித்துக் கொன்றுவிட்டன.

அன்று முதல் தன் மாடுகளின் மீது முத்துவிற்குப் பெருமதிப்பு ஏற்பட்டுவிட்டது. அவற்றைப் பொக்கிஷம் போல் பத்திரமாகப் பாதுகாத்தான். அந்த ஆண்டு வானம் பொய்த்ததால் அவனுடைய மாடுகளுக்கு சரியான படி தீவனம் கிடைக்கவில்லை. தன்னுடைய மாடுகள் அரை வயிற்றுக்கு உண்டு பட்டினி கிடப்பதை காண சகிக்கவில்லை. அதனால் அந்த கிராமத்தை விட்டுத் தன் பசுக் களுடன் வெகுதூரம் சென்று ஒரு மலைப் பிரதேசத்தை அடைந்தான்.

குன்றுகள் நிறைந்த அப்பகுதியில் புல் செழிப்பாக வளர்ந்திருந்ததும் அவற்றை மேய மாடுகளே தென்படவில்லையென்பதைக் கண்டு முத்து வியப்படைந்தான். அப்பகுதி யில் இருந்து சற்றுத் தொலைவிலிருந்த ஒரு கிராமத்தை அடைந்து அங்கு தன் குடிசையை அமைத்துக் கொண்டான்.

அந்தக் கிராமத்திலுள்ள ஏராளமான கால்நடைகள் எலும்பும் தோலுமாய் காணப்பட்டன. அருகிலேயே குன்றுகளுக்கிடையே செழிப்பான புல்வெளி இருந்தும் கிராமத்தினர் தங்கள் மாடுகளை மேய்க்க அந்த இடத்திற்கு செல்லாமல் இருப்பது முத்துவிற்கு ஆச்சரியத்தை அளித்தது.

உடனே அவன் கிராமத்து மக்களிடம் அதற்கான காரணத்தை கேட்க அவர்கள் குன்றுகள் நிறைந்த அப்பகுதியில் பல புலிகளும் சிங்கங்களும் எங்கிருந்தோ வந்து சேர்ந்துவிட்டன. அங்கு மேயச் செல்லும் எங்கள் மாடுகள் காணாமற் போய்விட்டன. புலிகளும் சிங்கங்களும் எங்கள் மாடுகளை




அடித்துத் தின்றுவிடுவதால் அங்கு நாங்கள் மாடுகளை அனுப்புவதே இல்லை. எல்லா மாடுகளும் கிராமத்திலேயே மேய்வதால் நாளடைவில் இங்கு புல் குறைந்து விட்டது. அதனால்தான் எங்களுடைய மாடுகள் வற்றிப்போய் காணப்படுகின்றன என்றனர்.

ஆனால் உண்மை விஷயம் என்னவென்றால் அந்தக் குன்றுப் பிரதேசத்தில் கஜராஜன் என்ற திருடன் வசித்து வந்தான். அங்கு மேயவரும் பசுக்களை கண்டதும் அவற்றைத் திருடுவதற்கு ஒரு யோசனையை கையாண்டான். அதன் படி புதரில் மறைந்து கொண்டு புலியைப் போலவோ அல்லது சிங்கத்தை போலவோ ஒலி எழுப்புவான். மாடு மேய்ப்பவர்கள் அதைக் கேட்டு ஓடி விடுவார்கள். பின்பு பயந்து போன பசுக்களும் அப்பகுதியை விட்டு ஓடிச் சென்று எதிர் திசையை அடையும். பின்பு வழிதவறிப் போன பசுக்களை அவன் அழைத்துச் சென்று வேறு கிராமங்களில் விற்று விடுவான். இப்படியே சில ஆண்டுகளில் அவன் நிறையப் பணம் சம்பாதித்து விட்டான்.

இவ்வாறு ஏகப்பட்ட மாடுகளைத் திருடி விற்றுவிட்ட கஜராஜனுக்கு சில மாதங்களாக திருடுவதற்கு மாடுகளே கிடைக்கவில்லை. அதனால் அவன் தொழில் மிக அப்படியிருக்கையில் ஒருநாள் நான்கு கொழுத்த மாடுகளை அங்கே கண்டதும் அவனுக்குப் பயங்கர மகிழ்ச்சி உண்டாகியது. கூடவே மாடுகளை மேய்க்க வந்த முத்துவையும் பார்த்தான். விடயம் தெரியாத ஆள் ஒருவன் மாடுகளை மேய்க்க வந்திருக்கிறான் என்று கஜராஜன் புரிந்து கொண்டான். அந்த மாடுகள் நான்கையும் கடத்தித் திருடத் தீர்மானித்து ஒரு புதரினுள் பதுங்கிக் கொண்டான். முத்து தன் மாடுகளை கவனிக்காமல் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து குழல் ஊதத் தொடங்கியது அவனுக்கு வசதியாகப் போயிற்று.

புதரில் பதுங்கிய கஜராஜன் புலியைப் போல் உறுமினான். உடனே அவன் எதிர்பார்த்தது போல் மாடுகள் பயந்து ஓடவில்லை. அவன் பதுங்கியிருந்த புதரை சூழ்ந்து கொண்டு புலி வெளியே வந்தால் தாக்கத் தயாராயின. புலியின் உறுமலைக் கேட்ட முத்து தன் மாடுகள் புதரைச் சூழ்ந்து கொண்டு தாக்கத் தயாராயிருப்பதை கண்டு வேடிக்கை பார்க்க எழுந்து நின்றான்.

முதன் முறையாக தன் சூழ்ச்சி பலிக்கவில்லை என்று அறிந்த கஜராஜன் உடனே சிங்கத்தை போல் கர்ஜித்தான். என்ன ஆச்சரியம்? அந்த மாடுகள் அப்போதும் பயப்படாமல் புதரைச்சுற்றி நின்றன. தங்கள் கொம்புகளை ஆக்கி ரோஷத்துடன் ஆட்டிக் கொண்டே



சீறின. கஜராஜன் நடுநடுங்கிப் போனான். அவன் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. மாடுகளைக் கடத்தித் திருடும் எண்ணத்தை விட்டு தான் உயிர் பிழைத்தால் போதும் என்று நினைத்தான். எப்படியாவது முயற்சி செய்து மாடுகளை பயமுறுத்த எண்ணி புலியின் குரலிலும் சிங்கத்தின் குரலிலும் மாறி மாறி ஒலி எழுப்பினான். ஆனால் அந்த மாடுகள் சிறிதும் பயப்படவில்லை. ஆனால் கஜரானின் உரத்த கர்ஜனையைக் கேட்டு கிராமத்திலிருந்த ஆடு, மாடுகள் பயத்தில் சிதறி ஓடலாயின.

அதற்குள் முத்து கிராமத்திற்குச் சென்று அங்கிருந்த மக்களிடம் என் மாடுகள் புலியையும் சிங்கத்தையும் புதருக்குள் முற்றுகையிட்டுவிட்டன. இன்னும் சற்று நேரத்தில் அவை புதரில் புகுந்து அவற்றைக் கொம்புகளினால் குத்திக்கிளறும் காட்சியைப் பார்க்க வாருங்கள் என்று கூவி அழைத்தான். ஆனால் பலரும் அவன் சொல்வதை நம்பவில்லை. தைரியமுள்ள சிலர் மட்டுமே அந்த அதிசயக் காட்சியைக் காண வந்தனர்.

அங்கு அவர்கள் ஒரு புதரைச் சுற்றி முத்துவின் மாடுகள் முற்றுகையிட்டுச் சூழ்ந்திருப்பதைக் கண்டனர். முத்து புலியும் சிங்கமும் எங்கே? என்று அவர்கள் கேட்டனர். என் மாடுகளுக்குப் பயந்து அவை புதரினுள் பதுங்கியுள்ளன. அவற்றை வெளியே வரச் செய்தால் போதும்! அப்புறம் பாருங்கள் நடப்பதை என்றான் முத்து.

உடனே அங்கு இருந்தவர்கள் கற்களைப் பொறுக்கிப் புதருக்குள் வீசினர். கல்லடி தாங்கமுடியாத கஜராஜன் வெளியேவர அவன் மீது மாடுகள் பாய்ந்து கொம்புகளால் குத்திப்புரட்டிப் போட்டுவிட்டன. குற்றுயிரும் கொலையுயிருமாய் வெளியே வந்த கஜராஜ்னைக் கண்டு மக்கள் திகைத்துப் போயினர்.

அனைவர் முன்னிலையிலும் கஜராஜன் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டான். கிராமத்தினரின் கோபம் எல்லைமீறி கஜராஜனை அடித்துத் துவைத்தனர்.

அன்று முதல் முத்து அந்த கிராமத்திற்குத் தலைவன் ஆகிவிட்டான்.

கிராமத்தினரும் பயமின்றி தங்கள் கால்நடைகளை அங்கு மேய்க்க அனுப்பினர்.

# விமல்வீரவன்சவின் கருத்து அரசாங்கத்தின் கருத்தல்ல

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)


வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்சவின் கருத்து அரசாங்கத்தின் கருத்தாக அமையாது என பதில் ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கூகுள், ஜீமெயில், பெப்சி, கொககோலா, மெக்டொனால்ட்ஸ் போன்ற அமெரிக்க உற்பத்திகளை நுகர வேண்டாம் என அமைச்சர் வீரவன்ச நாட்டு மக்களிடம் கோரியிருந்தார்.

விமல் வீரவன்சவின் கோரிக்கை தனிப்பட்டது எனவும், அது அரசாங்கத்தின் கோரிக்கையாக அமையாது எனவும் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் பல கட்சிகள் அங்கம் வகிப்பதாகவும் ஒவ்வொரு கட்சியும் வெளியிடும் கருத்து அரசாங்கத்தின் கருத்தாக அமையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாரும் எந்தவொரு உற்பத்தியையும் கொள்வனவு செய்ய முடியும். அதனை எவராலும் தடுக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். ஏதேனும் ஓர் பொருளை பயன்படுத்தக் கூடாது என்பது உரிமை மீறலாகவே கருதப்படவேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கூகுள், ஜீமெயில் போன்றவற்றை தாம் தொடர்ந்தம் பயன்படுத்தப் போவதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)



உலக உணவுத்திட்ட விநியோகம் மற்றும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக நலன்புரிச்சங்கத்திற்கு கடன் உதவியாக காசோலையினை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, பேராசிரியர் சத்தியசீலனிடம் கையளிப்பதையும் ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன் , பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் வடமாகாண ஆணையாளர் திருமதி பதுமதி வசந்தகுமார் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: என்.குமார்)

# ஐரோப்பாவுக்கு எதிர்காலத்தில் கடன்வழங்கத்தயார்- பசில்

(கொழும்பு)



ஐரோப்பிய நாடுகளுக்கு கடன் வழங்கும் காலம் தொலை வில் இல்லை என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2012 ஸ்ரீலங்கா எக்ஸ்போ கண்காட்சி தொடர்பில் விளக்க மளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதாரம் என்றால் அது ஐரோப்பா என சிலர் கருதுகின்றனர். ஐரோப்பாவில் மட்டும் நாம் தங்கியிருக்கவில்லை. எமது நாட்டிலும் புதிய சந்தைகள் காணப்படுகின்றன. சுற்றுலாப்பயணிகள் தொடர்பிலும் புதிய சந்தைகள் காணப்படுகின்றன.

மேலும் சீனா, இந்தியா போன்ற நாடுகளில் அநேக சந்தை வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் ஐரோப்பாவின் அச்சுறுத்தல்களுக்கு அடி பணியப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் இறையாண்மைக்கு குந்தம் ஏற்படும் வகையிலான நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனவும் எதிர்காலத்தில் நாம் ஐரோப்பாவிற்கு கடன் வழங்கக்கூடிய ஓர் நிலைமை ஏற்படலாம் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# குற்றச்சாட்டுகள் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் நடத்தப்படவேண்டும்

## சர்வதேச ஜூரிகள் பேரவை வலியுறுத்து

(கொழும்பு)

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென சர்வதேச ஜுரிகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது என சர்வதேச ஜுரிகள் பேரவையின் நிரந்தரப் பிரதிநிதி அலெக்ஸ் கொன்டி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நியமனங்களுக்கு ஏற்ற வகையில் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் முனைப்புக்காட்டத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் வெறும் வார்த்தைக்கு மட்டுப்படுத்தப்படக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக இலங்கை அரசாங்கம் வாக்குறுதி அளித்து 3 வருடங்கள் பூர்த்தியாக உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இதுவரையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

1977ஆம் ஆண்டு முதலே இலங்கையில் குற்றச் செயல்கள் தொடர்பில் ஆணைக்குழு உருவாக் கி விசாரணை நடத்தப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் மிகவும் சொற்ப அளவிலானவர்களே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# இறைவார்த்தையை வாழ்பவர்களே இறைவனின் மக்கள்



அருட் சகோதரர் றமேஸ் அ.ம.தி

வார்த்தை உலகைப் படைத்தது, மனிதனை உண்டாக்கியது. வாழ்வு கொடுத்தது. ஆனால் மனிதன் வார்த்தையை மீறினான். கடவுளின் தண்டனையை பெற்றுக்கொண்டான். எனினும் மனிதன் மேலுள்ள தன் அன்பை சற்றும் குறைக்காத இறைவன் அதே வார்த்தையால் அவனை மீட்பதாக உறுதிமொழி தந்தார். இறைவனின் மனிதனானார்.

மனிதன் வாழ்வுபெற தன்னைத் தந்தார். வார்த்தையால் அவன் வாழ்வை வழிப்படுத்தினார். வார்த்தை வடிவில் இன்றும் இறைவன் மனிதனுடன் வாசம் செய்கிறார். அன்று மட்டுமல்ல இன்றும் மனித இதயங்களில் இறைவனுடைய வார்த்தைகள் விதைக்கப்படுகின்றன. காலத்தின் அறிகுறிகளுக்கேற்ப அது தொடர்ந்து வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. ஆனால் அவ்வார்த்தைக்கு வாழ்வு கொடுப்பதில் மனிதர்களின் பதில் மொழி என்ன? என்பது ஆழமாக சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இன்று இறைவன் பல வடிவங்களில் பல நபர்களின் மூல மாக இயற்கையினூடாக காலத்தின் அறிகுறிகள் ஊடாக எங்களுடன் பேசிக் கொண்டிருக்கிறார். இறைவன் தன்னை எமக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார். நாம் இறைவனுடைய வார்த்தைகளை உள்ளத்தில் தியானிக்கின்றோமா? மேலாக பின் நவீனத்துவ வாழ்க்கைமுறையும் நாகரீகத்தின் அதீத வளர்ச்சியும் விஞ்ஞானத்தின் விந்தையும் சினிமாவின் மோகமும் கலாசார பண்பாடுகளின் நவீன மாற்றங்களும் எம்மை திசை திருப்பி எமது அகக்கண்களை இருட்டாக்கி வேறோர் திசையில் எம்மை நகர்த்திச் செல்வது கண்கூடு. இதனால் எம்மில் விதைக்கப்படும் வார்த்தை விதையிலேயே மடிகின்றன. சில முளைத்தும் கருகிப்போகின்றன. இன்னும் சில வளரும் போது நெரிக்கப்படுகின்றன. எனவே எமது வாழ்வின் உண்மைத் தன்மையை உணருவோம். வார்த்தையின் ஒளியில் எங்களில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

வார்த்தைக்கு உயிரளிப்போம். இறைமதிப்பீடுகளை வாழ்வாக்குவோம். ஆண்டவரின் வாக்கு நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் இறை வார்த்தையை வாழும் போதே நாம் இறைமக்கள் என்ற உரிமையோடு இறைவனை அணுகமுடியும்.

# மோட்டார் சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் காயம்

(உரும்பிராய்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் உரும்பிராயில் இடம்பெற்றுள்ளது.

இதில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த குலசிங்கம் பிரபாகரன் (வயது-31) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தநிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (அ-6)

# எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸாருக்கு எதிராக உரிமை மீறல் மனுத்தாக்கல்

(கொழும்பு)

பொலிஸாருக்கு எதிராக எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கள் அடிப்படை உரிமை மீறல் மனு வொன்றை தாக்கல் செய்துள்ள னர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர்களான அகில விராஜ் காரியவசம், டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன ஆகியோரே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த மாதம் கொழும்பில் நடத் தப்பட்ட எதிர்ப்பு போராட்டத்தின் போது பொலிஸார் தாக்குதல் நடத்தியதாக அடிப்படை உரிமை மீறல் மனுவில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த எதிர்ப்பு போராட்டத்தில் குறித்த இரண்டு நாடாளுமன்ற உறு ப்பினர்களும் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள். பொலிஸ்மா அதி பர் என்.கே. இலங்கக்கோன் மற் றும் சட்ட மா அதிபர் ஈவா வனசுந்தர உள்ளிட்டோர் மனுவில் பிரதிவாதி களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அனுமதி அளிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரி யுள்ளனர்.

(அ-2)

# ஜெனீவா தீர்மானம் நிறைவேறினாலும் வடக்கு, கிழக்கு மக்களை கைவிடேன்

## ஜனாதிபதி உருக்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் எவ்வாறான தீர்மா னம் நிறைவேற்றப்பட்டாலும் வட க்கு, கிழக்கு அபிவிருத்திப் பணிகள் கைவிடப்பட மாட்டாது என ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

வடக்கு, கிழக்கு மக்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங் கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப் படும். நாட்டுக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் அதனை எதிர்நோக்கத் தயார்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காரணத்திற்காக வடக்கு, கிழக்கு வாழ் மக்களை கைவிடத் தயாரில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் கல ந்து கொண்ட போது ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# பணம் சம்பாதிப்பதை விட வேறு நோக்கம் அரசியல்வாதிகளுக்கில்லை

## அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள சில முட்டாள் அர சியல்வாதிகள் இழிவான செயல் களில் ஈடுபட்டு வருவதாக கண்டி அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்திரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

எந்தவிதமான கல்வித் தகை மையும் அற்ற எமது அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கள் மிகவும் கேவலமாக நடந்து கொள்கின்றனர்.

பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன், அஸ்கிரிய பீடா திபதியை சந்தித்தபோது அவர் இந் தக் கருத்துக்களை வெளியிட்டுள் ளார். அவர் மேலும் தெரிவிக்கை யில்,

கடந்த காலங்களில் தமது சொத் துக்களை இழந்து அரசியல் செய் தார்கள். எனினும் தற்போது பணம் சம்பாதிப்பதனை பிரதான இலக் காகக் கொண்டு அரசியலில் ஈடுப டுகின்றனர்.

போதைப் பொருள் வர்த்தகர் கள், பாதாள உலகக்குழு உறுப்பி னர்கள் இன்று அரசியலில் ஈடுபடு கின்றனர். இதனால் நாட்டுக்கு சர்வ தேச ரீதியில் அழுத்தங்கள் ஏற்பட் டுள்ளன.

பொதுமக்கள் பாதுகாப்பை உறு திப்படுத்தும் தரப்பினர் சீரிய ஒழுக் கத்துடன் நடந்து கொள்ள வேண் டும். பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த ஒரு சிலரின் நடவடிக்கைகளினால் பாதுகாப்புத்துறைக்கே களங்கம் ஏற்பட்டுள்ளது என அஸ்கிரிய பீடா திபதி தெரிவித்துள்ளார்.

(அ-2)

# மனித உரிமை விவகாரம் குறித்த ஜப்பானின் கருத்து வரவேற்கத்தக்கது

## அரசாங்கம் புகழாரம்

மனித உரிமை விவகாரம் தொட ர்பில் ஜப்பானின் கருத்து வரவேற் கத்தக்கது என இலங்கை அரசாங் கம் தெரிவித்துள்ளது.

மனித உரிமை பாதுகாப்பு தொடர் பில் எந்தவொரு நாடும் முழுமை யானதல்ல என ஜப்பான் குறிப் பிட்டுள்ளது.

மனித உரிமை பாதுகாப்பு தொட ர்பில் ஜப்பானின் கருத்தை உலக நாடுகள் கவனத்திற் கொள்ள வேண் டுமென அரசாங்கம் கோரியுள்ளது.

ஒவ்வொரு நாட்டினதும் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் ஏனைய காரணிகளின் அடிப்படை யில் மனித உரிமை விவகாரம் பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப் பட வேண்டுமென ஜப்பான் வலி யுறுத்தியுள்ளது.

இதேவேளை, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கத் திற்கு காணப்படும் ஆர்வத்தை ஜப் பான் புரிந்து கொண்டுள்ளதாக ஜெனீ வாவிற்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதி தமரா குணநாயகம் தெரி வித்துள்ளார்.

மேற்குலக நாடுகள் இலங்கையு டன் ஆக்கபூர்வமான தொடர்புக ளைப் பேண வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# 2012.03 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ *1776-அமெரிக்கப் புரட்சி பிரித்தானியப் படைகள் மசாசுசெட்சின் பொஸ்டன் நகரை விட்டு அகன்றன.*

★ *1805-நெப்போலியன் தலைவனாக இருந்த இத்தாலியக் குடியரசு இத்தாலியப் பேரரசு ஆனது. நெப்போலியன் அதன் பேரரசன் ஆனான்.*

★ *1845-இறப்பர் பட்டி* (rubber band) *கண்டுபிடிக்கப்பட்டது.*

★ *1861-இத்தாலியப் பேரரசு (1861-1946) அமைக்கப்பட்டது.*

★ *1886-மிசிசிப்பியில் 20 ஆபிரிக்க அமெரிக்கர்கள் உயிரிழந்தனர்.*

★ *1891-பிரித்தானியாவின் எஸ்எஸ் யூட்டோப்பியா என்ற கப்பல் கிப்ரால்ட்டர் கரையில் மூழ்கியதில் 574 பேர் உயிரிழந்தனர்.*

★ *1919-றோவ்லட் சட்டத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்வதற்காக மகாத்மா காந்தி சென்னை வந்தார்.*

★ *1942-மேற்கு உக்ரேய்னின் லிவிவ் என்ற இடத்தைச் சேர்ந்த யூதர்கள் கிழக்கு போலந்தில் பெல்செக் என்ற இடத்தில் வைத்து நாசி ஜேர்மனியரினால் நச்சு வாயு செலுத்தப்பட்டதால் உயிரிழந்தனர்.*

★ *1950-கலிபோர்னியா பல்கலைக்கழகம் ஆய்வாளர்கள் கலிபோர்னியம் என்ற 98 ஆவது கனிமத்தைக் கண்டுபிடித்ததாக அறிவித்தனர்.*

★ *1958-ஐக்கிய அமெரிக்கா வங்கார்ட் 1 செய்மதியை ஏவியது.*

★ *1959-டென்சின் கியாட்சோ, 14 ஆவது தலாய்லாமா, திபெத்தில் இருந்து வெளியேறி இந்தியா வந்து சோர்ந்தார்.*

★ *1966-ஆல்வின் என்ற நீர்மூழ்கிக் கப்பல் காணாமல் போன ஐக்கிய அமெரிக்காவின் ஐதரசன் குண்டை மத்தியதரைக் கடல் பகுதியில் ஸ்பெயினுக்கருகில் கண்டுபிடித்தது.*

★ *1969-கோல்டா மெயர்* (Golda Meir) *இஸ்ரவேலின் முதலாவது பெண் பிரதமரானார்.*

★ *1970-மைலாய் படுகொலைகள் தொடர்பான தகவல்களை வெளியிடாமல் மறைத்த குற்றத்துக்காக அமெரிக்க இராணுவம் 14 இராணுவ அதிகாரிகள் மீது குற்றம் சாட்டியது.*

★ *1988-கொலம்பியாவின் போயிங் விமானம் ஒன்று வெனிசுவேலாவின் எல்லையில் உள்ள மலை ஒன்றில் மோதியதில் 143 பேர் உயிரிழந்தனர்.*

★ *1988-எரித்திரியாவில் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியினர்* (EPLF) *எதியோப்பிய இராணுவ நிலைகளை நோக்கி மும்முனைத் தாக்குதலை ஆரம்பித்தனர்.*

★ *1992-ஆர்ஜெண்டினாவில் இஸ்ரேல் தூதரகத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுவெடிப்பில் 29 பேர் உயிரிழந்தனர். 242 பேர் படுகாயமடைந்தனர்.*

★ *2000-உகண்டாவில் கடவுளின் பத்துக் கட்டளைகளை மேம்படுத்தும் மத இயக்கம் ஒன்றின் உறுப்பினர்கள் 800 பேர் வரையில் அவ் இயக்கத் தலைவர்களினால் படுகொலை செய்யப்பட்டனர்.*

### பிறப்புக்கள்

★ *1881-வால்ட்டர் ஹெஸ், நோபல் பரிசு பெற்றவர் (இ.1973)*

★ *1920-ஷேக் முஜிபுர் ரகுமான், வங்காள தேசத்தின் தந்தை (இ.1975)*

### இறப்புக்கள்

★ *1937-ஒஸ்டின் சாம்பர்லேன், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (பி.1863)*

★ *1956-ஐரீன் ஜோலியோ-கியூரி, வேதியியலுக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1897)*

★ *1983-ஹால்டன் ஹார்ட்லைன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1903)*

### சிறப்பு நாள்

★ அயர்லாந்து-சென் பாட்றிக் தினம்




★ **1996-இலங்கை அணி அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்து துடுப்பாட்ட உலகக் கிண்ணத்தை வென்றது.**

# அதிசய உலகம்...

## தாளில் காணப்படும் உள்ளடக்கங்களை அழிக்கும் போட்டோ கொப்பி இயந்திரம்

இதுவரை வெற்றுத் தாள்களில் பிரதியெடுப்பதற்காக போட்டோ கொப்பி இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது சற்று உயர் தொழில்நுட்பத்தின் மூலம் போட்டோ கொப்பி எடுத்த தாளில் காணப்படும் உள்ளடக்கங்களை அழிப்பதற்குரிய போட்டோ க்கொப்பி இயந்திரத்தை Toshiba நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

தற்போது காணப்படும் எழுத்துக்களை அழிக்கும் அல்லது மறைக்கும் போல் பொயின் பேனாக்களின் தொழில் நுட்பத்திலேயே இந்த இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

எனினும் விசேடமாக வெப்பத்தின் மூலம் தாளை உலர்த்தும் தொழில்நுட்பமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.



பிரதியெடுத்தல், அழித்தல் என்னும் இரண்டு வேலைகளையும் செய்ய வல்ல இந்த இயந்திரத்தின் மூலம் மேலதிகமாக நீல நிறத்தில் பிறின்ட் செய்துகொள்ள முடியும்.

எனினும் விரைவில் ஏனைய வர்ணங்களையும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனToshiba நிறுவனம் உறுதியளித்துள்ளது.

## உலக சாதனை உருளைக்கிழங்கு

பிரிட்டனிலுள்ள 8 இறாத்தல்,04 அவுன்ஸ் (3.75 கிலோகிராம்) நிறையுடைய கிழங்கொன்று உலகின் மிகப்பெரிய உருளைக் கிழங்காக பிரகடனப்படுத்தப்படவுள்ளது. .

· பீற்றார் கிளாஸ்பருக் என்பவரின் தோட்டத்தில் வளர்ந்த இந்தக் கிழங்கு முந்தைய உலக சாதனைக்குரிய உருளைக் கிழங்கை 9 அவுன்ஸ்களால் தோற்கடித்துள்ளது.




இந்தக் கிழங்கை உற்பத்தி செய்த பீற்றர் கிளாஸ்பருக் இச்சாதனையால் மகிழ்வின் உச்சியில் மிதக்கிறார். இந்தக் கிழங்கு அண்மையில் பிரித்தானிய தேசிய பூங்கா நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டது.

நோர்தம்ப்டன் பிராந்தியத்தை சேர்ந்த 66 வயதான பீற்றர் இதற்கு முன்பு தனது வீட்டுத்தோட்டத்தில் பல மரக்கறிகளை வித்தியாசமான முறையில் வளர்த்து சாதனைகளை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அவற் றில் 17 அடி உயரமான கரட், 21 அடி உயரமான பீற்றூட் மற்றும் 13இறாத்தல் நிறையுடைய முள்ளங்கி போன்றவையும் அடங்குகின்றன.

## விரல் துண்டிக்கப்பட்ட இளைஞனுக்கு வயிற்றில் விரலை பொருத்திய அதிசயம்

விரல் நுனி துண்டிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞனின் விரலை வைத்தியர்கள் இணைந்து அவனது வயிற்றில் பொருத்தி விரலுக்கு உயிரோட்டம் கொடுத்த அதிசய சம்பவம் சீனாவில் இடம்பெற்றுள்ளது.



தளபாடங்கள் உற்பத்தி செய்பவரான வாங் யோங் ஜன் (வயது-20) என்ற இளைஞனே இவ்வாறு விரல் நுனி துண்டிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது வைத்தியர் ஹுவாங் செயிங் மேற்படி இளைஞனின் நடுவிரல் நுனியில் உள்ள தசை மற்றும் தோல் முற்றாக வெட்டப்பட்டு விரலின் எலும்புகள் வெளியில் தெரிகின்றன. இதற்கு நாங்கள் மிக வேமாக முடிவெடுக்கா விட்டால் அவ்விளைஞன் தனது விரலையே இழக்க வேண்டி ஏற்படும். அதனால் நாங்கள் அவனது வயிற்றுப்பகுதியில் குறித்த விரலை பொருத்துவதற்கு நினைத்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

அதன்பின்பு உடனடியாக வைத்தியர்கள் வாங்கிற்கு சத்திரசிகிச்சையை மேற்கொண்டு வயிற்றுப் பகுதியில் அவரது விரலை பொருத்தியுள்ளனர்.

இதனூடாகஅவ்விளைஞனின் விரல் நுனியில் தசை மற்றும் தோல் பகுதி வளர்ந்து விடுமென வைத்தியர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

சத்திரசிகிச்சையானது வெற்றிகரமாக முடித்து வாங்கின் வயிற்றில் பொருத்தப்பட்டுள்ள விரலை இன்னுமொரு மாதத்தில் பிரித்துவிடலாம் என வைத்தியர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## குழந்தை போல் அழுது கதைக்கும் விநோ[illegible]ாய்




DELLAஎன்ற இந்த நாய் விநோதமாக அழுதபடி குழந்தையைப் போல பேசுகின்றது. எஜமான் விட்டுப் போகும் போதெல்லாம் இவ்வாறு குழந்தை போல அழுகிறதாம் அந்த நாய். கடை ஒன்றுக்கு வெளியே கட்டி விட்ட பின்னர்தான் நாய் இவ்வாறு குழந்தை போல அழுதுள்ளது. அந்த சம்பவம் காணொளியாக பதியப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இரவில் வானவேடிக்கை இடம்பெற்றால் மட்டுமே குறித்த நாய் குரைக்கின்றது.

குறித்த நாயின் 38 வயதான எஜமானான Lan கருத்து தெரிவிக்கையில், முதலில் நாயின் அழுகுரலைக் கேட்டதும் உண்மையில் நான் பயந்து விட்டேன்.

குழந்தை ஒன்றுக்கு தான் ஏதோ ஆகிவிட்டது என்று நினைத்தேன் .ஆனால் எனது நாய் தான் அவ்வாறு செய்கின்றது என்பதை அறிந்த போது உண்மையில் வியப்பாக இருக்கிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## பதினைந்து கிலோ பாரம் தாங்கும் அதிசய லில்லி



அதிசய லில்லி இனங்களில் பலவகை இருக்கின்றன. அவற்றில் மிகவும் பிரமாண்டமானது விக்டோரியா அமசோனிகா என்னும் வகை லில்லியாகும்.

இந்த லில்லி இனத்தினுடைய இலை சுமார் 1.5 மீற்றர் விட்டமுடையது. அந்த இலைகளைப் பார்க்கும் போது பெரிய தாம்பூலம் போல் காட்சியளிக்கும். இந்த பிரமாண்டமான இலைகளில் சுமார் 15 கிலோகிராம் எடையுள்ள எந்தப் பொருளையும் வைக்க முடியும்.

நெதர்லாந்திலுள்ள பிளிஜ்டோர்ப் மிருகக்காட்சிச்சாலையில் இந்த லில்லி பூக்களுக்கும் அதிக கிராக்கி இருக்கிறது. இங்கு மலர்ந்துள்ள லில்லி பூக்கள் முதல் நாள் இரவில் வெள்ளை நிறமாகவும் காட்சியளிக்கும். மறுநாள் இதன் நிறம் இளம் ஊதாவாக மாற்றமடைவது அதிசயிக்கத்தக்கது.

இதனுடைய பூக்கள் சுமார் 14 சென்ரிமீற்றர் விட்டம் கொண்டவை. அடுமட்டுமல்லாமல் அங்கு இருக்கும் லில்லி இலைகளில் சிறிய பிள்ளைகளை உட்காரவைத்து படம் எடுப்பதற்கும் அனுமதிக்கிறார்கள்.

இதனால் இந்த லில்லி இனங்களுக்கு எப்பொழுதும் மவுசு அதிகமாக உள்ளது.

# அரசு மக்களின் பணத்தை வீண்விரயம் செய்கிறது

## மக்களின் துன்பத்தை புரிந்து கொள்ளாதவர்கள் என்கிறார் ரணில்



(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் 47 உறுப்பு நாடுகளே அங்கம் வகிக்கின்றது. ஆனால், ஜெனீவாவிற்கு சென்றுள்ள அரசு தூதுக்குழுவில் 54 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.**

**இவர்களுக்காக மக்களின் பணம் வீணாக செலவு செய்யப்படுகின்றது என்று ஐ.தே.கட்சி தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்ரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.**

வடகொழும்பு தேர்தல் தொகுதியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஐ.தே.கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்து பிரச்சினைகளிலிருந்தும் பணம் சம்பாதிக்கும் அரசாங்கம் ஜெனீவா பிரச்சினையிலும் இதனையே முன்னெடுக்கின்றதென்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

அரச தரப்பினர் ஜெனீவாவிற்கு சென்று பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தவறில்லை. அது அரசாங்கத்தின் கடமையாகும்.

ஆனால், ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவில் 47 உறுப்பு நாடுகளே அங்கம் வகிக்கின்ற நிலையில் அரச தரப்பில் 57 பேர் அங்கு சென்றுள்ளனர்.

இவ்வாறானதோர் தொகையினரை அனுப்பி மக்களின் பணம் வீண் விரயமாக்கப்படுகிறது. ஏன், எதற்காக இந்த வீண் விரயம். 1987 இல் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்காலத்தில் ஆர்ஜென்டீனா எமக்கெதிராக இவ்வாறானதொரு குற்றச்சாட்டை சர்வதேசத்தில் முன்வைத்தது. இதன்போது இதற்கு முகம் கொடுப்பதற்காக இலங்கை பிரதிநிதியாக ஏ.சீ.எஸ் ஹமீட் மட்டுமே வெளிநாடு சென்றார்.

இவ்வாறு பணம் சம்பாதிக்கும் அரசாங்கத்தை ஒரு போதும் கண்டதில்லை. எனவேதான் இந்த ஆட்சியை தொடர முடியாதென ஆணித்தரமாக நாம் கூறுகிறோம்.

மக்களின் துன்பங்களை அரசாங்கம் புரிந்து கொள்ளாமல் செயற்படுகிறது. அனுதாபமில்லை. பிரச்சினைகளுக்கு தீர்வை கொடுக்க அரசாங்கத்தினால் முடியாவிட்டால் வெளியேற வேண்டும்.

எனவேதான் மக்களுக்கு சலுகைகளை வழங்குமாறும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும் வலியுறுத்தி நாடு பூராகவும் மக்கள் சக்தியை திரட்டுகிறோம். ஐ.தே.கட்சியால் மட்டும் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டத்தினை முன்னெடுக்க முடியாது. அனைத்து தரப்பினரது வேண்டுகோளுக்காகவும் தேவைகளுக்காகவுமே நாம் முன்னிற்கின்றோம்.


எமது கோரிக்கைகளை வென்றெடுத்த பின்னர் தேர்தல்களில் சுயாதீனமாக போட்டியிட முடியும். இதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றார். (அ-2)

# ரயில் விபத்தில் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ரயில் நிலையத்தின் அருகில் இடம்பெற்ற ரயில் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ரயில் தண்டவாளத்தில் இருந்த ஒருவர் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளதாக மட்டக்களப்பு ரயில் நிலையத்தின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது எனவும் தம்பிலுவில் பிரதேசத்தை சேர்ந்த 47 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-7)



சுன்னாகம் இலங்கை வங்கி ஊழியர்களின் தன்னார்வ பங்களிப்புடன் யா/இராமநாதன் மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களின் பாவனைக்காக கணனித் தொகுதி அண்மையில் அன்பளிப்பு செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி.சுமணசிறி கல்லூரி அதிபரிடம் கணனித் தொகுதியினை கையளிப்பதை படத்தில் காணலாம்.

# சிறைக்கைதிகளுக்கு கல்வி புகட்டும் வேலைத்திட்டம்

தற்போது சிறைகளில் உள்ள கைதிகளுள் 2 ஆயிரத்து 848 பேர் எந்த கல்வி அறிவையும் பெறாதவர்கள் என புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலை அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டின் அறிக்கையின் படி இலங்கையில் மொத்தமாக 32 ஆயிரத்து 128 கைதிகள் உள்ளனர். அவர்களுள் 5 ஆயிரத்து 151 பேர் ஐந்தாம் வகுப்பு வரையில் கல்வி கற்றவர்கள் எனவும் இந்த நிலையில் உள்ள கைதிகளுக்கு கல்வி புகட்டும் வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளின் நலன் கருதி அவர்களுக்கான பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப் படவுள்ளதாக தெரிவித்த அவர் முதற்கட்டமாக 400 கைதிகள் இதில் கல்வி கற்கும் வாய்ப்பை பெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.(அ-7)

# இன, மதவாதத்தை தூண்டி ஆதரவு தேடுகிறது அரசு

## நாடு கடந்த அரசு குற்றச்சாட்டு

ஐ.நா.மனித உரிமைச் சபையில் நாடுகளின் ஆதரவினைத் திரட்ட, இன, மதவாதத்தை இலங்கை முன்னிறுத்தி ஆதரவினை எத்தனிப்பதாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

குறிப்பாக, ஆபிரிக்க நாடுகளிடத்தில் அமெரிக்காவின் பிரேரணையானது கறுப்பினத்தவர் மீதான வெள்ளை இனத்தவர்கள் ஆதிக்கம் செலுத்தும் முயற்சியென்றும், இஸ்லாமிய நாடுகளிடத்தில் அமெரிக்க எதிர்ப்பு மதவாதத்தை முன்னிறுத்தவும் அமெரிக்க, இலங்கை அரசு தரப்பு கருத்துருவாக்க பரப்புரையாகவுள்ளது.

இதேவேளை, கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஆபிரிக்க நாடுகள் பலவற்றுக்கு பயணங்களை மேற்கொண்ட இலங்கை தரப்பு, தங்களுக்கான ஆதரவினை அந்தந்த நாடுகள் பலவற்றில் கோரியிருந்தபோதும், இன்று அந்த நாடுகளில் பல, தமிழர்களின் நியாயமான போராட்டத்தை புரிந்துள்ளதோடு, இலங்கை அரசினது குற்றங்கள் தொடர்பில் அறிந்து கொண்டவர்களாக உள்ளமை உணரக்கூடியதாக உள்ளதென்பது ஆறுதல் அளிக்கும் விடயமாக உள்ளதென நாடு கடந்த அரசு தெரிவித்துள்ளது. (அ-2)

# கல்வித் திணைக்களம் அனுமதித்த வினாத்தாள்களையே பயிற்சிக்கு வழங்க வேண்டும்

## மாகாண கல்வித் திணைக்களம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய பாட அலகுகள் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாகவே தனியார் மற்றும் நிறுவனங்களின் பரீட்சை வினாத்தாள்களை தரம் 5 மாணவர்களுக்கு வழங்கி பரீட்சை நடத்தும் முறையை உடனடியாக நிறுத்துமாறு வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் விடுத்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மாகாண மட்ட வெளிவாரி மதிப்பீட்டின் போது, மாணவர்களுக்கு கற்பிக்கப்பட வேண்டிய பாட அலகுகள் நிறைவேற்ற முன்பே தனியார் மற்றும் நிறுவனங்களின் வினாத்தாள்களை மாணவர்களுக்கு வழங்கி பரீட்சைகளைப் பாடசாலை வேளையில் நடத்தி வருவதனை மாகாண அலுவலர்கள் இனங்கண்டுள்ளனர்.

மாணவர்கள் அன்றாடம் கற்கவேண்டிய விடயங்களை ஆசிரியர்கள் கற்பிக்காது இவ்வாறான வினாத்தாள்களைப் பாடசாலை நேரத்தில் செய்விப்பது மாணவர்களுக்கு பல நெருக்கீடுகளை ஏற்படுத்தும். அடைவுமட்டம் உயர்வதற்கான வாய்ப்புகளும் அற்றுப் போகும்.

எனவே, எமது அறிவுறுத்தல்களைக் கருத்தில்கொண்டு பாடசாலைகள் செயற்பட வேண்டும்.

இதில்,

☆ கல்வித்திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட வினாத்தாள்களையே மாணவர்களுக்குப் பயிற்சிப் பரீட்சையாக நடத்த அனுமதித்தல்

☆ அவ்வினாத்தாள்களைக்கூட பாடசாலை நேரந்தவிர்ந்த நேரத்திலேயே நடத்துதல்

☆ கற்றல், கற்பித்தலுக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தை முழுமையாகப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துதல்

☆ மாணவர்கள் வினாத்தாள்களிலோ அப்பியாசக்கொப்பிகளிலோ உறுப்பமையவும் ஏற்ற இடைவெளி விட்டுத் தெளிவாகவும் எழுதுவதை ஆசிரியர்கள் ஊக்குவித்தல்


☆ உடனுக்குடன் பிழைகளைத் திருத்தி தேவையான பின்னூட்டல்களைச் செய்வதுடன், சுற்றாடல்சார் செயற்பாடுகளில் வரும் எளிய பரிசோதனைகளை பாடநேரத்தில் செய்வதை உறுதிப்படுத்துதல். (ந)

# சிறுவர் ஓவிய, சிற்ப கண்காட்சி

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்டோருக்கான சிறுவர் ஓவிய, சிற்பக் கண்காணட்சி கலாசார அலுவல்கள் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் நாளை மறுதினம் திங்கட்கிழமை யா/ இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் அறிவித்துள்ளார்.

மேற்படி பிரதேச செயலகத்திற்குட்பட்டோர் தங்கள் ஓவிய, சிற்பங்களை அன்றைய தினம் காட்சிப்படுத்த விரும்பின் மேற்படி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சுவாசம் - வாழ்க்கையின் நீருற்று



வாழ்க்கையின் முதல் செயல் என்ன?

நாம் உள்மூச்செடுக்கிறோம்-பிறகு அழ ஆரம்பிக்கிறோம்!

வாழ்க் கையின் கடைசிச் செயல் என்ன?

நாம் வெளிமூச்சு விடுகிறோம்-பிறரை அழவைக்கிறோம்!

அவ்வளவுதான் உள்மூச்சு, வெளி மூச்சு என்று சொல்லப்படும் இந்த இரண்டு மூச்சுக்களுக்கும் இடைப்



பட்டதுதான் நம் முழு வாழ்க்கையுமே. நாம் நமது சொந்த வாழ்க்கையைச் சற்றுக் கூர்ந்து பார்க்க வேண்டும்.

நாம், நம் மூச்சைக் கவனிக்காமல் இருந்துவிட்டோம். நாம் உணர்வு களைக் கவனித்து "ஓ... நான் இப்படி உணர்கிறேன்" என்று சொல்கிறோம். நம் எண்ணங் களையும், கருத்துக்களையும், நினைவுகளையும், மனதையும் கவ னிக்கிறோம். எடையைக் குறைக்க அல்லது அதிகரிக்க முயற்சி செய்கி றோம். ஆனால், இவை எல்லாவற் றையும் ஒருங்கிணைக்கும் ஒன்றைக் புறக்கணித்துவிட்டோம். அதுதான் நம்முடைய சுவாசம் ஆகும். நம் உடலையும், மனதையும் காப்பதில் நம் சுவாசத்திற்குப் பெரும் பங்குண்டு.

நம் சுவாசத்தில் ஒரு சுருதிலயம் உண்டு. அந்த லயம் அந்த இசைவு-உலகத்தின் லயத்தோடு தொடர் புடையது. இயற்கையில் உள்ள லயத்துடன் -உடலில் உள்ள லயத் துடன், ஒருவரின் எண் ணங்களின் லயத்துடன் அவரின் உணர்ச்சிகளின் லயத்துடன் தொடர் புடையது.

மருத்துவமனைகளில் உள்ளவர்கள் மட்டும் நோயாளிகள் என்று நினைக்காதீர்கள். யா ரெல்லாம் மகிழ்ச்சியாக இல்லையோ, அவர்க ளெல்லாம் நோயாளிகள் தான். யாரெல்லாம் அமைதியாக நிலைத் தன்மையுடன் இல்லை யோ, அவர்களெல்லாம் நோயாளிகள்தான், யாருக்கெல்லாம், தங்கள் மனத்தை- எண்ணங்களை - உணர்ச்சிப் புயல்களைக் கையாளத் தெரியவில்லையோ, அவர்களும் கூட ஒரு விதத்தில் நோயாளிகள் தான்.

நம் மனம் முக்கிய பங்கினை வகிக்கிறது, அது மிக நுண்ணிய தனி வடிவமற்றது. நீ அதை நேரடியாக கையாளமுடியாது. நீ உன் உணர்ச்சிகளை பற்றி, அவை எதுவாயினும், பேச லாம். அதனால் உனக்குச் சிறிது நேரம் ஒரு ஆறுதல் கிடைக்கலாம். ஆனால், மனம் திரும்பவும் அதே விதமாகச் செயலாற்றத் தொடங்கு கிறது. அதே பழக்கங்களுடன் மறுபடியும் நீ உன் மூச்சில் கவனம் செலுத்தினால், உன் மனம் எதிர்கொள்ளும் பிரச்சினை களின் மூல மூலகாரணத்தை வேரோடு களையலாம்.

நாம் வெவ்வேறு நிலைகளில் உள்ளோம். அவற்றை ஏழு நிலை களாகப் பிரிக்கலாம்-உடல், மூச்சு, மனம்,புத்தி, ஞாபகம், அகங்காரம், ஆன்மா,(மெய்யுணர்வு) இவற்றின் ஒவ்வொன்றையும் பற்றிய சிறிய அறிவுகூட உங்களை வெகு தூரம் அழைத்துச் செல்லும். உங்களில் பலர், இதை அறிந்துள்ளீர்கள். இப்போதும் கூட நீங்கள் கோபம் கொள்கிறீர்கள், தடுமாற்றம் அடைகிறீகள். ஒரு போதும் நீங்கள் பாதிக்கப்படுவதே இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால், அதில் ஒரு வித்தியாசம் இருப்பதைக் கவனித்தீர்களா? முன்பு பாதிக்கப்பட்டபோது, அது மனதில் பல நாட்கள் உறுதிகொண்டிருக்கும். ஆனால், இப்போது ஏற்படும் பாதிப்பு, சிலநொடிகள் மட்டுமே நீடிக்கின்றது. அவ்வளவுதான்! நீங்கள் உங்கள் மூச்சின் உதவியோடு, திரும்பவும் உங்கள் நிலைக்கு வரு கிறீர்கள், இதைக் கவனித்திருக் கிறீர்களா?

இந்த உடல் மெய்யுணர்வால் படைக்கப்பட்டது. அது பல மூலப் பொருள்களால் ஆனது என்றாலும், உயிரிருப்பதால்தான் உடல் வளர் கிறது-உயிர், உடலை வளரச் செய் கிறது. ஆனால், அதைக் கண் ணால் காண்பது இயலாது. நீ உயிரைப் பார்க்கமுடியாது. ஆனால், அதன் செயல்கள் அனைத்தையும் மறை முகமாகக் காணலாம். உடலை

## ஆன்மீகம் 08

உருவாக்கிய, வளர்த்த இந்த மெய் யுணர்வால், அதைக் குணப்படுத்தவும் முடியும். ஆனால், குறிப்பிட்ட காரிய அட்டவணையில் நம்மனம் திட்ட மிடப்பட்டுள்ளதால், நாம் காண்ப வற்றை நம்புகிறோம்.புலன்களுக்கு அப்பாற்பட்டவற்றை நம்புவதில்லை. மெய்யுணர்வு, புலன்களுக்கு அப்பாற் பட்டது. கடவுள் கூட புலன்களால் உணரப்படமுடியாதவரே. யாருக்குத் தெரியும்? கடவுள் இருக்கிறாரா இல்லையா? என்று! இது போன்ற சந்தேசகங்கள் மனதில் எழுகின்றன. ஏனெனில், அவை புலன்களுக்கு அப்பாற்பட்டவை. நமக்கு அவை களில் நம்பிக்கை கிடையாது. நாம் திட்டவட்டமாக நமக்குத் தெரிந்த தையே, தெரிபவற்றையே அதிகம் நம்புகிறோம். எதையெல்லாம், காணமுடிகிறதோ அதை நம்புகி றோம். ஆனால், உங்கள் பார்வையில் சிறுமாற்றம் ஏற்படுத்திக் கொண்டி ருப்பவற்றை இருந்தபடியாகப் பார்த் தால், உங்களின் புதிய பார்வை யில் இந்த முழு உலகமுமே வித்தியாச மான வெளிச்சத்தில் தெரியும்.

(தொடரும்)

பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

# உங்கள் கைரேகை பலன்கள் 08

### குரு மேட்டிலுள்ள இரேகைக் குறிகளின் பலாபலன்.

ஒருவர் கையில் பலரேகைகள் நெருக்கமாக இருந்தால், அவர் எடுத்த காரியங்களெல்லாம் தவறும் என்பதை அவை காட்டுவதாகும். இரேகைகள் ஒன்றின்மேல் ஒன்றாய் அமைந்திருந்தால், அவரது ஒழுக்கம், புகழ் முதலிய எல்லாம் கெட்டுப் போம் என்பதை அவை காட்டுவ தாகும். இரேகைகள் கிளை களுடை யதாய் அமைந்திருந்தால், அவருக்கு குரு உச்சம் நிலைத்துநிற்கும் என்பதை அவை காட்டுவதாகும். ஒருவர் கையில் கறுப்புப் புள்ளி காணப்பட்டால், அது அவர் செல் வமும் புகழும் தொலைந்து தாழ்ந்த நிலையில் இருப்பதைக் குறிப்ப தாகும். குருமேட்டில் சூலம் மட்டு மிருந்தால், அவருக்கு மனமொரு மித்த இல்லறக்கிழத்தி வாய்ப்பாள் என்பதை அது காட்டுவதாகும். சூலத்தோடு நக்ஷத்திரமும் சேர்ந்தி ருந்தால், அவருக்கு மிக மேன்மை யான சம்பந்தம் உண்டாகும் என் பதை அது விளக்குவதாகும். அவரிடம் அன்பும் மிகுந்திருக்கும்.

### குரு மேட்டில் இரேகைக் குறிகள்


ஒருவர் கையில் மணிக்கட்டுக்கு மேலே விதி இரேகை உற்பத்தி யாகுமிடத்தில் அதனுடன் பல இரேகைகள் குறுக்கிட்டு அவை பின்னாலிருந்தால் அந்தக் காலத் துக்கு வயதுக்குட்பின் அவருக்கு நன்மையுண்டாகும் என்பதை அவை காட்டுவதாகும். குரு மேட்டில் நக்ஷத்திரமும் சூலமும் நெருங்கி யிருந்தால், அவருக்கு எதிர்பாராத பெரிய இடத்துச் சம்பந்தமும், மேன் மேல் விருத்தியும், சுகவாழ்வும் உண்டாகும் என்பதை அவை குறிப்ப தாகும். குரு மேட்டில் நக்ஷத்திரக் குறிமட்டுமிருந்தால் அவர் மற்றை யோரின் ஆதரவினால் செல்வந்தரா வார் என்பதைக் குறிக்கும். இத்தகை யோர் முதலில் ஏழைகளாயிருந்தால் தங்கள் அபிலாசைக்கேற்றபடி திடீ ரெனத் தங்களுக்குத் தோன்றும். புதிய நல்ல யோசனையினால் முன்னேற்ற மடைவார்கள். அதாவது, புதிதாய் உதிக்கும் அந்த நல்ல யோசனை அவர் களை முன்னேற்றத்தில் கொண்டு போய்விடும்.

ஒருவர் கையில் சதுரம் காணப்

# ரேகைகளும் கிரகங்களும்

பட்டால் அது சாத்மீகமும் நிதானமும் உடையவர் என்பதை அது குறிப்ப தாகும். அவருக்கு அதிகாரமும் செல்வாக்கும் இருக்கும். அவர் தன்னடக்கம் உடையவராதலால், தனக்குக் கிடைக்கும் பெரும் இலாபத் தினாலும் கீர்த்தியினாலும் மதிமயங் காமல் இறுமாப்பும் கர்வமும் அற்ற வராயிருப்பர்.

சக்தி





ஒருவர் கையில் முக்கோணம் அமைந்திருந்தால், அவர் தனது புத்தி சாதுர்யத்தினால் கெட்டிக்காரராயும் ராஜீய விடயங்களில் வீரமுடைய வராயும் விளங்குவார் என்பதை அது குறிப்பதாகும்.

ஒருவர் கையில் குருமேட்டில் வலைக்குறி இருந்தால், அது ஆகாசக் கோட்டை கட்டுபவராயும், வீண் தட புடல் செய்பவராயும், தனக்கில்லாத தெல்லாம் இருப்பதாய் பெருமை பாராட்டுபவராயும், தீயொழுக்கம் உடையவராயும் இருப்பார். என்பதைக் காட்டும். பொதுவாக வலைக்குறி சுக்கிரமேட்டிலிருப்பது அவருக்கு நன்மை தரும். இதிலிருந்துதான் சக்தி வேலைப் பார்க்க வேண்டும்.

ஒருவர் கையில் தீவுக்குறி காணப் பட்டால், அது அவர் அபிவிருத்தி அடைவதையும், நண்பர்களால் அல்லது உறவினர்களால் பாழடைந்து போன செய்தியையும் குறிப்பதாகும். வட்டமான ரேகை ஒரு புள்ளியுடன் அமைந்திருந்தால், சித்திரம் வரை வதால் அவருக்குக் கீர்த்தியுண்டாகும் என்பதை அது விளக்குவதாகும்.

ஒருவர் கையில் பிறை போன்ற இரேகைக்குறி மிகச்சிறிதாய் அமைந் திருந்தால், அது நன்மை பயவாது. ஆனால், குரு மேட்டைச் சுற்றி மாலை போல் மெல்லிய இரேகையாக அது அமைவது சிலாக்கியமானது. இந்த இரேகையை சாலமன் ரேகை என்று மேல் நாட்டார் சொல்லு கின்றனர். சாலமன் என்னும் அரசனுடைய கையில் இந்த வட்டப்பிறை ரேகைக் குறி சிறப்புடன் விளங்கியதாம். அவ் வரசன் திரிகால ஞானியாக மிகப் பெருமையுடன் வாழ்ந்தான். இந்த ரேகைக்குறியே நம்மக்களில் அனேக ருடைய கையில் அமைந்திருப் பதை நான் பார்க்கிறேன். இந்த ரேகைக்கு வல்லமை அதிகம்என்பதை இந்த ரேகையை உடையவர்கள் அறிந்தி ருப்பது அபூர்வமே (தொடரும்)

# ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறுமாறு நேட்டோ படைகளுக்கு கர்சாய் உத்தரவு



ஆப்கானிஸ்தானை விட்டு நேட்டோ படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் உத்தரவிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளை ஒழிப்பதற்காக அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் முகாமிட்டுள்ளன.

சமீபத்தில் இயந்திர துப்பாக்கியுடன் நுழைந்த அமெரிக்க வீரர் ஒருவர் தன் கண்ணில்பட்டவர்களை எல்லாம் சரமாரியாக சுட்டுத் தள்ளினார்.

இந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 16 பேர் பலியாகினர்.

எனவே ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேற வேண்டும் எனக்கூறி தலைநகர் காபூல் உட்பட பல பகுதிகளில் மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.


இந்நிலையில் ஆப்கான் அரசு தலிபான் பிரதிநிதிகளுடன் அமெரிக்க இராணுவத் தரப்பில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.

இதை தலிபான்கள் நிராகரித்து விட்டனர். மேலும் அமெரிக்க படைகள் மீது ஆப்கான் அரசும் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து கிராமங்கள் மற்றும் பின்தங்கிய மலையோர பகுதிகளில் இருந்து நேட்டோ படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் ஜனாதிபதி கர்சாய் உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# தூக்குத்தண்டனையைவிட சிறைக்குச்செல்வதே மேலானது

## கிலானி தெரிவிப்பு



என்னைப் பொறுத்தவரையில் தூக்குத் தண்டனையை விட சிறைக்குச் செல்வதற்கே நான் தயார் என பாகிஸ்தான் பிரதமர் ஹிலானி தெரிவித்துள்ளார்.

ஹிலானி மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரித்து வருகிறது. இந்நிலையில் பகவல்பூர் மாவட்டத்தின் மால்சி நகரில் கட்சியினர் இடையே ஹிலானி பேசியுள்ளார்.

அப்போது அவர் கூறியதாவது, வழக்குகளை சந்திப்பதில் இருந்து ஜனாதிபதிக்கு நாடாளுமன்றம் விலக்களித்துள்ளது. நான் அதை மீறினால் அரசியல்சட்டத்தை மீறியவன் ஆவேன்.

அரசியல் சட்டத்தை மீறுவதற்கு பிரிவு 6 இன் கீழ் மரணதண்டனை விதிக்கலாம் எனக்கூறப்பட்டுள்ளது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் 6 மாதம் வரை சிறைத்தண்டனை கிடைக்கலாம். என்னைப் பொறுத்தவரை தூக்குக் கயிற்றை சந்திப்பதைவிட சிறைக்குச் செல்லவே நான் தயாராகவுள்ளேன் என்று தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆப்கானில் தற்கொலைப்படை தாக்குதலில் 13 பேர் உயிரிழப்பு


(காபூல்)

ஆப்கானிஸ்தானில் வீதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 13 பேர் பலியாகினர். ஆப்கானின் கந்தகார் மாகாணத்தில் திராவூத் மாவட்டத்தில் வீதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் நான்கு பெண்கள், 9 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். இத்தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர்.

நேற்று முன்தினம் தான் அருகே உள்ள ஹேறாம்லாண்ட் மாகாணத்தில் நடந்த தற்கொலைப்படை தாக்குதலில் 9 பேர் பலியாகினர். இதற்கிடையே காபூல் நகருக்கு அமெரிக்க இராணுவ அமைச்சர் லியோன்பெனிட்டா திடீர் வருகை தந்துள்ளார். இந்த நேரத்தில் தற்கொலைப்படை தாக்குதல் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# போர்மூண்டால் இரக்கம் வேண்டாம்; எதிரிகளை ஒழித்துக்கட்டுங்கள்

## கிம் ஜாங் ஆவேசம்



போர் என்று வந்துவிட்டால் இரக்கம் காட்டவேண்டாம். எதிரிகளை ஒழித்து கட்டுங்கள் என்று வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன் ஆவேசமாக பேசியுள்ளார்.

தென்கொரியா, வடகொரியா நாடுகளுக்கு இடையேயான மோதல் அதிகரித்து வருகின்றது. தென்கொரியா ஜனநாயக ரீதியில் மிக வேகமாக செய்றபடுவதுடன் சர்வதேச நாடுகளிடம் நல்ல உறவை வைத்துள்ளது.

ஆனால் வடகொரியாவில் சர்வாதிகார ஆட்சி நடைபெறுவதாலும் இணு ஆயுதங்களை பகிரங்கமாக தயாரிப்பதாலும் கடும் கண்டனத்தை சந்தித்து வருகின்றது.

இதனையடுத்து நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்த இராணுவம், விமானப்படை, கப்பல்படை ஆகிய மூன்றும் இணைந்து போர் ஒத்திகை நடத்த புதிய தலைவராக பதவியேற்றுள்ள கிம் ஜாங் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி மூன்று படைகளும் இணைந்து எதிரி நாட்டு கப்பல் மீது தாக்குதல் நடத்துவது போன்று ஒத்திகை நடத்தப்பட்டது. இந்த பயிற்சியின் போது கிம் பேசுகையில்,

போர் என்று வந்துவிட்டால் இரக்கம் காட்ட வேண்டாம். எதிரிகளை ஒழித்துக் கட்டுங்கள் என்று ஆவேசமாக கூறியுள்ளார்.

ஆனால் இராணுவ படைகளின் கூட்டுப் பயிற்சி எப்போது நடந்தது. எங்கு நடந்தது என்ற தகவல் வெளியிடப்படவில்லை.(அ-2)

# சிரிய தொடர் கலவரத்தையடுத்து ஆயிரம் பேர்வரை முகாமில் தஞ்சம்

(அங்காரா)

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக நடைபெற்று வரும் கலவரத்தில் இதுவரை 9 ஆயிரத்து 113 பேர் பலியாகி உள்ளனர். அவர்களில் ஆறு ஆயிரத்து 645 பேர் பொதுமக்கள் ஆவர்.

கலவரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருந்தும் போராட்டக்காரர்கள் மீது சிரிய இராணுவம் தொடர்ந்து துப்பாக்கி சூடு மற்றும் குண்டு வீச்சு நடத்தி வருகின்றது. இட்லிப் நகரில் பொதுமக்கள் கொன்று குவிக்கப்பட்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் 23 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. அவர்களின் கண்கள் கட்டப்பட்டுள்ளன.

கைகளில் விலங்கு பூட்டப்பட்டு இருந்தது. அவர்களை கொன்று இட்லிப் நகரின் தெற்குப் பகுதியில் வீசப்பட்டிருந்தன. இதேபோன்று ஹோம்ஸ் நகரின் பல பகுதிகளிலும் பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர்.

எனவே இட்லிப், ஹோம்ஸ் நகரில் இருந்து பொது மக்கள் வெளியேறி வருகின்றனர். அவர்கள் துருக்கி நாட்டில் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

ஹாடாய் மாகாணத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் மட்டும் ஆயிரம் பேர் துருக்கியில் உள்ள அகதிகள் முகாமில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை அங்கு மொத்தம் 14 ஆயிரத்து 700 பேர் அகதிளாக உள்ளனர். இந்த தகவலை துருக்கி வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் செல்கக் உனால் நிருபர்களிடம் தெரிவித்தார். (அ-2)



கடந்த ஆண்டு சிரியாவில் அரசுக்கு எதிராக நடந்த போராட்டத்தில் கொல்லப்பட்ட மக்களின் நினைவாக இந்தாண்டும் போராட்டக்காரர்கள் சிரிய ஜனாதிபதி அல் ஆசாத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து போ ராட்டம் நடத்தியதைப் படத்தில் காணலாம்

## உலக தரிசனம்

# சிரியாவில் தொடரும் வன்முறைக்கு அரசியல் தீர்வே சாலச்சிறந்தது

## பான் கீ மூன் தெரிவிப்பு



சிரியாவில் நிலவும் தொடர் வன்முறை சம்பவம் கவலை அளிக்கிறது. பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக தீர்வு காணவேண்டும் என ஐ.நா பொதுச்செயலர் பான்கீ மூன் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்திற்கு எதிராக மக்கள் புரட்சி ஏற்பட்டு ஒருவருடம் நிறைவுற்றது. எனினும் அங்கு நிலைமை மோசமடைந்து வருகிறது.

இது குறித்து அவர் கூறுகையில்.

சிரியாவில் அரசியல் ரீதியாக பேச்சுவார்த்தைநடத்திபிரச்சினையை தீர்க்கவேண்டும். இராணுவத்தால் அல்ல சிரியாவில் இதுவரை 8 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். சிரியா நிலைமை கவலையளிப்பதாக உள்ளதாகக் கூறினார்.

இதற்கிடையே இந்நிலைவரம் குறித்து அரபு லீக் அமைப்பின் தூதராக பேச்சுவார்த்தை நடத்திவரும் முன்னாள் ஐ.நா.பொதுச்செயலர் கோபி அனான் கூறுகையில்,

சிரியா விவகாரத்தில் சர்வதேச நாடுகள் ஒத்துழைப்புத் தரவேண்டும். அங்கு முன்னர் இருந்த அமைதி நிலைமை நீடித்து மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றார். (அ- 2)

# பங்குனி மாத இராசி பலன்கள்

# 14.03.2012-12.04.2012




மிருகசீரிடம் 3, 4, பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்

**நம்பிக்கைகள் நடைபெறும்!**

**அனைத்துத்துறைகளிலும் வல்லமை பெற்று திகழும் மிதுன இராசி நேயர்களே!**

சரளமாகப் பேசும் சுபாவமும், வேகமாக நடக்கிற ஆற்றலும் உங்களுக்கு உண்டு. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழியை உணர்ந்து உடலை மிகவும் பேணி காப்பதில் வல்லவர்களாக இருப்பீர்கள். இலக்கிய இரசனை மிக்க நீங்கள் யாரோடும் பேசினால் அடுத்த நிமிடம் அவர்கள் உங்கள் சொல்லுக்குக் கட்டுப்படுவர்.

உங்களுக்கு இந்தப் பங்குனி மாத கிரக நிலைகளை ஆராந்து பார்க்கும்போது மீண்டும் அர்த்தாஷ்டம சனியின் பிடியில் சிக்கும் சூழ்நிலை அமைகிறது. சனி இப்பொழுதுதானே விலகியது, மீண்டும் சனி வந்து விட்டதா? என்று நீங்கள் நினைக்கலாம். என்ன செய்வது? ஒரு சில சமயங்களில் கிரகங்கள் வக்ர நிலையை அடையும் பொழுது பழைய பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கும். பணத்தேவைகள் போதுமானளவு பூர்த்தியாகாது.

மனதளவில் செய்ய நினைத்த ஒருசில காரியங்களில் தாமதம் ஏற்படும். மக்கள் செல்வாக்குப் பெற்றவர்களாயிருந்தாலும் சிக்கல் வரும் போது தெய்வ வழிபாடுகளை மேற் கொண்டால்தான் திருப்தியான வாழ்க்கை அமையும். சுய ஜாதகத்தில் தெசா புத்திக்கேற்ப சிறப்பு வழிபாடுகளை தேர்ந்தெடுத்து மேற்கோள்வதோடு வாரந்தோறும் சனீஸ்வர வழிபாட்டை மேற்கொண்டால் சங்கடங்களிலிருந்து விடுபட இயலும். பதவி மாற்றங்கள் தவிர்க்க முடியாததாக அமையும்.

மாதத் தொடக்கத்தில் செவ்வாய் வக்ரம் பெறுகிறார். பன்னிரண்டில் கேது சஞ்சரிக்கிறார். மாதக்கடைசியில் இராசிநாதன் புதன் உச்சம் பெறப் போகிறார். எனவே வளர்ச்சியும் தளர்ச்சியும் மாறிமாறி வரும் என்பதால், எந்தக் காரியத்தையும் கைகூடி வரும் போதே முடித்து விடுவது நல்லது.

மார்ச் 26 ஆம்திகதி கன்னி இராசியில் சனி சஞ்சரிக்கப் போகிறார். மீண்டும் அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கம் உருவாகிறது. எனவே, எதிலும் கூடுதல் கவனம் தேவை. கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்திக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் சென்றால்தான் ஆதாயம் கூடும்.

மார்ச் 27 ஆம்திகதி இடப இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்க போகிறார். 5, 12-க்கு அதிபதி பன்னிரண்டில் சஞ்சரிக்கும்போது பிள்ளைகள் வழியில் விரயங்கள் ஏற்படலாம். பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகள் நடைபெறும் நேரமிது. கல்யாண முயற்சிகள் செய்தாலும் திடீரென கைகூடும் வாய்ப்பு உருவாகலாம்.

ஏப்ரல் 9 ஆம் திகதி மீன இராசியில் புதன் உச்சம் பெறப்போகிறார். இராசிநாதனாகவும் சுகாதிபதி யாகவும் விளங்கும் புதன் உச்சம் பெறுவதால் ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லைகள் ஏற்பட்டு அகலும். மருத்துவத்திற்கு என்று ஒரு தொகையை செலவிட நேரிடலாம். வாகன மாற்றம் செய்யும் எண்ணம் மேலோங்கும். மாமன், மைத்துனர் வழியில் அனுசரித்துச் செல்வதன் மூலமே எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்ள இயலும். பொறுமை உங்களுக்கு பெருமை சேர்க்கும்.

இந்த மாதம் சனிக்கிழமை தோறும் விநாயகப்பெருமான் வழிபாட்டையும் அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

இம்மாதம் மூன்று கிரகங்கள் வலிமை இழப்பதால் முன்னேற்ற பாதையில் தடைகள் ஏற்பட்டு அகலும். அன்பாகப் பேசி ஆதரவுக் கரம் நீட்டுபவர்களை அனுசரித்துச் சென்றால்தான் இந்தமாதம் பொன் கொழிக்கும் மாதமாக அமையும். கணவன்- மனைவிக்குள் கனிவு கூட விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. அரசியல் துறையில் இருப்பவர்களுக்கு பொறுப்புக்களில் திடீர் மாற்றம் ஏற்படலாம். மாதக் கடைசியில் ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தி ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்ளுங்கள். சுயஜாதகத்தில் செவ்வாய் மற்றும் சனி புத்தி நடப்பவர்கள் சிறப்பு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

# சிவல்புரி சிங்காரம்

புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

**விரயங்கள் அதிகரிக்கும்!**

**தியாக மனப்பான்மை கொண்டு தித்திக்கும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் கடக இராசி நேயர்களே!**

ஒரு காலத்தில் உங்களிடம் செல்வாக்கு மிகுந்து இருக்கும். மற்றொரு காலத்தில் செல்வம் மிகுந்து இருக்கும். உறவினர்களுக்கு உதவுவதை காட்டிலும் நண்பர்களுக்கு உதவுவதில் அதிக பிரியம் கொள்வீர்கள். பழக்கத்திற்கு இனிமையானவர்களாக இருப்பதால் [illegible]க்கும் இடங்களில் எல்லாம் உங்களுக்கு நட்பு முளைக்கும். ஆன்மீகத்தில் அடியெடுத்து வைக்கும்போது ஆச்சரியப் படத்தக்க வாழ்வு அமைவதை அனுபவத்தில்தான் கண்டு கொள்வீர்கள்.

உங்களுக்கு இந்த பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது இராசிநாதன் சந்திரன் இராகுவுடன் கூடி சஞ்சரிப்பதாலும் யோகம் தரும் செவ்வாய், வக்ர இயக்கத்தில் இருப்பதாலும், திடீர் திடிரென மாற்றங்கள் உருவாகலாம். பணப்புழக்கத்தை பொறுத்தவரை குறைவிருக்காது என்றாலும், விரயங்கள் கூடுதலாக இருக்கும். வீடுகளை பழுது பார்க்கும் சூழ்நிலையோ அல்லது வீடு கட்டும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஆழ்த்துளைக்கிணறு போடுவது முதல், புதிய கதவு அமைப்பது வரை ஒருமுறைக்கு ஒருமுறை வேலை செய்யும் சூழ்நிலை உருவாகும்.

என்ன இருந்தாலும், சனி வக்ர இயக்கம் அடைகிறார். அதோடு சகாய ஸ்தானத்தில் வந்து சூரியனைப் பார்க்கப் போகின்றார். பகை கிரகங்களின் பார்வை பதிகிறது. இதனால் உறவினர்களிடம் நீங்கள் உள்ளன்போடு நடந்துகொண்டாலும், பகையை உருவாக்கும். எனவே, சனி பகவானுக்குரிய கருநிற காகம்ஏறிகாசினி தன்னைக் காக்கும் என்ற சனி கவசத்தைப்பாடி எள் தீபமேற்றி முறையாக வழிபாட்டை மேற்கொண்டால், முன்னேற்றத்தில்-ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும்.

இதுவரை துலாம் இராசியில் வக்ரமாக இருந்த சனிபகவான் மார்ச் 26 ஆம் திகதி கன்னி இராசிக்கு பின் நோக்கி செல்கிறார். அந்த இடம் உங்களுக்கு வெற்றிகள் ஸ்தானமாகும். அதில் சனி சஞ்சரிக்கும் போது எதிலும் வெற்றிபெற போராட்டத்தையே சந்திக்கவேண் டிய சூழ்நிலை உருவாகலாம். பாகப் பிரிவினைகளுக்கான பஞ்சாயத்துக்கள் நடைபெறலாம். சகோதர வழியில் ஒரு விரயத்தை சந்திக்க நேரிடும்.

மார்ச் 27 ஆம் திகதி இடப இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கிறார். கேதுவுடன் சுக்கிரன் கூடுவதால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். வெளிநாட்டு பயணத்தில் விருப்பம் கூடும். பெண்வழி பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். தொழில் மாற்ற சிந்தனைகளை முக்கிய புள்ளிகளிடம் எடுத்துரைத்து முடிவெடுப்பீர்கள். கடிதம் கனிந்த தகவலைத் தரும்.




புதன் உச்சம் பெறுவது நன்மைதான். ஏப்ரல் 9 ஆம் திகதி மீன இராசியில் உச்சம் பெறுகிறார். இதன் விளைவாக விபரீதஇராஜ யோகம் செயற்படப் போகிறது. பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். புதியவர்களின் சந்திப்பால் ஒப்பந்தங்கள் வந்து கொண்டே இருக்கும். கட்டிட விற்பனையால் இலாபம் உண்டு. மாமன் வழியில் ஒரு மங்கல நிகழ்ச்சி நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது. சேமிப்பு உயரும் நேரமிது.

இந்த மாதம் அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். இன்பங்கள் இடைவிடாது வந்து கொண்டே இருக்கும்.

இந்த மாதம் இராசிநாதன் சுக்கிரன் உச்சம் பெற்று மாதம் தொடங்குவதாலும், செவ்வாய் சனி வக்ரம் பெறுவதாலும் குடும்பத்தில் பெரியவர்களை கலந்தாலோசித்து செய்வதன்மூலம் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும். உடன் பிறப்புக்களால் எதிர்பார்த்த காரியம் ஒன்று தாமதப்படலாம். பதவியில் இருப்பவர்களுக்கு திடீர் மாற்றங்கள் உருவாகலாம். கணவன்- மனைவிக்குள் அனுசரித்து செல்வதே அனுகூலத்தைத் தரும். மாதக் கடைசியில் விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ் வீர்கள். அனுமன் கவசம் பாடி வழிபாடு செய்தால் அமைதி கிடைக்கும்.

** ** **

(தொடரும்)

# ஹெரோயின் வைத்திருந்த நபருக்கு மரண தண்டனை

## கொழும்பு நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

6.4 கிராம் ஹெரோயினை தன்வசம் வைத்திருந்த போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கிரிவல முதலிகே சமிந்த எனப்படும் நபருக்கே நீதிமன்றம் இவ்வாறு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.


2007 மார்ச் 14 ஆம் திகதி பேலியகொடையில் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர் மீது 6.4 கிராம் ஹெரோயின் தன்வசம் வைத்திருந்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாக சட்டமா அதிபர் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

நீண்ட விசாரணையின் பின் சந்தேக நபர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பத்மன் சுரசேன மரண தண்டனை விதித்தார்.

மேலும் இந்த வழக்கில் பொய்ச்சாட்சி கூறிய ஜூட் வசந்த என்பவருக்கு 20 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிட விதித்த நீதிபதி அதனை செலுத்தத் தவறின் மேலதிக ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனவும் தீர்ப்பளித்தார். (அ-7)

# எரிபொருள் பிரச்சினையிலிருந்து மீள்வதற்கு மாற்றுவழி காணப்படும்

## அமைச்சர் பசில் தெரிவிப்பு



அமெரிக்க டொலரின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கம் தலையிட மாட்டாது. எனினும் டொலரின் பெறுமதி விரைவில் சரி செய்யப்படும் என பொருளாதார அபி விருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியிலும் இவ்வாறான நிலைமையே காணப்பட்டது. ஆனால், குறித்த நிலைமை பின்னர் சரி செய்யப்பட்டது. அதுபோன்ற நிலையே தற்போது ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு ஏற்ற வகையில் சரி செய்யப்படும் என அவர் குறிப்பிட்டார்.

ஈரான் எரிபொருளுக்கு அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள தடையினால் ஏதாவது பிரச்சினை இலங்கைக்கு ஏற்படுமா என ஊடகவியலாளரொருவர் வினவியதற்கு இந்தப் பிரச்சினை இலங்கைக்கு மாத்திரமானதல்ல. இந்தியா, சீனா உள்ளிட்ட பல நாடுகளுக்கு இதனால் பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்த தடையினால் உலக நாடுகளில் பெற்றோலின் விலையே அதிகரிக்கும் என தெரிவித்தார்.

அத்துடன் ஆசிய நாடுகளின் பொருளாதாரத்திலும் இதனால் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக மாற்று வழி காணப்படும். ஆனால், ஈரானிலிருந்து தொடர்ந்து பெற்றோல் இறக்குமதி செய்யப்படும் எனவும் குறிப்பிட்டார். (அ-7)

# டுபாய் பிரஜைகளின் சடலங்கள் தாயகத்துக்கு அனுப்பப்பட்டன

வத்தளையில் மரணமான ஐக்கிய அரபு இராச்சியத்தினுடைய பிரஜைகள் இருவரின் சடலங்கள் நேற்றுக் காலை 10 மணிக்கு விமானத்தில் எடுத்துச் செல்லப்பட்டன. அரசாங்கத்துக்கு விடுக்கப்பட்ட விசேட வேண்டுகோளுக்கு அமைய பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்த தாய் மற்றும் மகனது சடலங்களை அவர்களின் நாட்டுக்கு எடுத்துச் செல்ல வென வெளிவிவகார அமைச்சு விமானம் ஒன்றை அனுப்பி வைத்தது.

உடல் நிலை தேறி வரும் அல் மஸ்றௌவி மற்றும் அவரது உறவினர்கள் இந்த சடலங்களை எடுத்துச் செல்லும் விமானத்தில் பயணம் செய்கின்றனர் என ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சின் நடவடிக்கை பணிப்பாளர் ஹமட்சாய்ட் அல்சாம்ஸி கூறினார்.

இந்த மரணங்களுக்கான காரணங்களை கண்டறிவதற்கான விசாரணைகளை இலங்கை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார். இலங்கையிலுள்ள ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதரகம் இந்த விசாரணைகளை உன்னிப்பாக அவதானித்து வருகின்றது எனவும் தெரிவித்தார். (அ-7)

# கையெழுத்து சஞ்சிகைப் போட்டி

உலக புத்தக தினத்தை முன்னிட்டு வலி. கிழக்கு பிரதேச சபையினால் கையெழுத்து சஞ்சிகை போட்டி நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டியானது வலி. கிழக்கு பிரதேச எல்லைக்குட்பட்ட சகல பாடசாலைகளிலும் வகுப்பு ரீதியாக இடம்பெறவுள்ளது. இப்போட்டியினூடாக பிரதேச மாணவர்களின் திறன் விருத்தியடைவதுடன் கூட்டாகச் சேர்ந்து இயங்கும் பண்பும் அதிகரிக்கும். வகுப்பு ரீதியாக தயாரிக்கப்படும் சஞ்சிகைகள் வகுப்பாசிரியர், அதிபர் ஆகியோரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் வலி. கிழக்கு பிரதேச சபைக்கு அனுப்பும் படி புத்தூர் வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் கேட்டுள்ளார்.

சிறந்த சஞ்சிகை வகுப்பின் அடிப்படையில் உப அலுவலகப் பிரிவு ரீதியாகவும் பிரதேச சபை ரீதியாகவும் தெரிவு செய்யப்படும்.

இப்போட்டிகள் தொடர்பான உரிய அறிவுறுத்தல்கள் பாடசாலை அதிபர்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



சுதேச மருத்துவ மாணவர் சங்கத்தினர் பல கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கம் மற்றும் பல்கலைக்கழக முகாமைத்துவம் ஆகியவற்றிற்கு எதிராக ராஜகிரிய ஆயுர்வேத வைத்தியசாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.

# மகளிர்தின விழாவும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

வராகி கொக்குவில் மேற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு மகளிர் தின போட்டி விழாவும் கண்காட்சியும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கத் தலைவி திருமதி திருநாவுக்கரசு சீதாலட்சுமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன், சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைப்பாளர் அ.ரவீந்திரதாசன், நல்லூர் செயலக திட்டப் பணிப்பாளர் எஸ். சுரேந்திரநாதன், மீள் எழுச்சித்திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் சா. சுதர்சன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

# இளங்கலைஞர் மன்றத்தின் இரண்டாம் நாள் இசைவிழா

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நடத்தும் இசை விழாவில் இரண்டாம் நாளான இன்று காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை சற்குரு ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் 165 ஆவது ஆராதனை விழாவுடன் ஆரம்பமாகவுள்ளது. இதன் போது தியாகராஜா சுவாமிகளின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் ஈழத்தின் மூத்த இளங்கலைஞர்களும் புகழ் பூத்த மூத்த அணி செய் கலைஞர்களும் இணைந்து வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து நாதாஞ்சலியில் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை ஈழத்தின் முதுபெரும் நாதஸ்வர தவில் வித்துவான்களும் இளம் முன்னணி நாதஸ்வர தவில் கலைஞர்களும் இணைந்து வழங்குவர்.

பின்னர் பிற்பகல் 1.30 மணிமுதல் 3 மணிவரை தியாகராஜ சுவாமிகளின் க்ருதிகள் இசை அர்ச்சனை இடம்பெறவுள்ளது. (அ-7)


45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

சபீண்டிகரண அழைப்பும்

| மண் மகிழ | | விண்நெகிழ |
|---|---|---|
| 05 . 04 . 1974 | | 31 . 01 . 2012 |



அமரர் செல்வராசா சத்தியசீலன்

எமது குடும்பத் தலைவரின் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வருகை தந்து ஆறுதல் கூறி சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (17.03.2012) சனிக்கிழமை மு.ப.10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும் -

7/3, கற்குளலேன்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(7728)

# தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள் கொடூரத்தின் முக்கிய சாட்சியம்

## பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டும் என்றது பிரித்தானியா

(கொழும்பு)

**இலங்கையின் கொலைக்களங்கள்- தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள் ஆவணப் படம் வெளியிடப்பட்டுள்ளது. போர்க்குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் இலங்கைக்கெதிரான தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நிறைவேற்ற வேண்டும் என்றும் பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர், அலிஸ்ரெயர்பேர்ட் கருத்து வெளியிடுகையில், சனல் 4 தொலைக்காட்சியானது, இலங்கையில் இடம்பெற்ற மோசமான மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணைக்கு ஆதரவாக முக்கியமான சாட்சியங்களை அனைத்துலக கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

அனைத்துலக சமூகத்தின் கோரிக்கைகளுக்கிணங்க, இறுதிக்கட்ட யுத்தத்தின் போது, இருதரப்பினாலும் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக நம்பகரமானதும் சுதந்திரமானதுமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இதனடிப்படையிலேயே, போர்க்குற்ற விசாரணைகளுக்கான தேவையை சனல்4 ஆவணப்படம் மீளவும் வலியுறுத்தியுள்ளது. இலங்கையில் நீதி,நல்லிணக்கம் மற்றும் அரசியல் முன்னேற்றங்களை உறுதிசெய்யும் நகர்வுகளில் அனைத்துத் தரப்பினரும் பங்கேற்க வேண்டும்.

அமெரிக்காவினால் கொண்டு வரப்படும் தீர்மானமானது, இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஊக்குவிக்கவும், பொறுப்புக்கூறுதலை உறுதிப்படுத்தவும் ஐ.நா. மனித உரிமை பேரவை நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட் தெரிவித்துள்ளார். (அ-7)

## முறைசாரா கல்வி பயிற்சிநெறி ஆரம்பம்

வலிகாம கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படுகின்ற உடையமைத்தல் பயிற்சிநெறி யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பித்தவர்களும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் ரி.லோகராஜா கேட்டுள்ளார். (அ-78)

# மேசையில் கொக்கக்கோலாவை வைத்துவிட்டு அமெ.பொருட்களுக்கு தடைவிதிக்க முடியுமா?

## கருணாரட்ன கிண்டல்

(கொழும்பு)

தனது மேசையில் குடிப்பதற்கு கொக்கா கோலா பானத்தை வைத்துக் கொண்டு ஏகாதிபத்திய நாடுகளின் உற்பத்தியை ஒதுக்குவோம் என்றும் தடைசெய்ய வேண்டும் என்றும் கூறுகிறார் விமல் வீரவன்ச. இப்படியான முட்டாள்களை தன்னகத்தே கொண்டது தான் இந்த அரசாங்கம் என புதிய இடதுசாரி முன்னனியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

ஹட்டனில் இடம்பெற்ற விலைவாசி உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஏகாதிபத்திய நாடுகள் இலங்கையை நசுக்க முற்படுகின்றன என்கிறார் விமல் வீரவன்ச. கே.எப்.சி. மெக்டொனால்ட் போன்ற உணவகங்களுக்கு செல்வதை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனக்கூறுவது அவருக்கே வேடிக்கையாக இல்லையா.

இன்று மக்கள் படும்பாட்டில் அவ்வகையான உணவகங்களுக்காக செல்கின்றனர்? இவர் அங்கு செல்வதால்தான் அப்படி கூறுகிறார்.

மேசையில் கொக்கோகோலா பானத்தை வைத்துக்கொண்டு ஏகாதிபத்திய நாடுகளின் உற்பத்திகளை ஒதுக்க வேண்டும் என்று கூறுகிறார்.

இப்படியான முட்டாள்களின் பேச்சுக்களை நாம் செவிமடுக்க வேண்டியதாக இருக்கின்றது. நாட்டின் நிதி கொள்கை சரியாக இருந்திருந்தால் இப்படி இஷ்டப்படி விலைகளை உயர்த்த வேண்டியதில்லை. விலைகளை உயர்த்தி மக்கள் வயிற்றை எரியச் செய்யும் அரசாங்கம் மறுபக்கம் மக்களை படுகொலை செய்யும் கலாசாரத்திலும் இறங்கியுள்ளது. இந்த கொலைகார அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்புவதற்கு மக்கள் ஓரணியில் திரள வேண்டும் எனவும் தெரிவித்தார். (அ-7)

# கூட்டணி நிலை குலையாமல் இருந்திருந்தால் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ந்திருக்கும்

## அமைச்சர்- தயாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்றோர் வழி நடத்திய தமிழர் விடுதலைக்கூட்டணி நிறம் மாறாமல், குணம் மாறாமல், பெயர் மாறாமல், நிலை குலையாமல் இருந்திருந்தால் இந்நாட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகள்,தேவைகள் , அபிலாசைகள் ஓரளவாவது தீர்ந்திருக்கும் என உணவு போஷாக்குத்துறை சிரேஷ்ட அமைச்சர் பி.தயாரத்ன, அம்பாறை மாவட்ட ஜனநாயக தமிழர் பேரவை என்ற புதிய அமைப்பின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இந்நிகழ்வு அம்பாறையிலுள்ள அமைச்சரின் பணிமனையில் கடந்த செவ்வாயன்று நடைபெற்றது. அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேசங்களில் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அமைச்சர் பேசுகையில்,

இறுதியாக வந்த கூட்டமைப்பினர் கூட அடிக்கடி ஜனாதிபதியை சந்தித்தபோதும் பொதுவான பிரச்சினைகள், கலந்துரையாடப்பட்ட விதம் குறைவாகவே உள்ளது.

இதனால்,குறிப்பாக அம்பாறை மாவட்ட தமிழர் தொடர்ந்து சகல விதத்திலும் புறக்கணிக்கப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். தேர்தல் காலங்களில் மட்டும் படையெடுக்கும் தமிழர் தலைவர்களைப்பின்பு காண்பது கஷ்டம்.

கட்சி சாராமலிருந்த அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கமும் அவ்வப்போது தனது போக்கை மாற்றி ஒரு கட்டத்தில் தேர்தலுக்கு முகம் கொடுத்தது.

அது இன்று ஊருக்கு ஒரு சங்கம் என்ற ரீதியில் பிரிந்து கொண்டு செல்வதாக தெரிகிறது. எனவே,ஒட்டுமொத்தமாக தமிழ்மக்கள் நடுத்தெருவில் நிற்பதைக் காணலாம். ஏனைய சிங்கள, முஸ்லிம் இனத்தவர் தொடர்பாக பேசுவதற்கு உரிமைக்குரல் எழுப்புவதற்கு பலர் உள்ளனர்.

ஆனால்,தமிழ் மக்களுக்கு ஏதாவது நடந்தால், யாரும் கதைப்பதில்லை, சுனாமி வெள்ளம் வந்தாலும் வரமாட்டார்கள்.

எனவே நீங்கள் தகைமையான திறமையானவர்களை உள்ளீர்த்து சிறப்பாக செயற்பட வேண்டும். என்னாலான உதவியை மனதார செய்ய சித்தமாயிருக்கிறேன் என்று அவர் தெரிவித்தார். (அ-7)

# ஊழலுடன் தொடர்புடைய அமைப்பாளர்கள் பெயர் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டுகோள்

## அமைச்சர் மைத்திரிபால அறிவிப்பு

ஊழல் தொடர்பான பொலிஸ் முறைப்பாடுகள் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள், மாகாண உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் பெயர்ப்பட்டியலை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளார்.

ஊழல் தொடர்பான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களின் பதவி தொடர்பான பட்டியலை சமர்ப்பிக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் என்ற வகையில் தான் மாவட்ட அமைப்பர்ளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ள்தாகவும் கூறினார்.

இந்த பெயர்ப்பட்டியல் கிடைத்ததும் கட்சியின் மத்திய குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும். மத்திய குழுவால் அவர்கள் மீதான விசாரணை மேற்கொள்ளப்பட்டு உரிய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-7)

## மரதன் ஓட்டப்போட்டி

விநாயகர் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கி வரும் கைதடி தென்கிழக்கு விளையாட்டுக்கழக அங்கத்தவர்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு மேற்படி சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளதாக விளையாட்டுக்கழக தலைவர் கே.கிருபானந்தன் அறிவித்துள்ளார். (அ)





யா/அச்சுவேலி தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வருவதையும் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

உணர்ச்சி வேகத்தில் அறிவாளியும் மடைய னாகிவிடுவான். -காரவான்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எங்கள் உறவுகளின் உயிர்களை காப்பாற்ற உதவுவோம்

எரிபொருள்களுக்கான விலையை அரசு அதிகரித்ததைத் தொடர்ந்து வாழ்க்கைச் செலவு வேகமாக அதிகரிக்கத் தொடங்கிவிட்டது.

எரிபொருள் விலை ஏற்றத்தினால் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், தொழிற்சங்கப் போராட்டங்கள் என எங்கும் குழப்பம் ஏற்பட்டது.

எரிபொருளுக்கான விலையை அதிகரித்தாலும் இந்த அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்த யாரும் துணியமாட்டார்கள் என்பது அரசின் நினைப்பாக இருந்த போதிலும் ஆர்ப்பாட்டங்கள் திடீர் திடீர் என வேகம் எடுத்தன.

எனினும் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் கொண்டுவரப்படுவதை எதிர்த்து தென்பகுதியில் நடந்த ஆர்ப்பாட்டங்கள் எரிபொருள் விலை ஏற்றத்தைக் கண்டிக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஓய்வு கொடுத்தன.

எதுவாயினும் எரிபொருளின் விலை ஏற்றத்தின் ஊடாக துணிச்சல் பெற்ற போராட்டங்கள் இப்போது தொழிற்சங்கப்போராட்டங்களாகதிசைமாறியுள்ளன.

சம்பள முரண்பாடு, பதவியுயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து எழுகை பெற்றுள்ள தொழிற்சங்கப் போராட்டங்கள் நியாயமானதாயினும் அந்தப் போராட்டங்கள்-பணிப்புறக்கணிப்புகள் வடபகுதிக்குப் பொருத்தமா? என்பதை ஒருகணம் சிந்தித்தாக வேண்டும்.

நேற்றையதினம், துணைமருத்துவசேவையாளர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற இந்த போராட்டத்திற்கு நாங்களும் ஆதரவு கொடுத்தாகவேண்டும் என்று வடபகுதியைச் சேர்ந்தவர்கள் கூறுவது நியாயமாயினும், துணை மருத்துவ சேவையை பொறுத்தவரை வடபகுதி நிலைமை வித்தியாசமானது.

இரத்தப் பரிசோதனை ஒன்றை கொழும்பில் செய்வதென்பதும் யாழ்ப்பாணத்தில் செய்வதென்பதும் வேறு நிலைப்பாட்டை கொண்டவை.

கொழும்பில் உன்னதமாக இயங்குகின்ற தனியார் மருத்துவமனைகளும் அதனோடு இணைந்த துணை மருத்துவ சேவைகளும், அரச மருத்துவமனைகளில் இடம்பெறும் பணிப்புறக்கணிப்புக்கு ஈடுகொடுக்கக் கூடியவை. ஆனால் போரினாலும், அரசின் இனப்பாகுபாட்டினாலும் நொந்து கெட்டுபோயிருக்கும் வடபகுதியில் தனியார் துணை மருத்துவ சேவையை பெறுவது முடியாத காரியம் மட்டுமன்றி போதிய ஆய்வுகூட வசதிகளும் இல்லை.

எனவே வடபகுதியில் கடமையாற்றும் துணை மருத்துவ சேவையாளர்கள் மனிதநேயத்துடன் தங்கள் பணியை தொடரமுன்வர வேண்டும்.

உங்கள் பணி உயிர்காக்கும் பணி என்பதால் அதிலிருந்து நீங்கள் இம்மியும் விலக மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

தேசியரீதியில் முன்னெடுக்கப்பட்ட பணிப் புறக்கணிப்புப் போராட்டங்களின் போதெல்லாம் நீங்கள் உங்கள் கடமையை சிறப்புற ஆற்றியதை இந்த மண் ஒருபோதும் மறக்காது.

அந்த நேயத்தை நீங்கள் தொடரவேண்டும். குண்டு வீச்சுக்கும் இனப்படுகொலைக்கும் எங்கள் உறவுகளைப் பறிகொடுத்த நாம் இனிமேல் எந்தக் காரணம் கொண்டும் எங்கள் உறவுகளின் உயிர் இழப்புகளுக்கு அனுமதி வழங்கலாகாது. இதைத்தயவு செய்து கவனத்தில் கொள்ளுங்கள்.

அதேநேரம்வடபகுதிபோக்குவரத்துச்சபையினர் எந்த வித அறிவித்தலும் இன்றி நேற்று திடீரென வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமை ஆழ்ந்த கவலைக்குரியது.

அங்கு அது நடக்கலாம். இங்கு இது வேண்டவே வேண்டாம். ஏனெனில் எங்கள் மக்களுக்கு நாங்கள்தான் துணை.

# அமைச்சர்களின் கருத்துக்கள் இனவாதத்தை தூண்டுகின்றன!

## ஐ.ம.மு. உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணையால் சினம் கொண்டுள்ள அமைச்சர்கள் சிலர் வெளியிட்டு வரும் இனவாத ரீதியான கருத்துக்கள் இனங்களுக்கிடையில் மீண்டும் பிரிவினைகளை ஏற்படுத்தி விடும். அதேவேளை சர்வதேச ரீதியில் இலங்கைக்கு மேலும்நெருக்கடிகளையும் ஏற்படுத்துமென ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பாஸ்க்கரா தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களான விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க மற்றும் இனவாத சிந்தனை கொண்ட அமைப்புக்கள் தெரிவித்து வரும் கருத்துக்கள் தொடர்பில் கவலை வெளியிட்டுவிடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ள பாஸ்க்கரா மேலும் கூறியுள்ளதாவது,

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கைக்கு எதிராக ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணைக்கு எதிரான பிரதிபலிப்புக்களை இலங்கையின் பல இடங்களையும் காணக் கூடியதாயிருக்கின்றது.

இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், கூட்டங்கள் எனப் பல வழிகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அமைச்சர்கள் பலரும் அமைப்புக்கள் பலவும் இனவாதத்தையும் குரோதத்தையும் ஏற்படுத்தும் வகையில் பகிரங்கமாகக் கூறிவரும் கருத்துக்கள் எம்மை பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன.

மீண்டும் ஒரு இனக்கலவரம் ஏற்படும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரித்திருப்பது தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் பாதுகாப்பற்ற நிலை இருப்பதையே எடுத்துக்காட்டுகிறது.

இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலேயே இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணை தமிழ் மக்கள் கொண்டு வரவில்லை அமெரிக்கா தான் கொண்டு வந்துள்ளது.

அரசினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தியே ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டு வரப்படுகின்றது.

தன்னால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக் கூட இந்த அரசினால் நிறைவேற்ற முடியாது என்றால் எப்படி இந்த அரசினால் தமிழ் மக்களுக்கு விமோசனத்தை பெற்றுக் கொடுக்க முடியும்? அதனால்தான் தமிழ் அரசியல் தலைவர்கள் சர்வதேசத்தின் உதவிகளை நாடவேண்டியேற்படுகின்றது.

இலங்கை அரசுக்கு எதிராக ஜெனிவாவில் பிரேரணை கொண்டுவரப் படுவதற்கு இலங்கை அரசின் பொறுப்பற்ற செயல்களே காரணம். தான் விட்ட தவறுகளாலேயே இன்று சர்வதேசத்தின் குற்றவாளிக் கூண்டில் இலங்கை அரசு நிற்கவேண்டியுள்ளது.

அதனை உணராமல் மீண்டும் மீண்டும் தமிழ் மக்களைச் சீண்டுவதும் இனவாதத்தைக் கிளறுவதும் அரசுக்கு எந்தவித மாற்றீடாகவும் அமைந்து விடாது. இன்னும் மரணப்பொறிக்குள் வீழ்த்துவதாகவே அமையும்.

எனவே இனவாதக் கருத்துக்கள் ஆர்ப்பாட்டங்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை கைவிட்டு இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு எவ்வாறு பதிலளிப்பது என ஆக்கபூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் அரசும் அமைச்சர்களும் சிந்திக்க முற்பட வேண்டும். அதைவிடுத்து மீண்டும் மீண்டும் வரலாற்றுத் தவறுகளை செய்ய முற்படக்கூடாது என்றுள்ளது. (எ-11)

# புசல்லாவையில் ஐந்து வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாகின

புசல்லாவ நகரில் பழைய பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள 5 வர்த்தக நிலையங்கள் நேற்று வெள்ளிக் கிழமை நண்பகல் தீக்கிரையாகியுள்ளன.

இவ்வர்த்தக நிலையத் தொகுதி யில் ஏற்பட்ட மின்னொழுக்கே இத் தீவிபத்திற்கான காரணமென பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் இவ்வர்த்தக நிலைய உரிமை யாளர் வர்த்தக நிலையத்தை மூடி விட்டு தொழுகைக்காக பள்ளிவாசலு க்கு சென்றிருந்தபோதே இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பொலிஸார் நகர மக்களின் ஒத்துழைப்புடனும் கண்டியிலிருந்து வரவழைக்கப்பட்ட தீயணைப்பு படையினரின் உதவியுடனும் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

இத் தீ விபத்து ஏற்பட்ட இடத்திற்கு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஸ்ணன், மத்திய மாகாண சபை உறுப்பினர் எஸ். இராஜரட்ணம் மற்றும் உடபலாத்த பிரதேசசபைத் தலைவர், உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டனர். (அ-7)

# எதிர்க்கட்சிகள் நாட்டுக்கு துரோகம் இழைக்கின்றன

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வருவதாக பதில் ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இரண்டு பிரதான எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாட்டுக்கு துரோகம் இழைக்கும் வகையில் செயற்பட்டுள்ளனர்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழு அதிகாரிகளுடன் குறித்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இரகசியமான முறையில் ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் நாட்டுக்குள் பிரவேசித்திருந்தனர்.

இந்த அதிகாரிகளுடன் இரண்டு பிரதான எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இரகசிய சந்திப்புக்களை நடத்தியுள்ளனர். நாட்டுக்கு எதிராக தகவல் திரட்டும் நோக்கில் குறித்த ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

அந்த அதிகாரிகளிடம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இலங்கைக்கு எதிரான தகவல்களை வழங்கியுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# விவசாய அபிவிருத்தி இணைப்புக் கூட்டம்

(ஓமந்தை)

கிளிநொச்சி மாவட்ட விவசாய அபிவிருத்தி இணைப்புக் கூட்டம் நேற்று பிற்பகல் 2 மணிக்கு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் 2012 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்பயிர்ச் செய்கை தொடர்பாகவும் அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக் கூட்டத்தில் மாவட்ட மட்ட உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (எ-11,256)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## ஒவ்வொரு உயிரிலும் கடவுள்



சுயநலமற்ற தன்மையே கடவுள் ஆகும். ஒருவன் செல்வந்தனாக வாழ்ந்தபோதும் சுயநலம் இல்லாதவனாக இருந்தால் அவனிடம் கடவுள் இருக்கிறார்.

ஒரு நல்ல இலட்சியத்துடன் முறையான வழியைக் கைக்கொண்டு தைரியத்துடன் வீரனாக விளங்குங்கள். மனிதனாக பிறந்ததற்கு வாழ்ந்து சென்றபின்னும் ஏதாவது அடையாளத்தை விட்டுச் செல்லுங்கள்.

உங்களுடைய நரம்புகளை முறுக்கேற்றுங்கள். காலம் எல்லாம் அழுது கொண்டிருந்த போதும். இனி அழுகை என்ற பேச்சே இருக்கக்கூடாது. சுயவலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்.

தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதும் தான் எல்லாவழிபாடுகளின் சாரமாகும். ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் நோயாளிகளிடமும் இறைவனைக் காண்பவனே உண்மையான வழிபாடு செய்பவன் ஆவான்.

கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத்தவிர தனியாக வேறு கடவுள் ஒருவர் உலகில் இல்லை.

# அவதூறாக பேசிய இலங்கைத் தூதுவரை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும்

## டி.ராஜா கோரிக்கை

தமிழக எம்.பிக்கள் பற்றி வரம்பு மீறி அவதூறாகப் பேசிய இலங்கைத் தூதர் பிரசாத் கரியவசத்தை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் டி.ராஜா வலியுறுத்தியுள்ளார்.

போர்க்குற்றங்கள் விவகாரத்தில் இலங்கைக்கு எதிராக குரல் கொடுக்கும் தமிழக எம்.பிகளைத் தான் முதலில் விசாரிக்க வேண்டும் என்று இலங்கைத் தூதர் பிரசாத் கரியவசம் ஒரு நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார்.

இதைக்கண்டித்து மாநிலங்களவையில் நேற்றுமுன்தினம் காலையில் தமிழக எம்.பிகள் குரல் கொடுத்தனர்.

இது தொடர்பாக நிருபர்களிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் டி.ராஜா கூறியது.



ராஜீயப் பணிக்காக இந்தியாவுக்கு வந்துள்ள இலங்கைத் தூதர் தமது பதவியின் வரம்பை மீறி தமிழக எம்.பி.க்கள் பற்றி விமர்சித்துள்ளார். இலங்கைக்கு எதிரான தீர்மான விவகாரத்தை நாடாளுமன்றத்துக்கு உள்ளே தமிழக எம்.பிக்கள் எழுப்பி வருகின்றனர். அது தொடர்பாக விளக்கத்தை மத்திய அரசு அளித்துள்ளது.

இந்தியாவின் நிலை பற்றியும் உறுப்பினர்கள் வலியுறுத்தி பேசி வருகிறார்கள். இவை அனைத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமை சார்ந்த விடயம். அதில் தலையிட இலங்கைத் தூதருக்கு யார் அதிகாரம் கொடுத்தது? தமிழக எம்.பிக்களைப்பற்றி ஊடகங்களுக்குப் பேட்டி அளிக்க இவர் யார்? அவரது செயல் கண்டிக்கத்தக்கது. மன்னிப்பு கேட்டால் எல்லாம் சரியாகி விடுமா?

மன்னிப்புக் கேட்டவுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமாதானம் அடைய வேண்டுமா? எங்களுக்கு அவரது மன்னிப்பு போதாது.

வரம்பு மீறிப்பேசிய இலங்கைத் தூதரை உடனடியாக நாட்டைவிட்டுவெளியேற்ற வேண்டும். இலங்கைத் தூதரின் செயல் பற்றி இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணாவைச் சந்தித்து புகார் கொடுத்துள்ளேன் என்று அவர் தெரிவித்தார். (அ-2)

# மத்திய பட்ஜெட் கூட்டத் தொடரை தி.மு.க. மந்திரிகள் புறக்கணிப்பு

(புதுடில்லி)



பாராளுமன்றத்தில் நேற்று மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. பட்ஜெட் கூட்டத்தை மத்திய மந்திரி சபையில் இடம்பெற்றுள்ள தி.மு.க. மந்திரிகள் புறக்கணித்தனர்.

நிதித்துறை இராஜாங்க மந்திரியாக இருக்கும் பழனி மாணிக்கம் மற்றும் மு.க. அழகிரி உட்பட 5 மந்திரிகளும் பட்ஜெட் கூட்டத்தை புறக்கணித்தனர். முன்னதாக நடந்த மத்திய மந்திரி சபை கூட்டத்திலும் தி.மு.க. மந்திரிகள் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தனர்.

இலங்கைக்கு எதிரான ஐ.நா. தீர்மானத்தை ஆதரிக்க வலியுறுத்தியும் இதில் மத்திய அரசு முடிவு அறிவிக்காமல் மௌனம் சாதிப்பதை கண்டித்தும் தி.மு.க. இந்த முடிவை எடுத்ததாக கூறப்படுகிறது. (அ-2)

## பாரதச் செய்தி




தலைநகர் லக்னோவில் நேற்று முன்தினம் நடந்த விழாவில் உ.பியின் புதிய முதல்வராக அகிலேஷ் யாதவ் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் ஜோஷி பதவிப் பிரமாணம் செய்து வைத்ததைப் படத்தில் காணலாம்.

# அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அகற்றினால் தீக்குளிப்பேன்

## கருணாநிதி தெரிவிப்பு

(சங்கரன்கோவில்)

சென்னை- கோட்டூர்புரத்திலுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அகற்றினால் தீக்குளிப்பேன் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

சங்கரன்கோவிலில் நடந்த பொதுக் கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

அப்போது அவர் கூறுகையில், தி.மு.க. ஆட்சி, திராவிட கொள்ளைகளின் ஆட்சி, ஜெயலலிதா தலைமையில் இருக்கக்கூடியது அண்ணா தி.மு.க. ஆட்சி, அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் என்பதில் அண்ணா என்பது இயக்கத்தின் பெயர். திராவிட என்பது வைத்துக் கொண்ட பெயர். அதை வைத்துக் கொண்டு தமிழகத்தில் என்னென்ன கூத்துக்கள் நடைபெறுகின்றன என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ் நாட்டில் அடித்தட்டு மக்கள், சாதாரண மக்கள், சாமானிய மக்கள், கல்வி வாசனையே அறியாத மக்கள் மற்றும் படிப்பது கூடாது என்று தடுக்கப்பட்ட மக்கள், அவர்களை எல்லாம் வாழ வைக்க திராவிடர் இயக்கம் உருவாகியது. அதை உருவாக்கி வளர்த்த பெரியார், அண்ணா போன்றதலைவர்கள் இப்போது இல்லை.

இன்றைய ஜெயலலிதா ஆட்சியில் என்னென்ன செய்தார் என்பதும் உங்களுக்கு தெரியும். ஆட்சிக்கு வந்ததும் வ்ராததுமாக சமச்சீர் கல்வி திட்டத்தை சமாதிக்கு அனுப்ப முயற்சி செய்தார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரால் பாவேந்தர்•செம்மொழி தமிழாய்வு நூலகத்தை இடித்து, துவைத்து, தரைமட்டமாக்கி அதில் இருந்த ஆயிரக்கணக்கான புத்தகங்களை எல்லாம் குப்பைக் கிடங்குக்கு அனுப்பி பாரதிதாசன் புகழுக்கே களங்கத்தை ஏற்படுத்திய அரசுதான் ஜெயலலிதா அரசு. தமிழை உயிராக மதித்த பாரதிதாசன், தேவநேயபாவாணர், பாரதியார் படங்களை அகற்றினார்கள்.

ஒரு ஆட்சி மாறி அல்லது மக்களால் மாற்றப்பட்டு இன்னொரு ஆட்சி வருவது இயற்கை. அப்படி வருகிற போது ஆட்சிக்கட்டிலில் இருப்பவர் கள் முதலில் ஆட்சியில் இருந்தவர் களை மதித்த வேண்டும்.

சென்னையில் அண்ணாவின் பெயரால் அமைக்கப்பட்ட நூற்றாண்டு நூலகத்தை ஆசியாவிலேயே எங்கும் இல்லாத அளவில் கட்டப்பட்ட நூலகத்தை வெளிநாட்டுக்காரர்கள் எல்லாம் பாராட்டி புகழ்ந்த நூலகம் அது. ஆனால், அதை இடித்துவிட்டு மருத்துவமனையாக்கப் போகிறேன் என்று ஜெயலலிதா கூறுகிறார். அண்ணா பெயரால் கட்சி வைத்துக்கொள்ள உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது.

உயர் நீதிமன்றம் , உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டாலும் கூட அதை அகற்றியே தீருவோம் என்று ஜெய லலிதா அடம்பிடிப்பாரேயானால் அந்த நாள் கருணாநிதி தீக்குளிக்கும் நாளாக இருக்கும். அண்ணா நூற்றாண்டு நூலகத்தை நாங்கள் அகற்றியே தீருவோம் என்று ஜெயலலிதா ஆணை யிடுகிறார். எக்காரணம் கொண்டும் திராவிட குறிக்கோளில் இருந்து இடம்மாறி விட மாட்டோம் என்றார் கருணாநிதி. (அ-2)

# பாகிஸ்தானில் இருந்து 200 வழக்கறிஞர்கள் இந்தியா விஜயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்திற்கு வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்த 200 வ்ழக்கறிஞர்கள் அடுத்த வாரம் இந்தியா வரவுள்ளனர். இந்தியா-பாகிஸ்தான் இடையே நீதித்துறையை வலுப்படுத்தும் விதமாக பா[illegible]தான் நாட்டின் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் யாசின் ஆசாத் தலைமையில் 200 வழக்கறிஞர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தியா வருகின்றனர்.

இவர்கள் டில்லி, சண்டிகர் ஆகிய மாநில ஜேகார்ட் வழக்கறிஞர்களை சந்தித்து பேசுகின்றனர். இரு தரப்பிலும் நீதித்துறை குறித்து விவாதிக்கின்றனர். இரு நாட்டு வழக்கறிஞர்களிடையே நல்லுறவு ஏற்படுத்தும் விதமாக இந்தி சந்திப்பு அமையும். பின்னர் 23 ஆம் திகதி இந்தியா-பாகிஸ்தான் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் மாநாடு டில்லியில் இடம் பெறும். இம்மாநாட்டை உயர் நீதிமன்ற நீதிபதி அல்தமாஸ் கபீர் ஆரம்பித்து வைத்து உரையாற்றவுள்ளார். (அ-2)

# ஜெனீவா பிரேரணையை மத்திய அரசு ஆதரிக்க வேண்டும்

## சென்னை விவேகானந்தா மாணவர்கள் போராட்டம்




இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்க வேண்டும் என வலியுறுத்தி நேற்று முன்தினம் சென்னை விவேகானந்தா மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமை குழுக்கூட்டத்தில் இலங்கைக்க எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்துள்ளது. இந்தத் தீர்மானத்திற்கு இந்திய அரசு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என அரசியல் கட்சிகளும் பல்வேறு அமைப்புகளும் குரல் எழுப்பி வருகின்றன.

மத்திய அரசு இந்த விவகாரத்தில் தனது நிலையை தெரிவுபடுத்த வேண்டும் என நாடாளுமன்றத்தில் தமிழக எம்.பிக்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதை வலியுறுத்தி தமிழகத்தில் சட்டக்கல்லூரி மாணவர்கள், வழக்குரைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய அரசு தமிழர்களுக்கு எதிரான நிலையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது. இலங்கையின் போர்க்குற்றம் குறித்து அந்நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தை 22 நாடுகள் ஆதரிக்கும் நிலையில் இந்திய அரசு தனது நிலையை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். மறியலில் ஈடுபட்ட மாணவர்கள் 21 பேரை பொலிஸார் கைது செய்தனர். இதனிடையே ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் 8 பேர் கைது செய்யப்பட்டனர். (அ-2)

# கறுப்புப்பணம் பதுக்கியவர்கள் பெயரை வெளியிட வேண்டும்

## எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

(புதுடில்லி)

வெளிநாட்டு வங்கிகளில் கறுப்பு பணத்தை முதலீடு செய்துள்ள இந்தியர்களின் பெயர்களை வெளியிடும்படி மக்களவையில் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மக்களவையில் நேற்று முன்தினம் விவாதம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பா.ஜ. சிரோமணி அகாலி தளம் சுயேட்சை உறுப்பினர் இந்தர் சிங் நம்தாரி உள்ளிட்டோர் வெளிநாட்டு வங்கிகளில் கறுப்பு பணத்தை முதலீடு செய்துள்ள இந்தியர்கள் யார் என்ற விபரத்தை வெளியிடும்படி வலியுறுத்தினர்.

நம்தாரி பேசுகையில், இந்தியாவில் பெரும்பாலான பெண்கள் தங்கள் கணவர் பெயரை சொல்ல மாட்டார்கள். அதேபோல் கறுப்பு பணம் முதலீடு செய்துள்ளவர்களின் பெயர்களை மத்திய அரசு கூற மறுக்கிறது. அவர்களுக்கும் மத்திய அரசுக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என்று தெரியவில்லை என்று நகைச்சுவையாக கூறினார். இதை கேட்ட உறுப்பினர்கள் மேசையை தட்டி சிரித்தனர்.

சிரோமணி அகாலி தள உறுப்பினர் ரட்டன் சிங் அஸ்னாலா பேசியபோது கறுப்பு பணம் பதுக்கியவர்களின் பெயர்களை வெளியிடும்படி நாமும் பலமுறை வலியுறுத்தி விட்டோம். ஆனால், மத்திய அரசு நீண்ட காலமாக அதை மறைத்து வைத்துள்ளது என்றார். பா.ஜ. உறுப்பினர் பாலகிருஷ்ண சுக்லா பேசுகையில், மத்திய அரசு பல்வேறு துறைகளில் ஊழலில் ஈடுபட்டுள்ளது என்று குற்றம் சாட்டினார். (அ-2)

# சதத்தில் சதம் அடித்து சச்சின் உலக சாதனை

சர்வதேச கிரிக்கெட்போட்டியில் சச்சின் டெண்டுல்கர் தனது நூறாவது சதத்தை அடித்து மாபெரும் உலக சாதனையைப் படைத்தார்.

பங்களாதேஷுக்கு எதிராக நேற்றைய ஆட்டத்தில் சதமடித்தது மூலம் இந்த உலக சாதனையை படைத்தார். சர்வதேச போட்டிகளில் 100ஆவது சதத்தை எட்டிய ஒரேவீரர் சச்சின் மட்டுமே.

கிரிக்கெட்டில் பல சாதனைகள் படைத்த ஜாம்பவான் சச்சினின் 100ஆவது சதம் மட்டும் எட்டாக் கனியாக இருந்தது. கடந்த உலகக் கோப்பையில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் தனது 99ஆவது சதத்தை பூர்த்தி செய்த சச்சினுக்கு அடுத்த சதத்தை அடிக்க ஒருவருஷமாகிவிட்டது.


உலகக் கோப்பைக்கு பிறகு இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் சச்சின் சதமடிக்க முடியவில்லை. ஒவ்வொரு ஆட்டமும் சச்சின் சதம் அடிப்பார் என ரசிகர்களுக்கிடையே நாளுக்குநாள் எதிர்பார்ப்பு அதிகமானது.

இந்நிலையில் ஒட்டுமொத்த இந்தியாவையும் தனது இந்த சாதனைமூலம் பெருமையடையச் செய்துள்ளார். கிரிக்கெட் கடவுள் என்று அவரது ரசிகர்களால் அன்போடு அழைக்கப்படும் சச்சின், சாதனைகள் மேலும் தொடர கிரிக்கெட் அபிமானிகள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

மற்ற அணிகளுடன் சச்சின் டெண்டுல்கர் சதமடித்த விவரம்: (டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டி உட்பட)

அவுஸ்திரேலியா 20, இங்கிலாந்து 09, நியூசிலாந்து 09, மேற்கிந்தியத்தீவுகள் 07, இலங்கை 17, தென்னாபிரிக்க 12, பாகிஸ்தான் 7, பங்களாதேஷ் 06, சிம்பாவே 08, கென்னியா 04, நபீபியா 01 மொத்தம் 100 சதம்.

அதுமட்டுமன்றி பங்களா தேஷுக்கு எதிராக ஒருநாள் போட்டியில் சச்சின் இதுவரை சதமடித்ததே இல்லை. ஆனால் நேற்றைய சதத்தின் மூலம் அந்த குறையையும் பூர்த்தி செய்தார். மேலும் 4 முறை உலக சம்பியனான அவுஸ்திரேலியாவிடம் அதிக சதம் (20 சதம்) அடித்த ஒரேவீரர் சச்சின்தான். டெஸ்ட் போட்டி விளையாட தகுதிபெற்ற எல்லா நாடுகளுடனும் சச்சின் சதம் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# வங்கப் புலிகளின் பாய்ச்சலில் சாய்ந்தது இந்தியா



ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 4 ஆவதுபோட்டியில்இந்தியஅணியைபங்களாதேஷ் அணி 5 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

ஆசிய கிண்ண கிரிக்கெட்டின் நேற்றைய 4 ஆவது லீக் ஆட்டத்தில் இந்தியா - பங்களா தேஷ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தேர்ந்தெடுத்தது.

இதையடுத்து இந்திய அணியின் கௌதம் காம்பீரும், சச்சின் டெண்டுல்கரும் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினர்.

காம்பீர் (11) ஏமாற்றமான ஆரம்பம் தந்தார். பின் சச்சின், விராட் ஹோலி ஜோடி பங்களாதேஷ் அணயின் பந்துவீச்சை எளிதாக சமாளித்தது.

விராட் ஹோலி, தனது 21 ஆவது அரைச் சதம் அடித்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக 148 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், விராட் ஹோலி (66) அப்துர் ரசாக்கின் சுழலில் வீழ்ந்தார்.

மறுமுனையில் பெரிதும் எதிர்பார்க்கப் பட்ட சச்சின், தனது 100-வது சதத்தை எட்டி வரலாறு படைத்தார்.

ஏற்கனவே டெஸ்ட் அரங்கில் 51 சதம் அடித்து இருந்த சச்சின், ஒருநாள் அரங்கில் தனது 49 ஆவது சதத்தை எட்டியதன் மூலம், இந்தச் சாதனையை ஏற்படுத்தினார்.

இவர் 114 ஓட்டங்களை எடுத்தார். ரெய்னா 51, ரோகித் சர்மா 4 ஓட்டங்களை எடுத்தனர். இந்திய அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 289 ஓட்டங்களை எடுத்தது.

தோனி (21), ஜடேஜா (4) ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 49.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

பங்களாதேஷ் அணி தனது முதல் விக்கெட்டை 15 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இழந்தது. நஸிமுதீன் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

எனினும் ஏனைய முன்வரிசை வீரர்கள் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். தமீம் இக்பால் 70 ஓட்டங்களைப் பெற்றார்.

ஜஹுரூள் இஸ்லாம் 53 ஓட்டங்களைப் பெற்றார். சகீப் அல் ஹசன் 31 பந்துகளில் 2 சிக்ஸர், 5 பவுண்டரிகள் உட்பட 49 ஓட்டங்களைப் பெற்று அணியைப் பலப்படுத்தினார்.

அவர் 4 ஆவது விக்கெட்டாக ஆட்டமிழந்த போது பங்களாதேஷ் அணி 41.5 ஓவர்களில் 224 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆனால் பங்களாதேஷின் வெற்றியை உறுதிப்படுத்தும் விதமாக வாண வேடிக்கைகளை நிகழ்த்தினார் அணித்தலைவர் முஷ்பிகுர் ரஹீம்.

கடைசி 3 ஓவர்களில் பங்களாதேஷ் அணிக்கு 33 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இர்பான் பதான் வீசிய 48 ஆவது ஓவரின் 2 ஆவது மற்றும் 3 ஆவது பந்துகளில் முஸ்பிகுர் ரஹீம் அடித்த இரு சிக்ஸர்கள் போட்டியை பங்களாதேஷ் பக்கம் திருப்பியது.

பிரவீன் குமார் வீசிய 49 ஆவது ஓவரின் முதல் இரு பந்துகளில் பவுண்டரி ஒன்றையும், சிக்ஸர் ஒன்றையும் முஷ்பிகுர் ரஹீம் அடித்த போது பங்களாதேஷின் வெற்றி தவிர்க்க முடியாததாகியது.

அந்த ஓவரின் 5 ஆவது பந்தில் நஸீர் ஹுசைன் 54 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். எனினும் ரஹீமும், மஹ்மதுல்லாவும் பங்களாதேஷின் வெற்றியை உறுதிப்படுத்தினர்

முஸ்பிகுர் ரஹீம் 25 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் உட்பட ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களைப் பெற்றார். மஹ்மதுல்லா 2 பந்துகளில் ஆட்டமழக்காமல் 4 ஓட்டங்களைப் பெற்றார்.

இவ்வெற்றியின் மூலம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவதற்கான எதிர்பார்ப்பை பங்களாதேஷ் அணி தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இத் தொடரில் நாளை ஞாயிறன்று பாகிஸ்தான் - இந்திய அணிகள் மோதவுள்ளன. 20 ஆம் திகதி நடைபெறவுள்ள போட்டியில் இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதவுள்ளன.

இறுதிப் போட்டிக்கு தெரிவாகுவதற்கு, இலங்கையுடனான போட்டியில் பங்களாதேஷ் பெறும் புள்ளிகளைவிட பாகிஸ்தானுடனான போட்டியில் அதிக புள்ளிகளை பெற வேண்டிய நிர்ப்பந்தத்தில் இந்திய அணி உள்ளது.

# சென் ஜோன்ஸ் - மத்திய கல்லூரி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று

வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் மூன்று நாட்கள் கொண்ட துடுப்பாட்டப்போட்டி நிறைவுற்ற நிலையில் 50 ஓவர்கள் கொண்ட ஒருநாள்போட்டி இன்று யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

2003ஆம் ஆண்டு ஆரம்பமான 50 ஓவர்கள்கொண்ட துடுப்பாட்ட போட்டியில் இதுவரை யாழ்.சென் ஜோன்ஸ் அணி 5 போட்டிகளிலும் மத்திய கல்லூரி 4 போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

கடந்த வருடம் நடைபெற்ற போட்டியில் விதூசன் தலைமையிலான யாழ்.சென் ஜோன்ஸ் அணி பாரிய வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

வர்ண உடையுடன் வெள்ளைப்பந்தில் சர்வதேச போட்டிகளுக்கு நிகராகவே கடந்த ஆண்டு ஒருநாள்போட்டி நடத்தப்பட்டது. அதேபோல் இந்த ஆண்டும் இவ்வாறே கோலகலமாக நடத்தப்பட இருக்கிறது.

இந்த வருடம் இரு பாடசாலைகளிலும் பல அனுபவம் வாய்ந்த வீரர்களும் கடும் பயிற்சியின் மத்தியில் போட்டியில் கலந்து கொள்வதனால் இம் முறை போட்டி விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

# காஸ்ட்டன் மரதன் போட்டியில் வவுனியா மாவட்டம் சம்பியன்

காஸ்ட்டன் மரதன் ஓட்டப்போட்டி-2012 கடந்த வாரம் துரையப்பா விளையாட்டரங்கில் நடந்தது.

தேசிய விளையாட்டு விழாவை முன்னிட்டு மாகாண ரீதியில் நடத்தப்பட்ட 33 கிலோமீற்றர் மரதன் ஓட்டபோட்டியில்,

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மேற்படி போட்டிக்கு காஸ்ட்டன், சிஎஸ்என் ஸ்போர்ட்ஸ் சனல் அனுசரணை வழங்கியிருந்தது.

இம்மரதன் ஓட்டப்போட்டியில் வட மாகாணத்தைச் சேர்ந்த 5 மாவட்ட வீர வீராங்கனைகளும் பங்குபற்றியிருந்தனர்.

இதில் 33 கிலோமீற்றர் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.நவநீதனும், முல்லைத் தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தேவராஜன் மற்றும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஞானேஸ்வரன் முறையே 2-ம்,3-ம் இடங்களையும் பெற்றனர்.

இதேபோல் 33 கிலோமீற்றர் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.சாலினியும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஜே.மரியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். கேமா முறையே 2-ம், 3-ம் இடங்களையும் பெற்றனர்.

இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில், 28 புள்ளிகளைப் பெற்று வவுனியா மாவட்டம் முதலிடத்தையும், யாழ்.மாவட்டம் 18 புள்ளிகளைப் பெற்றும் 2-ம் இடத்தையும் பெற்றன.

பெண்கள் பிரிவில் 07 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்கள் இணைச் சம்பியனாகின.

முதலிடத்தை பெற்றவருக்கு ரூபாய் ஒரு இலட்சமும் இரண்டாம் இடத்தை பெற்றவருக்கு ரூபாய் 50 ஆயிரமும், மூன்றாம் இடத்தை பெற்றவருக்கு 25 ஆயிரம் ரூபாயும் அடுத்து 10ஆம் இடங்களுக்குள் வந்தவர்களுக்கு பெறுமதியான பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

# பிரபாகரன் உயிருடன் பிடிபடவில்லை...

வத்தினரால் வழங்கப்பட்ட அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொண்ட இராணு வத் தளபதி அங்கு உரையாற்றும் போதே மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய இரா ணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய,

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை யில் இலங்கை அரசாங்கத்துக்கும் இராணு வத்துக்கும் எதிராக முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் பொய்யானவை. இவை இலங் கைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போலிப் பிரசாரங்களாகும்.

இலங்கைக்கு எதிராக தயாரிக்கப்பட்டுள்ள சனல் 4 இன் புதிய வீடியோ காட்சியானது உலகத்தை முட்டாளாக்கும் வகையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் இராணுவத்தினரால் முன் னெடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கை கள் குறித்து ஜனாதிபதியினால் நியமிக்கப் பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் அறி க்கை வெளிப்படுத்தியுள்ளது.

அதில் எமது படையினர் இராணுவ நட வடிக்கையின்போது எவ்வித மனித உரிமை மீறல்களையும் மேற்கொள்ளவில்லை என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை உரிமை மீறல்கள் இடம்பெற்றிருந்தால் அவை குறித்து விசேட ஆய்வொன்று நடத்தப்படும் என்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இதுவொரு சிறிய நாடு. இவ்வாறான தொரு நாடு யுத்தமொன்றை வெகுவிரைவில் முடிபுக்கு கொண்டுவந்ததையிட்டு வெளி நாடுகள் பொறாமைப்படுகின்றன.

காரணம் அந்நாடுகளில் ஆயுதங்கள், பணம் உள்ளிட்ட எல்லா வசதிகளும் இருந் தும் இன்னமும் யுத்தம் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

அதனாலேயே எமது நாட்டுக்கு எப்படியா வது அழுத்தத்தை பிரயோகித்து நாம் பெற் றுக் கொண்ட வெற்றியை அகௌரவத்துக்கு உட்படுத்த வெளிநாடுகள் முயற்சிக்கின்றன.

இதேபோன்று இராணுவத்தினரின் ஒழு க்கம் தொடர்பில் நாம் அவதானமாக இருக்க வேண்டும்.

எமது இராணுவத்தின் மீது எவ்வாறெனி னும் தாக்குதலொன்றை நடத்தவே சர்வ தேசம் காத்துக் கொண்டிருக்கிறது. இந்நிலை யில் எமது படையினர் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும்.

சனல் 4 நிறுவனம் புதிதாக வெளியிட் டுள்ள வீடியோ காட்சியில், கடந்த வருடம் அந் நிறுவனத்தினரால் வெளியிடப்பட்ட வீடியோ காட்சியில் உள்ளடக்கப்பட்ட விடயங்களே மீண்டும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சனல்4 இன் முதலாவது வீடியோ காட்சி யில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பொய்யானவை என இலங்கை அரசாங்கத் தினால் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையிலும், அந்நிறுவனம் புதிய வீடியோ என்றொரு மற் றொரு வீடியோவினை வெளியிட்டு உலகை முட்டாளாக்கப்பார்க்கின்றது என்று இராணு வத் தளபதி மேலும் கூறினார். (எ-11)

---

# ரணில்...

விடுதியில் வரவேற்றார்.

ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ்ப்பா ணத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதுடன் மக்கள் சந்திப்புகளிலும் ஈடு படவுள்ளார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஏற்பாட்டில் இன்று காலை சாவகச்சேரி, நெல்லியடி, பருத்தித் துறை ஆகிய பகுதிகளில் மக்களை சந்திக்கவுள்ள ரணில் விக்கிரமசிங்க, பிற் பகல் வல்வெட்டித்துறைக்கும் விஜயம் செய்வார்.

செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு மதியம் செல்லும் ரணில் தலைமையிலான குழுவி னர் விசேட பூசை வழிபாடுகளிலும் ஈடுபடுவர்.

இதனையடுத்து நீர்வேலி மாதர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள கூட்டத்திலும் இவர் பங்கேற்பார்.

சுன்னாகம், வலிகாமம் வடக்கு மற்றும் மாதகல், மூளாய், அராலி ஆகிய பகுதிகளில் இடம்பெறும் கூட்டங்களிலும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற் கவுள்ளார் என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (எ-11)

---

# யுத்தத்திற்கு...

என்பதில் வெளிநாட்டுச் சக்திகளிடம் இருந்து கற்றுக் கொள்வதற்கு எதுவும் இல்லை.

அனைத்து இலங்கையர்களும் அவர் கள் வடக்குத் தெற்கு மேற்கு எந்தப் பகுதி களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஜெனி வாவில் ஏற்படுத்தப்பட்டதைப் போன்ற சூழ் நிலைக்கு எதிராக எழவேண்டும்.

நாட்டைப் பாதுகாப்பதற்கு மக்களுடன் கிளர்ந்தெழ வேண்டியது எதிர்க் கட்சிகளின் கடமையாகும்.

எதிர்க் கட்சிகளும் அனைத்து இலங்கை யர்களும் அவர்களின் இனம், சாதி, மதம், அரசியல் என்பவற்றை மறந்துவிட்டு இத் தரு ணத்தில் இணைந்து ஒரே மக்களாக இப்பிரச் சினையை எதிர்கொள்ள வேண்டும்.

நாம் அனைவரும் இலங்கை மாதாவின் பிள்ளைகள் என்ற வகையில் எமது பிரச்சி னைகளை நாம் அனைவரும் ஒன்றிணை ந்து தீர்த்துக் கொள்ள வேண்டும்.

அப்போதுதான் சமாதானத்தின் பலன் களை இலங்கையின் அனைத்துப் பாகங் களிலும் உள்ள மக்கள் அனுபவிக்க முடியும் எனவும் ஜனாதிபதி கூறினார். (எ-11)


FWC

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்**

**ஆண்டுப் பொதுக் கூட்டத் தீர்மானங்கள்**

நடைபெறவிருக்கும், தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு தீர்மானங்களை முன்மொழிந்து அனுப்ப விரும்புபவர்கள் அவ ற்றை 31.03.2012ஆம் நாள் சனிக்கிழமைக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

எம்.எம்.அல்போன்ஸ், செயலாளர்,
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்,
சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

தலைவர் செயலாளர்
தொண்டைமானாறுவெளிக்கள நிலையம்.

(7729)


---

# சந்தேக ...

இதேவேளை நீதிபதியின் வேண்டுகோ ளுக்கு இணங்க ஊர்காவற்றுறை பொலிஸ் தடவியல் நிபுணர்கள் தங்கள் வாக்கு மூலத் தை நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

பாலியல் மற்றும் கொலைச் சந்தேக நபர் சார்பாக சட்டத்தரணிகள் ஆஜராகாத காரணத் தால் சந்தேக நபரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீத வான் ஆர்.வி.மகேந்திரராஜா உத்தரவிட்டார்.

**பெண்கள் எதிர்ப்பு**

இந்நிலையில் நேற்று நீதிமன்றிற்கு சந்தேக நபர் கொண்டு வரப்பட்டபோது வட க்கு கிழக்கு பெண்கள் அமைப்பின் ஏற்பாட் டில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பெண்ணினத்தை மதிக்காத காமுகனு க்கு பிணையா?,

பண்பற்றவனின் விடுதலையை எதிர்த்து பாசமிகு தாய்மை உள்ளங்கள் நடத்தும் போராட்டம் இது.,

13 வயது சிறுமியின் உயிருக்கு 12 நாள் தடுப்பு காவல் பெறுமதியா?,

காமுகனின் விடுதலையை எதிர்ப்போம்.

பச்சிளங் குழந்தைகளின் உயிர்களுக்கு பாதுகாப்புத்தான் எங்கே?

வேண்டாம் வேண்டாம் இரக்கமற்றவனு க்கு விடுதலை வேண்டாம் என இந்த ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைகளில் பதாகை களை தாங்கி நின்றனர்.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் என சுமார் 75 இற்கும் மேற்பட்ட பெண்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6,11)

---

# சனல் 4...

ஜெனிவா மனித உரிமைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் வலுப் பெற வேண்டும் என்ற திட்டத்திலேயே இது வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கைப் படைவீரர்கள் பரிசுத்தமா னவர்கள் எந்தவித போர்க்குற்ற நடவடிக்கை களிலும் ஈடுபடவில்லை. மாறாக விடுதலைப் புலிகளே போர்க்குற்ற நடவடிக்கையில் ஈடுபட் டதாக தனது ஆதங்கத்தை வெளியிட்டுள் ளார். மூன்று தசாப்த காலமாக தமிழீழ விடுதலைப் புலிகள் பாரியளவில் உரிமை மீறல்களை மேற்கொண்டுள்ளதாகவும் அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்ப தாகவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட் டுள்ளது.

சர்வதேச ரீதியில் மனித உரிமைகள் மீறப் பட்டிருந்தால் அது தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருக்க முடியும்.

ஆனால் சனல் 4 ஊடகமானது இலங் கைக்கு எதிராக செயற்படும் நோக்கில் போலி யான தகவல்களை ஆதாரமின்றி பரப்பி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (எ-11)

---

# திடீர்...

பெறவில்லை.

பருவகாலச் சீட்டுக்களை நம்பி பயண ங்களை மேற்கொண்டவர்கள் வீட்டிற்கு திரு ம்புவதற்கு திண்டாடவேண்டிய நிலை காண ப்பட்டது.

மாணவர்கள் கால்நடையாக வீடுகளுக் குச் சென்றனர் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

ஒவ்வொரு மாதமும் 8 ஆம் திகதிக்கு முன்பு முதல் மாதத்திற்குரிய கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் எனவும் ஊதியத்தினை அதிகரிக்க வேண்டும் எனவும் கோரிக்கை களை முன்வைத்து இந்த பணிப்புறக்கணி ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச பேருந்துகள் சேவையில் ஈடுபடாத தனால் யாழ்.மாவட்டத்தில் உள்ள பஸ் தரிப் பிடங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டதோடு தனியார் பேருந்துகளில் பயணிகள் முண்டி யடித்தபடி பயணத்தை மேற்கொண்டனர்.

சில தனியார் பஸ்கள் பயணிகளை ஏற் றாமல் சென்றதையும் காணக்கூடியதாக இரு ந்தது. (எ-6)

---

# லண்டன்...

பிரச்சினைகள் மற்றும் அவர்களின் நலன் கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் பிரித்தானியா வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளு மாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

லண்டனின் மேயராக தெரிவு செய்யப்பட்ட இவர் 2000 ஆம் ஆண்டில் இருந்து 2008 ஆம் ஆண்டு வரை பதவி வகித்திருந்தார். அத்துடன், 1987 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை தொழிற்கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினராகவும் இவர் கடமை ஆற்றி இருந்தார்.

இந்நிலையில், இவ்வாண்டு நடைபெற வுள்ள லண்டன் மேயருக்கான தேர்தலில் இவர் தொழிற்கட்சியின் சார்பில் போட்டியிட வுள்ளார். (எ-11)

---

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா பொன்னம்பலம்



நவிண்டிலைச் சேர்ந்த அன்னம்மா பொன்னம்பலம் அவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை (16.03.2012) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் இளைப்பாறிய கணக்காளர் காலஞ் சென்ற R.V.D.B. சங்கரப்பிள்ளை பொன்னம் பலம் அவர்களின் அன்பு மனைவியும், சரோஜினிதேவி (இளைப்பாறிய ஆசிரியை), பத்மலோஜினி (ஆசிரியை), கலாரஞ்சினி(ஜேர்மனி), சத்திய சிலன்(அவுஸ்திரேலியா), நளாயினி (N.W.S.D.B), காலஞ்சென்ற குணசிலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இரங்கநாதன், காலஞ்சென்ற லிங்கநாதன், சுதர்சன், செல்வவதனி, டுலிப் ஆகியோரின் அன்பு மாமியாரும், ராகவன், ரத்னாதேவி, மோகனப்பிரியன், குமரன், கஜனன், கிரிதரப்பிரியன், தைவினி, சிவானி, ஹரேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் வலம்புரியின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (17.03.2012) பிற்பகல் அன்னாரில் இல்லத்தில் நடைபெறும்.

சந்தை வீதி, நவிண்டில்,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

(7731)


# மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
கன்னா
0776766499

(7700)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.